# இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை



சிந்தனை வட்டம்

கலைமகள் ஹிதாயா ரிஸ்வி
மஸீதா புன்னியாமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிந்தனை வட்டத்தின்

# 100 வது

# வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிந்தனை வட்டம்
இல 14 உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை. 20802
ஸ்ரீலங்கா.

Tel : 0094 - 8 - 497246
: 0094 - 8 - 493746
: 0094 - 78 - 680645
: 0094 - 70 - 800480

Fax : 0094 - 8 - 497246
E mail: chinthanai _ vatt @ hot mail . com
9 to 9 com @ slt net. lk


**நாளைய சந்ததியின் இன்றைய சக்தி.**

சிந்தனை வட்டத்தின்

**100 வது வெளியீடு**

இரண்டு பாகங்களை உள்ளடக்கியது.

1 வது பாகம்

சிந்தனை வட்டம்
கடந்து வந்த பாதச்சுவடுகள்.

# சிந்தனை வட்டமும் நானும்...

புன்னியாமீன்

2 வது பாகம்

# இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை.

(கவிதைத் தொகுதி)

கலைமகள் ஹிதாயா ரிஸ்வி
மஸீதா புன்னியாமீன்.

சிந்தனை வட்டம்.,

**நாளைய சந்ததியின் இன்றைய சக்தி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை.
(கவிதைத்தொகுதி)

இணை நூலாசிரியர்கள்: கலைமகள் ஹிதாயா றிஸ்வி
677, அஹமட் வீதி,
சாய்ந்தமருது - 14 (கி.மா.)
ஸ்ரீலங்கா
Tel : 0094 - 67 - 22134

மஸீதா புன்னியாமீன்
14, உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை.20802
Tel : 0094 - 8 - 493746

முதலாம் பதிப்பு : 2000 April
பதிப்புரிமை : சிந்தனை வட்டம்.
வெளியீடு : சிந்தனை வட்டம்.

அச்சுப்பதிப்பு : **C.G.M. Express Print Shop**
127, Madawala Rd, Katugastota.
SriLanka.
Tel : 0094 - 8 - 497399
0094 - 8 - 497398

கணனிப்பதிப்பு : **Miss M.N.Z. Munawwara.**
Udatalawinna Communication,
14, Udatalawinna Madige
Udatalawinna
Tel : 0094 - 70 - 800480

புத்தக அமைப்பு : **N. L. S. Salahudeen**
Udatalawinna Communication,
14, Udatalawinna Madige,
Udatalawinna
Tel : 0094 - 70 - 800480

100/=


மத்திய மாகாண சபையின்
விவசாய, கமநலசேவை, உணவு, கூட்டுறவு,
மீன்பிடி (நன்நீர்), இளைஞர் விவகார,
முஸ்லிம்கல்வி,
முஸ்லிம் கலாசார விவகார அமைச்சர்.

## அல்ஹாஜ் M.T.M. அமீன் அவர்கள்

### அன்புடன் வழங்கிய ஆசிச் செய்தி

கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் கலைமகள் ஹிதாயா றிஸ்வியும், தென்னிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் மஸீதா புன்னியாமீனும் இணைந்து எழுதியுள்ள 'இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை' எனும் கவிதைத் தொகுதியை மத்திய இலங்கையைச் சேர்ந்த " சிந்தனை வட்டம்" தனது நூறாவது புத்தகமாக வெளியிடுவதையிட்டு மனமகிழ்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தமிழ்மொழி மூலமான பாட உசாத்துணை நூல்களை வெளியிடக்கூடிய முஸ்லிம்களின் வெளியீட்டு அமைப்புகள் விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சிலவே இருக்கின்றன.

அதிலும் நூறு புத்தகங்களை தொடர்ச்சியாக வெளியிட்டுள்ள முதல் வெளியீட்டு அமைப்பாக இலங்கையிலே சிந்தனைவட்டம் திகழ்வதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

சிந்தனைவட்டம் தனியொரு நபர் முயற்சி.

இந்த அடிப்படையில் பலதரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியிலும் நூறு புத்தகங்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ள கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த உடத்தலவின்னை மடிகேயைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜனாப் பீ. எம். புன்னியாமீன் அவர்களுக்கு என் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

சிந்தனை வட்டத்தின் பணி மேலும் வளரவேண்டும்.

பாட உசாத்துணைப் புத்தகங்களை மாத்திரம் வெளியிடாமல் நாடளாவிய ரீதியில் வாழும் இலக்கியவாதிகளின் இலக்கியப்புத்தகங்களையும் வெளியிட சிந்தனை வட்டம் இனி வரும் காலங்களில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன். இரட்டைத் தாயின் ஒற்றைக்குழந்தையை பிரசவித்த இலங்கையிலுள்ள குறிப்பிடத்தக்க முஸ்லிம் பெண் கவிஞர்களான திருமதி கலைமகள் ஹிதாயா றிஸ்வி அவர்களுக்கும், திருமதி மஸீதா புன்னியாமீன் அவர்களுக்கும்,

என் நல்லாசிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

**எம். டீ. எம். அமீன்**
மத்திய மாகாண சபையின்
விவசாய, கமநலசேவை அமைச்சு.
த.பெ. இல 65
பேராதனை.



ஆலோசனைகள் மட்டும்
ஒரு மனிதனின்
இலட்சியத்தை நிறைவேற்ற
ஒத்துழைப்பதில்லை.

ஆக்கபூர்வமான நெறிப்படுத்தல்கள்
அர்த்தபுஷ்டியான செயற்பாடுகள்
இவையே,
ஒரு மனிதனின்
இலக்கை அடையச் செய்யும்
அத்திவாரங்கள்!
- இந்த அடிப்படையில் -
மனித நேயமிக்க ஒரு மாமனிதன்
பூபாலசிங்கம் புத்தகநிலைய உரிமையாள

**பூ ஸ்ரீதரசிங் அவர்கள்**

சிந்தனை வட்டத்திற்கு
நீட்டிய
நேசக் கரங்களுக்கு
இந் நூறாவது நூல்
அன்புக்

**காணிக்கை!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வட்டத்தின்

100 வது வெளியீடு

1 வது பாகம்.

# சிந்தனைவட்டம் கடந்துவந்த பாதச்சுவடுகள்

ஒரே பார்வையில்

சிந்தனை வட்ட வெளியீடுகள்.

100

# சிந்தனை வட்டமும் நானும்...



ஒரே பார்வையில்.....

## சிந்தனை வட்ட வெளியீடுகள்.

# 100

ஆரம்பம் —1988—

01. பிரித்தானியாவின் அரசியல் முறை G.C.E (A/L), G.A.Q.
முதலாம் பதிப்பு: 1988 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

02. பிரித்தானியாவின் அரசியல் முறை G.C.E (A/L), G.A.Q.
இரண்டாம் பதிப்பு: 1989 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

03. கரு (சிறுகதைத்தொகுதி)
முதலாம் பதிப்பு: 1989 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

04. பிரித்தானியாவின் அரசியல் முறை G.C.E (A/L), G.A.Q.
மூன்றாம் பதிப்பு: 1989 December
நூலாசிரியர்: புன்னியாமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 அந்த நிலை (சிறுகதைத்தொகுதி)
முதலாம் பதிப்பு: 1990 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

06 நெருடல்கள் (சிறுகதைத்தொகுதி)
முதலாம் பதிப்பு: 1990 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

07 புதிய மொட்டுகள். (கவிதைத்தொகுதி)
முதலாம் பதிப்பு: 1990 June
தொகுப்பாசிரியர்: புன்னியாமீன்

08 அரும்புகள் (கவிதைத்தொகுதி)
முதலாம் பதிப்பு: 1990 November
தொகுப்பாசிரியர்: புன்னியாமீன்

09. இஸ்லாமியக் கதைகள்.
முதலாம் பதிப்பு: 1990 December
நூலாசிரியர்: மௌலவி J. மீராமொஹிடீன்.

10. இலங்கையின் உள்ளூராட்சிமுறை, கட்சிமுறை, வெளிநாட்டுக் கொள்கைகள்.
**G.C.E.(A/L), G.A.Q, B.A.**
முதலாம் பதிப்பு: 1991 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

11. பிரித்தானியாவின் அரசியல் முறை **G.C.E.(A/L), G.A.Q**
நான்காம் பதிப்பு: 1991 March
நூலாசிரியர்: புன்னியாமீன்

12. விஞ்ஞான விளக்கம் - 100
முதலாம் பதிப்பு: 1991 September
நூலாசிரியர்: J.M. யாசீன் B.Sc. (Cey)

13. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
முதலாம் பதிப்பு: 1991 October
நூலாசிரியர்: புன்னியாமீன்

14. வரலாறு குறிப்புகள் (ஆண்டு-11)
முதலாம் பதிப்பு: 1991 November
நூலாசிரியர்: புன்னியாமீன்



15. வரலாறு (ஆண்டு-9) வினா - விடைத் தொகுதி.
முதலாம் பதிப்பு: 1991 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

16. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
முதலாம் பதிப்பு: 1991 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

17. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
இரண்டாம் பதிப்பு: 1991 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

18. அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
முதலாம் பதிப்பு: 1992 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

19. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
மூன்றாம் பதிப்பு: 1992 march
நூலாசிரியர்: புன்னியாமீன்

20. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
இரண்டாம் பதிப்பு: 1992 may
நூலாசிரியர்: புன்னியாமீன்

21. இலங்கையின் உள்ளூராட்சி முறை, கட்சிமுறை, வெளிநாட்டுக் கொள்கைகள். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
இரண்டாம் பதிப்பு: 1992 August
நூலாசிரியர்: புன்னியாமீன்

22. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
மூன்றாம் பதிப்பு: 1992 August
நூலாசிரியர்: புன்னியாமீன்

23. அரசறிவியல் கோட்பாடுகள். **G.A.Q & B.A.**
முதலாம் பதிப்பு: 1992 November
நூலாசிரியர்: புன்னியாமீன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பிரித்தானியாவின் அரசியல் முறை **G.C.E.(A/L), G.A.Q.**
ஐந்தாம் பதிப்பு: 1992 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

25. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
நான்காம் பதிப்பு: 1992 December
நூலாசிரியர்: புன்னியாமீன்

26. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
நான்காம் பதிப்பு: 1992 December
நூலாசிரியர்: புன்னியாமீன்

27. வரலாறு (ஆண்டு-9) வினா - விடைத் தொகுதி.
இரண்டாம் பதிப்பு: 1993 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

28. அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
இரண்டாம் பதிப்பு: 1993 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

29. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
ஐந்தாம் பதிப்பு: 1993 March
நூலாசிரியர்: புன்னியாமீன்

30. வரலாறு (ஆண்டு-9) வினா - விடைத் தொகுதி.
மூன்றாம் பதிப்பு: 1993 May
நூலாசிரியர்: புன்னியாமீன்

31. இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி.
**G.C.E (A/L), G.A.Q, B.A.**
இரண்டாம் பதிப்பு: 1993 may
நூலாசிரியர்: புன்னியாமீன்

32. தெரிவு செய்யப்பட்ட நாடுகள்
**G.C.E.(A/L), G.A.Q.**
முதலாம் பதிப்பு: 1993 July
நூலாசிரியர்: புன்னியாமீன்



33. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
ஆறாம் பதிப்பு: 1993 July
நூலாசிரியர்: புன்னியாமீன்

34. இலங்கையின் உள்ளூராட்சி முறை, கட்சிமுறை வெளிநாட்டுக் கொள்கை. **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
மூன்றாம் பதிப்பு: 1993 September
நூலாசிரியர்: புன்னியாமீன்

35. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
ஐந்தாம் பதிப்பு: 1993 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

36. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
ஏழாம் பதிப்பு: 1994 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

37. அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
மூன்றாம் பதிப்பு: 1994 march
நூலாசிரியர்: புன்னியாமீன்

38. இலங்கையின் உள்ளூராட்சி முறை, கட்சிமுறை வெளிநாட்டுக் கொள்கை **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
நான்காம் பதிப்பு: 1994 march
நூலாசிரியர்: புன்னியாமீன்

39. இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி.
**G.C.E.(A/L), G.A.Q, B.A.**
இரண்டாம் பதிப்பு: 1994 April
நூலாசிரியர்: புன்னியாமீன்

40. தெரிவு செய்யப்பட்ட நாடுகள்
**G.C.E.(A/L), G.A.Q.**
இரண்டாம் பதிப்பு: 1994 May
நூலாசிரியர்: புன்னியாமீன்

41. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
ஆறாம் பதிப்பு: 1994 May
நூலாசிரியர்: புன்னியாமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
நான்காம் பதிப்பு: 1994 May
நூலாசிரியர்: புன்னியாமீன்

43. வரலாறு (ஆண்டு-9) வினா - விடைத் தொகுதி.
நான்காம் பதிப்பு: 1994 May
நூலாசிரியர்: புன்னியாமீன்

44. வரலாறு (ஆண்டு-9) வினா - விடைத் தொகுதி.
ஐந்தாம் பதிப்பு: 1994 December
நூலாசிரியர்: புன்னியாமீன்

45. தெரிவு செய்யப்பட்ட நாடுகள். **G.C.E.(A/L), G.A.Q.**
மூன்றாம் பதிப்பு: 1995 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

46. இலங்கையின் உள்ளூராட்சி முறை, கட்சிமுறை வெளிநாட்டுக் கொள்கை. **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஐந்தாம் பதிப்பு: 1995 March
நூலாசிரியர்: புன்னியாமீன்

47. இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி. **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
மூன்றாம் பதிப்பு: 1995 March
நூலாசிரியர்: புன்னியாமீன்

48. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
ஏழாம் பதிப்பு: 1995 April
நூலாசிரியர்: புன்னியாமீன்

49. இலங்கையின் அரசியல் (நிகழ்கால நிகழ்வுகள்)
முதலாம் பதிப்பு: 1995 May
நூலாசிரியர்: புன்னியாமீன்

50. பிரித்தானியாவின் அரசியல் முறை **G.C.E.(A/L), G.A.Q.**
ஆறாம் பதிப்பு: 1995 July
நூலாசிரியர்: புன்னியாமீன்



51. இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி. **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
நான்காம் பதிப்பு: 1995 July
நூலாசிரியர்: புன்னியாமீன்

52. அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஐந்தாம் பதிப்பு: 1995 September
நூலாசிரியர்: புன்னியாமீன்

53. சித்திரக் கலை
முதலாம் பதிப்பு: 1996 - 01 - 01
நூலாசிரியர்: அமீனா சராப்தீன்

54. இலங்கையின் உள்ளூராட்சி முறை, கட்சிமுறை, வெளிநாட்டுக் கொள்கை. **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஆறாம் பதிப்பு: 1996 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

55. இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஐந்தாம் பதிப்பு: 1996 March
நூலாசிரியர்: புன்னியாமீன்

56. **Wills Warld Cup' 96** -நினைவுகள்
முதலாம் பதிப்பு: 1996 March
நூலாசிரியர்: புன்னியாமீன்

57. அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஆறாம் பதிப்பு: 1996 May
நூலாசிரியர்: புன்னியாமீன்

58. தெரிவு செய்யப்பட்ட நாடுகள் **G.C.E.(A/L), G.A.Q.**
நான்காம் பதிப்பு: 1996 June
நூலாசிரியர்: புன்னியாமீன்

59 பாலங்கள் (கவிதைத்தொகுதி)
முதலாம் பதிப்பு: 1996 July
தொகுப்பாசிரியர்: புன்னியாமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. தெரிவு செய்யப்பட்ட நாடுகள்.
**G.C.E.(A/L), G.A.Q.**
ஐந்தாம் பதிப்பு: 1996 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

61. பிரித்தானியாவின் அரசாங்க முறை
**G.C.E.(A/L), G.A.Q.**
ஏழாம் பதிப்பு: 1997 February
நூலாசிரியர்: புன்னியாமீன

62. அரசறிவியல் கோட்பாடுகளும்.
எண்ணக்கருக்களும். **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஏழாம் பதிப்பு: 1997 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

63. இலங்கையின் உள்ளூராட்சிமுறை, கட்சிமுறை,
வெளிநாட்டுக்கொள்கை. **G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஏழாம் பதிப்பு: 1997 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

64. அறிமுகத் தமிழ் (புலமைப்பரிசில் பாடநூல் வரிசை -1)
முதலாம் பதிப்பு: 1997 February
நூலாசிரியர்கள்: புன்னியாமீன/ மஸீதா புன்னியாமீன்

65. இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி
**G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஆறாம் பதிப்பு: 1997 March
நூலாசிரியர்: புன்னியாமீன

66. புலமைப்பரிசில் மாதிரி வினா - விடைகள் (தொகுதி 1)
முதலாம் பதிப்பு: 1997 April
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

67. புலமைப்பரிசில் மாதிரி வினா - விடைகள் (தொகுதி 2)
முதலாம் பதிப்பு: 1997 April
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்



68. அறிமுகக் கணிதம் (புலமைப்பரிசில் பாடநூல் வரிசை-2)
முதலாம் பதிப்பு: 1997 May
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

69. சுற்றாடலும், பொதுஅறிவும்.
முதலாம் பதிப்பு: 1997 June
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

70. அறிமுக விஞ்ஞானமும், ஆங்கிலமும்.
முதலாம் பதிப்பு: 1997 June
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

71. தெரிவு செய்யப்பட்ட நாடுகள்.
**G.C.E.(A/L), G.A.Q.**
ஆறாம் பதிப்பு: 1997 October
நூலாசிரியர்: புன்னியாமீன்

72. அரசறிவியல் பல்தேர்வு- மாதிரி வினா- விடை
**G. C.E.(A/L).**
முதலாம் பதிப்பு: 1997 November
நூலாசிரியர்: புன்னியாமீன்

73. இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி.
**G.C.E.(A/L), G.A.Q, B.A.**
ஏழாம் பதிப்பு: 1998 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

74. அரசறிவியல் - பரீட்சை மாதிரி வினா - விடை
**G.C.E.(A/L).**
முதலாம் பதிப்பு: 1998 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

75. அறிமுகத் தமிழ் (புலமைப்பரிசில் பாடநூல் வரிசை -1)
இரண்டாம் பதிப்பு: 1998 January
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

76. அறிமுகக் கணிதம்(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை -2)
இரண்டாம் பதிப்பு: 1998 January
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. வரலாறு (ஆண்டு-10) வினா - விடைத் தொகுதி.
எட்டாம் பதிப்பு: 1998 February
நூலாசிரியர்: புன்னியாமீன்

78. அறிமுக விஞ்ஞானம் (தொகுதி - 1)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை -3)
முதலாம் பதிப்பு: 1998 February
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

79. அறிமுக விஞ்ஞானம் (தொகுதி - 2)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 4)
முதலாம் பதிப்பு: 1998 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

80. நாமும், சுற்றாடலும். (தொகுதி -1)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 5)
முதலாம் பதிப்பு: 1998 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

81. நாமும், சுற்றாடலும். (தொகுதி -2)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 6)
முதலாம் பதிப்பு: 1998 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன/ மஸீதா புன்னியாமீன்

82. புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி -1)
முதலாம் பதிப்பு: 1998 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

83. புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி -2)
முதலாம் பதிப்பு: 1998 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

84. புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி -3)
முதலாம் பதிப்பு: 1998 March
நூலாசிரியர்கன்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

85. அறிமுக ஆங்கிலம்
முதலாம் பதிப்பு: 1998 May
நூலாசிரியர்: திருமதி எம். ஐ. எஸ். மும்தாஜ்.



86. புலமைப்பரிசில் முன்னோடி வழிகாட்டி.
முதலாம் பதிப்பு: 1998 November
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

87. அறிமுக விஞ்ஞானம் (தொகுதி -1)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 3)
இரண்டாம் பதிப்பு: 1999 January
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

88. வரலாறு (ஆண்டு-9) வினா - விடைத் தொகுதி.
ஆறாம் பதிப்பு: 1999 January
நூலாசிரியர்: புன்னியாமீன

89. வரலாறு (ஆண்டு-11) வினா - விடைத் தொகுதி.
எட்டாம் பதிப்பு: 1999 January
நூலாசிரியர்: புன்னியாமீன்

90. புலமைப்பரிசில் வழிகாட்டிக் களஞ்சியம்.
முதலாம் பதிப்பு: 1999 January
நூலாக்கம்: வத்தேகெதர முஸ்லிம் வித்தியாலய ஆசிரியர் குழாம்

91. அறிமுக விஞ்ஞானம், (தொகுதி - 2)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 4)
இரண்டாம் பதிப்பு: 1999 February
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

92. நாமும், சுற்றாடலும். (தொகுதி -1)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 5)
இரண்டாம் பதிப்பு: 1999 February
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

93. அறிமுக ஆங்கிலம்
இரண்டாம் பதிப்பு: 1999 February
நூலாசிரியை: திருமதி எம். ஐ. எஸ். மும்தாஜ்

94. புலமைப்பரிசில் அறிவு ஒளி (தொகுதி -1)
முதலாம் பதிப்பு: 1999 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. 21-ம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்
முதலாம் பதிப்பு: 2000 January - 01
நூலாசிரியர்: புன்னியாமீன்

96. புலமைப்பரிசில் - ஆரம்ப வழிகாட்டி
முதலாம் பதிப்பு: 2000 January
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

97. புலமைப்பரிசில் - அறிவு ஒளி (தொகுதி -2)
முதலாம் பதிப்பு: 2000 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

98. புலமைப்பரிசில் - அறிவு ஒளி (தொகுதி -3)
முதலாம் பதிப்பு: 2000 March
நூலாசிரியர்கள்: புன்னியாமீன்/ மஸீதா புன்னியாமீன்

99. தேன்மலர்கள் (கவிதைத் தொகுதி)
முதலாம் பதிப்பு: 2000 April
நூலாசிரியை: கலைமகள் ஹிதாயா றிஸ்வி

100வது வெளியீடு

இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை
(கவிதைத் தொகுதி)
முதலாம் பதிப்பு: 2000 April
நூலாசிரியர்கள்: கலைமகள் ஹிதாயாறிஸ்வி/ மஸீதா புன்னியாமீன்



# சிந்தனை வட்டம்

100வது வெளியீடு



# சிந்தனை வட்டமும் நானும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் திறந்து உங்களுடன் .......

புன்னியாமீன்

இப்போது ......
உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருப்பது
சிந்தனை வட்டத்தின் நூறாவது பிரசவம்.
அப்பாடா......
சிந்தனை வட்டம்
நூறு புத்தகங்களைப் பிரசவித்து விட்டதா?
எனக்குள் நானே -
தலை நிமிர்ந்து பார்க்கின்றேன்.
ஆமாம்.......
புகழனைத்தும் இறைவனுக்கே!
வெற்றிகளைக்கண்டு மமதை கொள்ளாமலும்,
தோல்விகளைக் கண்டு முகம் புதைத்து விடாமலும்,
நெஞ்சில் உரமும்,
விடாமுயற்சியும் இருப்பின்........
தடைகளைத் தாண்டுவது கடினமானதல்ல ......

எமது ஸ்ரீலங்காவிலே வாழக்கூடிய சிறுபான்மை இனத்திலும் ஒரு சிறுபான்மை இனத்தவனால் - அதுவும் தமிழ் மொழி மூலமாக நூறுபுத்தகங்கள் வெளியிடப்பட்டுவிட்டதை நான் 'சாதனை' என்று கருதவுமில்லை. 'சாதனை'யாக ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

ஆனால்......
இப்பயணத்தில் நான் எதிர்கொண்ட தடைகளை சவால்களாக ஏற்றுக் கொண்டதன் பயனாக எனக்குக் கிடைத்த ஒரு சிறு வெற்றியாகவே இதைக் கருதுகிறேன்.

ஆம்......
கடந்து வந்த பாதையை மீட்டும் போது...
அந்த அனுபவங்களை
முதற்தடவையாக உங்களுடன் பகிர்ந்து கொள்ள
ஆசைப்பட்டேன்.
அதன் விளைவே .......
என் பேனாவை சுயேச்சையாக நகரவிட்டுக் கொண்டிருக்கிறேன்.
காரணம்.....



வாசகர்களாகிய நீங்கள் எனக்கு நேசக்கரம் நீட்டாதிருந்தால்.....
இந்த சவால்களை
நிச்சயமாக என்னால் எதிர்கொண்டிருக்க முடியாது.

எனவே மீண்டும்
முதலில் இறைவனுக்கும்
- அடுத்ததாக என் அன்பிற்குரிய வாசக நெஞ்சங்களான உங்களுக்கும் என்றென்றும் நான் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளதோடு....
-என் உள்ளத்து வெள்ளத்தை
உங்களுக்காக மடை திறக்கவைக்கின்றேன்.

இறைவன் ஒவ்வொரு மனிதனிடத்தேயும் இயல்பாகவே ஏதோ ஒரு திறனை அருளாகக் கொடுத்துள்ளான். அத்திறனை இனங்கண்டு - அத்திறனை வளர்த்துக் கொள்வதனூடாக அம்மனிதன் தன்னைத் தானே முன்னேற்றிக் கொள்ள முடியும் எனப் பெரியவர்கள் கூறக் கேட்டுள்ளேன்.

மானுடப் பிறவிகளுக்கு இறைவனின் அருளாகக் கொடுக்கப்பட்டுள்ள அத்திறனை பலர் இனங்கண்டு கொள்ளத் தவறி விடுகின்றனர்.

அதனை இனங்கண்டு அபிவிருத்தியடையச் செய்து கொள்ள முனைவது ஒரு சிலரே...

அன்று -
பாடசாலையில் கற்கும் போதே என்னிடம் மறைந்து காணப்பட்ட எழுத்துத் திறனை எனக்கு இனங்காட்டித்தந்து வழிகாட்டியதுடன், என்னை நெறிப்படுத்திய என்றும் என் மதிப்புக்குரிய ஆசான்களாகிய
- ஜனாப் ஐ. ஹாஜிதீன்.
- திருவாளர் யோ. பெனடிக்ற் பாலன்
இருவரையும் இவ்விடத்தில் நினைவு கூற வேண்டியது என் கடமையாகும்.

அவர்கள் காட்டிய வழிகாட்டலுடன் என் எழுத்துக்களைச் செப்பனிடவைத்த சகோதரர்களான
- ஏ. அப்துல் றஹ்மான் (கோட்டகொடை ஏ. றஹ்மான்)
- ஏ. ஆர். ஏ. பரீல்.
- எம். ஸீ. எம். அன்வர்.
- யூ. எல் எம். பஸீர்
- யூ. எல் . ஜவ்பர்.
- ஏ. எம். வைஸ்
- ஏ . எம். ஜிப்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களையும்
நான் நினைவு கூராவிடின்
நன்றி கொன்றவனாகி விடுவேன்.

என்னுடைய ஆக்கமொன்று பத்திரிகையில் பிரசுரமாகிவிட்டால் கொழும்பிலிருந்து ஊர் வரும் சந்தர்ப்பங்களின் என்னை வீடு தேடிவந்து வாழ்த்துத் தெரிவிக்கும் சகோதரர் யூ. எல். எம். நவ்பர் அவர்களையும் நான் மறந்து விடவில்லை.

இவ்வாறானதோர் பின்னணியில்...
பள்ளிப் பருவத்திலிருந்தே
- தொகுப்புக்கள்.
- விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள்.
- படித்துச் சுவைத்தவைகள்.
- விகடத் துணுக்குகள்.
- உருவகக் கதைகள்.
- மினிக் கதைகள்.
- சிறுகதைகள் .......

என
என் எழுத்துத்திறனை நான் வளர்த்து வந்த நேரத்தில்
என்னுடைய பத்தொன்பதாவது வயதில் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரமான பதின்நான்கு கதைகளைத் தொகுத்து -
கட்டுகஸ்தோட்டை இஸ்லாமிய சேமநலச் சங்கம்
'தேவைகள்' எனும் பெயரில் என் முதல் கதைப்புத்தகத்தை வெளியிட்டமை என்வாழ்வில் ஒரு மைற்கல்லாகும்.

இதே காலத்தில் -
உடத்தலவின்னை மடிகே வை. எம். ஏ. இயக்கம். தனது மும்மாசிகையான 'விடிவு' சஞ்சிகைக்கு என்னைப் பிரதம ஆசிரியராக்கியதுடன் -

கட்டுகஸ்தோட்டையை மையமாக் கொண்டு இயங்கிய ஸ்ரீலங்கா இஸ்லாமிய காங்கிரஸ் தனது மாதமிரு இதழான "அல்ஹிலாலுக்கு" என்னைப் பிரதம ஆசிரியராக்கியது.

இவை என் இலக்கியப்பயணத்தில் புதிய உத்வேகத்தைத் தந்தன.

இக்கட்டத்தில் தான்
படைப்பிலக்கியத்துடன் மாத்திரம் என்னைச் சுருக்கிக் கொள்ளாமல்



- அரசியல் கட்டுரைகள்,
- சமூக, பொருளாதாரக் கட்டுரைகள்,
- உலக அரசியல் விவகாரங்கள்
- விளையாட்டுக் கட்டுரைகள்
- பாடக் கட்டுரைகள்.....

என்ற வகையில் என் எழுத்தில் பல புதிய பரிணாமங்களைப் பரீட்சித்துப்பார்க்கவும், அவற்றின் வெளிப்பாடுகளை என்னால் இனங்கண்டு கொள்ளவும் முடியுமானதாக இருந்தன.

அதே நேரத்தில் -
படைப்பிலக்கியத்தில் குறிப்பாக சிறுகதைத்துறையில் என் ஈடுபாடு அதிகரித்தது. இலங்கையில் மாத்திரமல்லாது கலைமகள், தீபம், கணையாழி, தாமரை, தீ போன்ற இந்திய இலக்கியச் சஞ்சிகைகளிலும் என் சிறுகதைகள் பிரசுரமாகின.

ஆனால் - "தேவைகள்" சிறுகதைத்தொகுதிக்குப் பின்னர் சுமார் ஆறுவருடகாலத்துக்குள் என்னால் எதுவிதமான புத்தகங்களையும் வெளியிட முடியவில்லை.

காரணம் -
அதற்கான வசதியும், வாய்ப்பும் என்னைக் கிட்டவில்லை.
பொருளாதார வசதியும் என்னிடம் இருக்கவில்லை.

இந்நிலையில்

கொழும்பு - மாளிகாவத்தையில் இயங்கிய ஸ்ரீலங்கா வை. எம். எம். ஏ. தேசிய பேரவையுடன் எனக்கிருந்த உறவின் காரணமாக அப்போது இயக்க உதவிச்செயலாளராக இருந்த ஜனாப் அஸ்ரப் ஹாசீம் அவர்களின் மூலம் கல்ஹின்னைத் தமிழ் மன்றத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், உரிமையாளருமான அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்களுடனான தொடர்பு ஏற்பட்டது.

அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்கள் தனது தமிழ்மன்றத்தின் மூலமாக 1986 மார்ச் மாதத்தில் என்னுடைய இரண்டாவது சிறுகதைத்தொகுதியான 'நிழலின் அருமை'யை வெளியிட்டார். 1987ம் ஆண்டில் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் எழுத்தாளர் சங்கமும் இணைந்து நடத்திய போட்டியொன்றில் 1982 - 1987 இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம் எழுத்தாளர்களினால் வெளியிடப்பட்ட சிறந்த சிறுகதைத் தொகுதிகளுள் ஒன்றாக இது தேர்ந்தெடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்களின் மௌனமான இலக்கியச் சேவையில் கவரப்பட்ட நான் அன்னாரின் தமிழ் இலக்கியப் பணியினையும், இலக்கியத்துக்காக அன்னார் ஆற்றிய சேவைகளையும் சுமார் ஆறுமாத காலம் மதிப்பீடு செய்து இலக்கிய உலா, இலக்கிய விருந்து ஆகிய இரண்டு நூல்களை எழுதினேன்.இவை முறையே இந்தியாவில் மில்லத் பப்ளிஷர்ஸ் வெளியீடாகவும், தமிழ்மன்ற வெளியீடாகவும் வெளிவந்ததுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், இலக்கியவாதிகள் மத்தியில் அமோக வரவேற்பையும் பெற்றன.

இதற்குப் பகரமாக 1983- ம் ஆண்டில் என்னால் எழுதப்பட்டு அச்சுருப்பெறாமலிருந்த " அடிவானத்து ஒளிர்வுகள்" எனும் நாவலை இந்தியாவில் அல் - பாஸி பப்ளிகேஷன் வெளியீடாக வெளியிட்டுத்தர அல்ஹாஜ் எஸ் எம். ஹனிபா அவர்கள் ஏற்பாடு செய்துதந்தார். அத்துடன் மேற்படி மூன்று நூல்களும் ஒரே நாளில் கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

ஆனால் .....

பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலும், மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி, சில சந்தர்ப்பங்களில் அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்களைச் சந்திக்க கடன்பட்டுக் கூட கொழும்பு சென்று விபரங்களைத்திரட்டி அவர் பற்றிய இரண்டு புத்தகங்களை எழுதிய போதிலும் கூட, புரிந்துணர்வு அற்ற நிலையில் ஏற்பட்ட மனக்கசப்புக்களின் விளைவாக அவருடனான உறவினை முறித்துக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டது. என் சிரமத்திற்குப் பரிசாக மூன்று புத்தகங்களிலும் ஐம்பது பிரதிகள் வீதம் தரப்பட்டன.

பணத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பணம் ஜெயித்து விட்டது. என்னைப் பற்றிய தப்பான கருத்துக்கள் அவர் மூலம் சில இலக்கியச் சகோதரர்களிடம் கூறப்பட்ட போதிலும் கூட - என் எழுத்திற்காக அவர் கைப்பட எழுத்தால் எனக்கு சூட்டிய தங்கமாலை இன்னும் என்னிடம் பத்திரமாக உள்ளது.

எப்படியாயினும் நான் செய்நன்றி மறக்கவில்லை. இப்போதும் நன்றி மனக்கண்ணில் அவரைப் பார்க்கின்றேன். அன்று அவரின் முயற்சியினால் வெளியிட உதவி செய்யப்பட்ட அந்த மூன்று நூல்களும் என் இலக்கியப் பயணத்தில் பெரியதொரு பாய்ச்சலைத் தந்ததை என்றும் நான் மறவேன்.



இவ்வாறாக 1987 -ம் ஆண்டாகும் போது என்னுடைய ஐந்து இலக்கியப் புத்தகங்கள் வெளிவந்துவிட்டன. அவை பொருளாதாரத் துறையில் எனக்கு ஆதாரத்தைத் தரவில்லை. ஆதங்கத்தையே தந்தன.

1980 இன் பிறகான ஆண்டுகள் என் வாழ்வில் தனிப்பட்ட திருப்பங்கள் பல ஏற்பட்ட காலகட்டமாகக் குறிப்பிடலாம்.

- 1983 ம் ஆண்டில் எனக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது.
- 1984 ம் ஆண்டில் நான் திருமணமானேன்.
- 1985 ம் ஆண்டில் ஒரு குழந்தைக்குத் தந்தையானேன்.

குடும்பப் பொறுப்புக்கள் கூடக்கூட பொருளாதாரசுமைகளும் சூழ்ந்து கொண்டன.ஆசிரியர் தொழிலில் கிடைத்த வருமானம் மாத்திரம் எனக்குப் போதவில்லை. என் பொருளாதாரத்தை விருத்தி செய்து கொள்ள வேறு முயற்சிகளில் ஈடுபடவும் எனக்குத் தெரியவில்லை.

இந்நிலையில்...
என் நண்பர்களான எம். ஸீ. எம். அன்வர், ஏ. ஆர். எம். உவைஸ், ஏ. எம். வைஸ் போன்றவர்களின் ஆலோசனை வழிகாட்டலின் பேரில் தனியார் வகுப்புக்களை நடத்தும் ஒரு டியுட்டரி ஆசிரியனாக என் மேலதிக வருமானத்துக்கான வழியினைக்கண்டு கொண்டேன்.

ஆரம்பத்தில் சகோதரர் ஏ. கலீல் அவர்களினால் கடுகஸ்தோட்டையில் நடத்தப்பட்டு வந்த K.U.E. கல்வி நிலையத்தில் இணைந்தேன். தொடர்ந்து கண்டி ரஜபிஹில்ல மாவத்தை வை.எம்.எம்.ஏ. கட்டிடத்தில் ஏ. எம். வைஸ் அவர்களினால் நடத்தப்பட்டு வந்த வகுப்பிலும், மாத்தளை ஆலோக்க வித்தியாலயத்திலும் வகுப்புக்களை நடத்த ஆரம்பித்தேன். பட்டப்படிப்பில் 'அரசறிவியல் ' எனக்கு விருப்பமான பாடமாகக்காணப்பட்டமையினால் பீ. ஏ. பட்டதாரி வகுப்பு மாணவர்களுக்கும், ஜீ. ஏ. கியு முதற்கலை மாணித் தேர்வு மாணவர்களுக்கும் அரசறிவியல் கற்பிக்கும் டியுட்டரி ஆசிரியரானேன்.

1986 ம் ஆண்டு இறுதிக்கட்டத்தில் கண்டி E.P.I கல்வி நிலையத்தில் இணைந்து மேற்படி வகுப்புகளுக்குப் புறம்பாக க. பொ. த (உ/த) அரசறிவியல் வகுப்புக்களையும் நடத்த ஆரம்பித்தேன்.

E.P.I. இல் நான் இணைந்தது -
என் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்ததெனலாம். E.P.I பணிப்பாளர் நாயகம் திருவாளர் W.L. ராஜரட்ணம் அவர்கள் என்னுடைய வகுப்புக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்துசக்தியாகவும், உற்ற நண்பனாகவும் இருந்து அன்று என்னை நெறிப்படுத்தியிருக்கா விட்டால்.....

ஒரு ஆசிரியன் என்ற வகையில் என்னால், பல நூற்றுக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கக் கூடிய பாக்கியம் கிடைத்திருக்காது.

"சிந்தனை வட்டம்" எனும் இந்த நூல் வெளியீட்டு அமைப்பும் உருவாக்கம் பெற்றிருக்க மாட்டாது.

எனவே திருவாளர் W.L. ராஜரட்ணம் அவர்கள் என் மனதில் என்றும் இமயமாகத் திகழ்பவர். இதை நான் வார்த்தைக்காகக் கூறவில்லை. என் மனதிள் அடித்தளத்தில் பதிந்த பதிவையே கூறுகின்றேன்.

என் மனப்பதிவுகளை எழுதிக்கொண்டிருக்கும் இவ்வேளையில்...... E.P.I. கல்வி நிலையத்திற்கும் எனக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒரு மனக்கசப்பையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

வாழ்வதற்குப் பணம் தேவை
ஆனால் பணம் தான் வாழ்க்கையல்ல....
"மனிதாபிமானம்" என்பது மானுடத்தின் உயர்வான பண்பாக அமைதல் வேண்டும். மிலேனியத்தில் புதிய சிந்தனைகள், புதிய உத்வேகங்கள், புதியபோக்குகள் வளர வேண்டும் என்று வாயாரப் பிரார்த்திக்கின்றோம்.
ஆனால்...
*பணத்துக்காக மனிதன் எதையும் செய்வான்* என்ற கருத்து நவயுகத்திலும் வலுப்பெற்றுவிட்ட இந்நேரத்தில் மனிதாபிமான உணர்வுகளை அனைத்து மானுடப்பிறவிகளிடமும் எதிர்பார்ப்பது ஒரு முட்டாள்தனமான காரியம் - என்பதை இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் மீண்டும் வலியுறுத்திக்கொண்டேன்.

என் முன்னேற்றத்தில் பொறாமை உணர்வடைந்தோ -
அல்லது -
இனவாதப் போக்குகளின் வெளிப்பாடோ
என்னவோ......
நேற்று முளைத்த சில காளான்கள் எனக்குச் சவால் விடுகின்றன.
- காட்டாற்று வெள்ளத்தில் அடிபட்ட போது
நாணலாகத் தலை நிமிர்ந்த எனக்கு
இந்தக் காளான்களின் சவால்....???

இதை சவாலாக நினைப்பதே எனக்கு வெட்கம்.



ஏனெனில் - நான் மனிதாபிமானத்தை இழந்து விட விரும்பவில்லை. கடந்த ஒரு தசாப்தகாலத்துக்குள் என் பொருளாதாரத்தில் ஒரு ஸ்திரத்தன்மையை உருவாக்கிக்கொள்ள காரணமாக இருந்த E.P.I. கல்விநிலையப் பணிப்பாளர் திருவாளர் W.L. ராஜரட்டணம் மனித நேயமிக்கவர். இவர் என் உற்ற நண்பன் மட்டுமல்ல - உடன்பிறவாச் சகோதரனும் கூட.

இடையில் முளைத்த இனவாதப் புல்லுருவிகளின் சதியால் நான் ராஜரட்ணம் அவர்களின் உறவை முறித்துக்கொள்ளத் தயாராக இல்லை.எனவே தான் கௌரவமாகவும், படிப்படியாகவும் E.P.I. கல்விநிலையத்துடன் நான் கொண்டிருந்த நெருக்கமான உறவிலிருந்து விடைபெற முடிவெடுத்தான்.
இது எனக்குத் தோல்வியல்ல....
செய் நன்றிக்கு நான் வழங்கிய கௌரவமாகவே கருதுகின்றேன்.

ஆம் -
1987 ம் ஆண்டில் -
E.P.I. கல்விநிலையத்தில் நான் முதற்கலைத் தேர்வு மாணவர்களுக்கு " அரசறிவியல்" கற்பித்துக் கொடுத்துக்கொண்டிருந்தேன். 'அரசறிவியல்' பகுதி -II வினாப்பத்திரத்தில் பிரித்தானிய 'அரசாங்க முறையை இலங்கை அரசாங்க முறையுடன் தொடர்புபடுத்திப் பல வினாக்கள் இடம் பெறும். ஆனால் பிரித்தானிய அரசாங்கமுறை தொடர்பாகக் கற்க, தமிழ்மொழி மூலம் மாணவர்களுக்குப் புத்தகங்கள் எதுவும் இருக்கவில்லை. எனவே பிரித்தானிய தூதுவராலயத்துடன் தொடர்பு கொண்டு தேவையான நூல்கள், அறிக்கைகள்,தரவுகள் போன்றவற்றைப் பெற்று அவற்றின் துணையுடன் பிரித்தானியாவின் அரசாங்க முறை எனும் நூலை எழுதினேன். இலக்கியத்துக்குப் புறம்பாக நான் எழுதிய முதல் நூல் இது. ஆனாலும் அந்நூலை வெளியிட்டுக்கொள்ள என்னிடம் பணம் இருக்கவில்லை. எத்தனையோ வெளியீட்டு அமைப்புக்களுடன் தொடர்பு கொண்ட போதிலும் கூட எனக்கு வெற்றி கிடைக்கவில்லை.

என் மாணவர்களுக்கும் அப்புத்தகத்தின் தேவையிருந்தது.
இப்புத்தகத்தை வெளியிட்டால் விற்பனை செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் எனக்கிருந்தது. இறுதியாக இதை எப்படியும் வெளியிட வேண்டும் என்ற 'வெறி' என் மனதில் ஆழப்பதிந்திருந்தது.

வெளியீடுவதாயின் எப்படி வெளியிடுவது?
ஒரு வெளியிட்டுப் பணியகத்தின் பெயரைப் போட்டால் தான் சிறப்பாக இருக்கும். விற்பனைக்கும் இலகுவாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனைவியுடன் சேர்ந்து பலமாகச் சிந்தித்தேன்.
எம் இருவரினதும் சிந்தனையில் உதித்தது தான்
"சிந்தனை வட்டம்"
வெளியீட்டகத்தின் பெயர் கிடைத்து விட்டது!
- வெளியிடுவதற்குப் பணம்....?

திரு W.L. ராஜரட்ணத்திடம் கூறிய போது ஆயிரத்து இருநூறு ரூபாய் கடனாகத் தந்தார். சகோதரன் ஏ. எம். வைஸ் அவர்கள் அக்குறணை மாத்தளை வீதி இல 38 இல் அமைந்திருந்த டிலான் பிரிண்டர்ஸை (Dilan Printer) அறிமுகம் செய்து தந்தார். அச்சக உரிமையாளர் ஜனாப் அப்துல்பரீட் அவர்களிடம் கூறியபோது "ஸார் கையிலிருக்கிற காசைத் தந்துட்டு வேலையைத் தொடங்குங்க... விற்றபின் மீதிக் காசைத் தாங்க" என்று அவர் மனம் திறந்து கூறியதினாலேயே .... "பிரித்தானியாவின் அரசாங்க முறை" யை அச்சிடக்கொடுத்தேன். அந்த நல்லிதயத்தை இச்சந்தர்ப்பத்தில் என் நன்றி மனக்கண்ணில் நிறுத்துகின்றேன்.

இவ்வாறாகத்தான் 1988 ஜனவரி மாதத்தில் சிந்தனை வட்டத்தின் முதலாவது வெளியீடு வெளிவந்தது. அன்று நான் அதிகமான பிரதிகளை அச்சிடவில்லை. 400 பிரதிகளைதான் அச்சிட முடிந்தது. விற்பனையில் எனக்குப் பிரச்சினையிருக்க வில்லை. ஆனால் விற்பனைக்குப் புத்தகங்களைக் கொடுத்த சிலரிடமிருந்து விற்பனைப்பணம் வராததினால்.... அச்சகக் கடனை அடைக்க என் மனைவியின் தங்க நகையொன்றினை அடகு வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

அதனால் நான் சளைத்து விட வில்லை.
மனதைத் தளரவிட்டு விடவும் இல்லை.
மனதில் நான் கொண்ட உறுதியினால்....,

பிரித்தானியாவின் அரசாங்கமுறையின் இரண்டாம் பதிப்பை 1989 பெப்ரவரி மாதத்திலும், மூன்றாம் பதிப்பை 1989 நவம்பர் மாதத்திலும் முறையே 500, 750 பிரதிகள் வீதம் பதிப்பித்தேன்.

இவ்வாறாக சிந்தனை வட்டம் உருவாக்கம் பெற்ற பிற்பாடு ஒரு பரீட்சார்த்த முயற்சியாக ஒரு வருடத்தினுள் 6 இலக்கியப் புத்தகங்களை வெளியிட வேண்டும் என திடசங்கற்பம் பூண்டேன். ஒரு பிரபல இலக்கியவாதியால் எனக்கு விடுக்கப்பட்ட பகிரங்க சவாலை நான் ஏற்றுக்கொண்ட இந்த காலகட்டம் நாட்டில் மிகவும் நெருக்கடிமிக்கதொரு காலகட்டமாகும். ஒரு புறம் J.V.P. யினரின் வன்முறைகள், மறுபுறம் இராணுவத்தினரின் அடக்குமுறைகள்...... நாட்டில் அமைதியின்மை நிலவிக் கொண்டிருந்த 1989 நவம்பருக்கும் 1990 டிசம்பருக்கும் இடையில் நான் ஆறு இலக்கியப்புத்தகங்களை என் சிந்தனைவட்ட முத்திரையில் வெளியிட்டேன். கரு, நெருடல்கள், அந்தநிலை எனும் பெயரில் என்னுடைய மூன்று சிறுகதைத் தொகுதிகளையும், நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரக்கூடிய இளம் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து புதியமொட்டுக்கள், அரும்புகள் எனும் பெயரில் இரண்டு கவிதை நூல்களையும், முஸ்லிம் சமய கலாசார திணைக்கள உதவிப்பணிப்பாளர் அல்ஹாஜ் J. மீரா மொஹிடீன் அவர்களின் இஸ்லாமிய கதைகள் எனும் நூலையும் வெளியிட்டது என்னைப் பொறுத்தமட்டில்.... "எதுவும் முடியும்" என்ற நம்பிக்கையை மனத்தின் அடித்தளத்தில் பசுமரத்தாணி போல பதிய வைத்த ஒரு நிகழ்வாகும்.



மேற்படி ஆறு புத்தகங்களுள் நான்கு புத்தகங்களுக்கு சகோதரர் ஸ்ரீதர் பிச்சையப்பா அழகிய முகப்போவியங்களை வரைந்து தந்ததனையும் என்னால் மறக்க முடியாது.

சவாலை நான் நிறைவேற்றினாலும் இதற்காகப் பட்ட சிரமங்கள் எழுத்தில் வடித்திட முடியாதவை. அச்சுக்கோர்க்கும் எழுத்துக்களை என் நண்பன் ஜனாப் A.L.M. அஸ்ரப் அவர்களுடன் பங்கு சேர்த்து வாங்கி, மவுண்ட்லைன் பிரிண்டர்ஸ்' எனும் அச்சக அமைப்பினை வீட்டிலே ஏற்படுத்தினேன். வீட்டில் எழுத்துக்களை கோர்த்து அக்குறணை 7ம் கட்டையில் நிலான் அச்சகத்திலும், அக்குறணை 'சிடி' அச்சகத்திலும் அச்சிட்டு பின் அச்சிடப்பட்ட தாள்களை வீடுகொண்டு வந்து அவற்றை 'பைண்ட் பண்ணி மறுபடியும் கட்டுகாஸ்தோட்டைக்கு எடுத்துச்சென்று புத்தகத்தை 'கட்' பண்ணி .... இவ்வாறாக அன்று நான் பட்ட கஷ்டங்களை நினைத்துப்பார்க்கிறேன். இச்சந்தர்ப்பத்திற்கு எனக்கு உற்றதுணையாக இருந்த S.M.M. பவுஸர் அவர்களையும், நிலான் அச்சக உரிமையாளர் சகோதரர் நீலாப்தீன் அவர்களையும் என்னால் மறக்க முடியாது.

அதேநேரத்தில் என் மனைவியின் பங்களிப்பினையும் இவ்விடத்தில் நினைவு கூர்ந்தேயாகவேண்டும். ஆம் - நான் திருமணம் முடித்ததிலிருந்து இன்றுவரை என் இலக்கியப் பயணத்திலும் நூல்வெளியீட்டு நடவடிக்கைகளிலும் என்னோடு சம பங்கேற்றதினால், சில சந்தர்ப்பங்களில் என்னைவிட மிகைத்துப் பங்கேற்றதினால் தான் இன்று என்னால் இந்த நிலைக்கு வரமுடிந்தது. என்னுடைய வாழ்க்கைப் போராட்டத்தில் நான் பெற்ற வெற்றிகளை எனது வெற்றி என்று தனிப்பட்ட முறையில் நான் எப்போதும் உரிமை கொண்டாடமாட்டேன். ஏனென்றால் கணவன், மனைவி என்ற உறவில் எமது முயற்சிக்குக் கிடைத்த வெற்றி.
அது எமது வெற்றி.

மடுல்கலை க/ ஹ'லுகங்கை முஸ்லிம் வித்தியாலயத்தில் கற்பித்துக்கொண்டிருக்கும் வேளையில் அதிகாலை 5.45 மணி பஸ்வண்டியில் கடமைக்குச் சென்று சில நேரங்களில் வீடு வந்து சேரும்போது பி.ப. 5 மணி, 6 மணியும் ஆகி விடுவதுண்டு. அதன்பிற்பாடே வீட்டுவேலைகள், குழந்தையின் பணிகள், பாடசாலைக்கடமைகளை முடித்துவிட்டு என் இலக்கிய வெளியீட்டு நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைத்த நிகழ்வானது..... நிச்சயமாக ஒரு மீறிய சக்திதான்

இச்சந்தர்ப்பத்தில் என் நெஞ்சில் பதிந்த சில வடுக்களை மீட்டிப் பார்க்கின்றேன். 1987 டிசம்பரில் என் மனைவிக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்கவிருந்த சந்தர்ப்பத்தில், ஒரு காலத்தில் என் ஆசானாகவும், அப்போது கல்வி அதிகாரியாகவும் இருந்த ஒருவரின் உதவியைப் பெற்று எனது கிராமத்திற்கு அருகில் உள்ள க/ உகுரஸ்ஸபிட்டிய மீரா மத்திய கல்லூரிக்கு முதல்நியமனத்துக்கான ஏற்பாடுகளை செய்துவிட்டுவந்தேன். அதே தினத்தில் மாலைநேரத்தில் எனது உடத்தலவின்னை மடிகே கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் (?) கல்விக்காரியாலயத்துக்குச் சென்று எனக்கு தெல்தோட்டையில் உறவினர்கள் இருப்பதாகவும், இதனால் தெல்தோட்டையில் தங்கி நின்று என் மனைவியால் கடமை புரிய முடியுமென்றும் நியாயம் கற்பித்து என் மனைவிக்கு தெல்தோட்டை எனசல்கொல்ல முஸ்லிம் வித்தியாலயத்தையும் அப்பெரியவரின் (?) மகளுக்கு உகுரஸ்ஸபிட்டிய மீரா வித்தியாலயத்தையும் போட்டுக்கொண்டார். மறுநாள் கல்விக்காரியலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற போது சிவப்புப்பேனையால் வெட்டப்பட்ட அந்தப்பெயர்ப்பட்டியலைப் பார்த்தபின்பு கல்வி அதிகாரியிடம் வினவினேன் அவர்கூறிய மேற்படி சம்பவத்தால் என் தலை சுற்றியது.

முதல் நியமனத்தை எனசல்கொல்லை முஸ்லிம் வித்தியாலயத்தில் பொறுப்பேற்ற பின்பு நான் மனைவியின் இடமாற்றத்துக்காக பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. என் குடும்பநிலை, என் பொறுப்புக்கள், பிரச்சினைகளை நன்கு அறிந்த என் ஆசானான கல்வி அதிகாரி, மடவளை மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுத்தருவதாகவும், குறிப்பிட்ட தினத்தில் கல்விக்காரியாலயத்துக்கு வரும்படியும் என்னைக் கேட்டுக்கொண்டார்.

அத்தினத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் நான் கல்விக்காரியாலயத்துக்குச் சென்றேன். அந்நேரத்தில் கனவிலும் எதிர்பார்க்காத ஒரு பேரிடியைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஆம் அப்போதைய பாத்ததும்பரை பாராளுமன்ற உறுப்பினரும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான திரு வேரபிட்டிய அவர்களை எம்முரைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் (?) இருவர் கண்டிக் கல்விக்காரியாலயத்துக்கு அழைத்து வந்திருந்தனர்.

அதில் ஒருவருடைய மகளுக்கு மடுல்கலை ஹுலுகங்கை முஸ்லிம் வித்தியாலயத்துக்கு நியமனம் கிடைத்திருந்தது. ஹுலுகங்கையிலிருந்து தன் மகளை அண்மையிலுள்ள பாடசாலையொன்றிற்குப் போட்டுக் கொள்ள ஹுலுகங்கை முஸ்லிம் வித்தியாலயத்துக்குப் பதிலாக ஒருவரை வழங்க வேண்டியிருந்தது.

- இதற்கு என் மனைவியைத் தான் பலியாக்க வேண்டும்.

அப்போது கல்விப்பணிப்பாளர் முன்னிலையில் திரு வேரபிட்டிய அவர்கள் கதைத்த கதைகளும், எம்முரைச் சேர்ந்த அந்த இரண்டு அரசியல் பிரமுகர்களும் கதைத்த கதைகளும்..... இப்போது போல இன்னும் என் ஞாபகத்தில் உள்ளன.

- நான் அநாதரவாக்கப்பட்டேன்.
- என் நியாயங்கள் - அரசியல் பின்னணியில் யாருக்கும் ஏறவில்லை.
- எனக்காகப் பரிந்து பேசிய என் ஆசான் கல்விஅதிகாரிக்கும் மௌனமாக வேண்டிய சூழ்நிலை.

காரியாலயத்தில் இருந்து வெளியே வந்த போது அதில் ஒரு பிரமுகர்(?) தனது குடையால் என் முகத்தைத் தட்டி " உன் மனைவிக்கு ஹுலுகங்கைக்குப் போகச் சொல்லு.... இல்லாட்டி உன்ற மனைவியின் தொழிலையே இல்லாமாக்கி விடுவேன்....." என்று கூறிய அந்த வார்த்தைகள்......

- அரசியல் மமதையின் வெளிப்பாடான அந்த வார்த்தைகள்
- வட்டலாப்பக் கோப்பைகளை அரசியல்வாதிகளுக்குக் கொடுத்து பெற்றுக்கொள்ளும் போலி அதிகாரங்களினால் ஊரிலே தான்தான் பெரிய அரசியல் தலைவன் எனக்காட்டிக் கொண்டு சுயநலத்தைச் சாதித்துக் கொள்ள முயலும் அந்த அதிகார வார்த்தைகள்.....

இப்போதும் என் மனதில் எதிரொலிக்கின்றன.



நான் விருப்பம் கூறாவிட்டாலும் - என் மனைவி ஹுலுகங்கை முஸ்லிம் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அப்படியல்லாவிடின் என் இலக்கியப் பணிகளுக்கு இன்னும் அதிகமான பங்களிப்பினை என்னால் பெற்றிருக்க முடியும்.

இப்போது -

நான் மத்திய மாகாண சபையின் விவசாய, கமநலசேவை அமைச்சின் கீழ் முஸ்லிம் கல்வி, கலாசார அமைச்சுப் பிரிவில் கௌரவ அமைச்சர் அவர்களின் இணைப்பதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன். எனக்கு நியமனம் கிடைத்த சில தினங்களில் என் அன்பிற்குரிய நண்பனான ஜனாப் என். எம். அமீன் அவர்கள் (செய்தி ஆசிரியர் - தினமின, மற்றும் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர்) தொலைபேசி மூலம் என்னை வாழ்த்தி விட்டு கூறிய உபதேசத்தை இப்போது நினைத்துப் பார்க்கின்றேன் '' புன்னியாமீன்... இன்று ஓர் அதிகாரி என்ற நிலையில் நீங்கள் பஜ்ரோவில் போகலாம்... ஆனால் நாளை ஒரு சாதாரண மனிதன் என்ற அடிப்படையில் பஸ்வண்டியில் போகவேண்டி வரும் என்பதை மறந்து விட வேண்டாம்... ஏனென்றால் ....இதுதான் அரசியல் அதிகாரத்தின் நிலை..."

- என் வாழ்க்கையில் இது ஒரு தாரகமந்திரம்.
- இதை என்றும் நான் மறந்துவிட மாட்டேன்.

உண்மையிலே நான் தற்போது வகிக்கும் பதவியானது வட்டலாப்பக் கோப்பைகளைக் கொடுத்தோ, அல்லது 'காக்காய் பிடித்தோ அல்லது அடுத்தவனுக் குழி பறித்தோ எனக்குக் கிடைத்ததொன்றல்ல. என்னில் காணப்பட்ட ஏதோ ஒரு திறமையை இனங்கண்டு கொண்டு என்னைத் தேடி வந்த பதவி அது. எனவே நன்றியுடன் என்னுடைய கௌரவ அமைச்சர் அவர்களுக்கு என்றும் விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டியது எனது கடமை. இந்த இடத்தில் அப்பதவி என்னைத் தேடிவரக் காரணமாக இருந்த சகோதரன் எம். எச். நஸீம்தீன் அவர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். அதே நேரத்தில் இன்று அப்பதவி என்னை விட்டுச் சென்றாலும் நான் நிலைதளம்ப மாட்டேன். அடுத்தவனுக்குத் துரோகம் செய்யாத, துரோகம் செய்ய நினைக்காத எனக்கு என்றும் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்க முடியும். என்ற நம்பிக்கை எப்போதும் உண்டு.

எப்படியோ - சிந்தனைவட்டத்தின் மூலம் ஆறு இலக்கியப் புத்தகங்களை வெளியிட்ட பின்னர் நான் பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுக்கு உட்பட்டேன். தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் என் தனிப்பட்ட தேவைகளும் அதிகரிக்கலாயின. என் தந்தை நோய் வாய்ப்பட்டு விட்டார். வீடொன்றின் தேவை மிக மிக அத்தியவசியமாக எனக்கிருந்தது. நான் வசித்து வந்த வீட்டில் போதிய வசதிகள் இருக்கவில்லை. இடைக்கிடையே சுவர் இடிந்து விழத்தொடங்கியது. மழைகாலங்களில் வீட்டில் தங்கியிருக்க முடியாத அளவிற்கு ஒழுகியது.

- என் வாழ்க்கையை இயந்திரமாக்கினேன்.
- வாழ்க்கையே 'டியுஷன்' மயமாகியது.
- அக்குறணை, கண்டி கொழும்பு,..... இவ்வாறாக பாடசாலை நேரம் போக முழுமூச்சாக 'டியுஷன்' கொடுக்கலானேன். என்னுடைய உற்ற நண்பர்களான A.R.M. உவைஸ், A.M. ஜிப்ரி போன்றோர் இலக்கியப்புத்தகங்களை வெளியிட்டு நட்டமடைவதை விட பாடப்புத்தகங்களை வெளியிட்டால் அதிக இலாபத்தை உழைக்கலாம் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வந்தனர். இதற்கான பல உதவிகளையும் சகோதரர் A.M. ஜிப்ரி அவர்கள் செய்ததை என்னால் மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. சகோதரர் ஜிப்ரி அவர்கள் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக ஓர் உடன்பிறந்த சகோதரனைப் போல உந்துசக்தியாகத் திகழ்ந்தவர். நான் க. பொ. த பரீட்சையில் சித்தியடைந்து விட்டு தொழில் தேடி அலைந்த காலங்களில் அவர் எனக்காக மேற்கொண்ட முயற்சிகள்.... கொழும்பில் வாரக்கணக்காக அவருடைய 'அறை' யில் தங்கியிருந்த சந்தர்ப்பங்களில் மூன்று நேர சாப்பாட்டையும் தந்து என் செலவுக்காகவும், போக்குவரத்துக்காகவும் பணத்தையும் தந்து, மானசிக மட்டத்தில் நான் விழுந்து விடக்கூடாதென்பதற்காக அறிவுரைகளை அடிக்கடி உரிமையுடன் வழங்கி என் மனதில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், சமூக ரீதியான உணர்வுகளையும் விதைத்த சகோதரன் ஜிப்ரி அவர்களுக்கு என் இதயத்தில் உள்ள இடம் - என்றும் அழியாத ஒரு தனியிடமே.

எனவே சிந்தனைவட்டத்தின் மூலமாக இலக்கியப்புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், என் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள திடசங்கட்பம் பூண்டதினால் - பாடப்புத்தகங்களை மாத்திரம் வெளியிட வேண்டும் எனவும், பாடஉசாத்துணைப்புத்தகங்களை வெளியிடவே சிந்தனைவட்ட முத்திரையைப் பயன்படுத்த வேண்டும் எனவும் தீர்மானித்தேன்.

இக்காலகட்டத்தில் ஆண்டு 9, 10, 11,ம் வகுப்புகளுக்கு வரலாறும், சமூகக்கல்வியும் பாடத்தில் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் புதியபாடத்திற்கு தமிழ்மொழிமூலமாக பாடநூல்கள் விநியோகிக்கப்படவில்லை (விநியோகம் தாமதமடைந்தது) இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்ள எத்தனித்தேன். அப்போது கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் வரலாறும் சமூகக்கல்வியும் பாட ஆசிரிய ஆலோசகராக இருந்த சகோதரர் U.L.M. பஸீர் அவர்களின் ஆலோசனை வழிகாட்டலுடன் வரலாறு (ஆண்டு -11) வினா விடைத்தொகுதி யொன்றினையும், வரலாறு குறிப்புகள் (ஆண்டு -11) எனும் புத்தகத்தையும் எழுதிவெளியிட்டேன். அத்துடன் ஆண்டு 10, ஆண்டு 09 க்கான வரலாறு - வினா விடைத்தொகுதிகளையும் எழுதி வெளியிட்டேன். நான் எதிர்பார்த்ததை விட புத்தகத்துக்கான கேள்வி மிகமிக அதிகமாக இருந்தது. இதனால் தான் வரலாறு ஆண்டு -11 வினா விடைத்தொகுதியில் 8 பதிப்புக்களையும், வரலாறு ஆண்டு - 10 வினா விடைத் தொகுதியில் 8 பதிப்புக்களையும், வரலாறு ஆண்டு - 9 வினாவிடைத் தொகுதியில் 6 பதிப்புக்களையும் என்னால் சிந்தனைவட்ட முத்திரையுடன் வெளியிடமுடிந்தது.

1991 - ம் ஆண்டில் வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்துடன் இணைந்தவகையில் ஒரே நேரத்தில் ஏழு புத்தகங்களை வெளியிட்டதினால் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்பட்டேன். புதியபாடத்திட்டத்திற்கமைய ஆண்டு 10, 11 பாடப்பரப்பில் ஐரோப்பிய வரலாறு பாடஅலகுகளும் சேர்க்கப்பட்டிருந்தன. ஐரோப்பிய வரலாற்றினை (பாடப்பரப்புக்கு உட்பட்ட வகையில்) மாத்திரம் தனியாகத் தொகுத்து ஒரு புத்தகத்தை ளெியிட்டால் அதிக கேள்வி எழும் என்ற நம்பிக்கையில் அப்புத்தகத்தை எழுதிமுடித்தேன்.

எமது கிராமத்தில் இஸ்லாமிய நலன்புரி வங்கி அமைப்பொன்று செயற்பட்டு வந்தது எனவே இப்புத்தகத்தை வெளியிட இஸ்லாமிய வங்கியின் உதவியைக்



கோரினேன். புத்தக விற்பனையில் வரும் இலாபத்தில் 50 வீதத்தை வங்கிக்குத் தருவதாகவும் குறிப்பிட்டேன். இஸ்லாமிய வங்கியின் பணிப்பாளர் சபை மாதத்தில் ஒரு தடவைதான் கூடும். எனவே இந்த இடைக்காலத்தில் மூவரைக் கொண்ட கடன்சபையால் என் விண்ணப்பம் ஆலோசிக்கப்பட்டது அப்புத்தகத்தை அச்சிட நான் கோரிய பணத்தொகை வியாபாரக்கடன் அடிப்படையிலே எனக்குத் தரப்படும் என கடன் சபை அங்கத்தினர் ஒருவர் உத்தியோகபற்றற்ற முறையில் என்னிடம் தெரிவித்தார்.அப்புத்தகத்தை அச்சிட அவசரமாக வேண்டியிருந்தமையினால் வங்கியின் பணிப்பாளர் சபை கூடுவதற்கு முன்பாகவே - புத்தகத்தை அச்சகத்துக்குக் கொடுத்து 5000 பிரதிகள் வீதம் 24 பக்கங்கள் அச்சிட்டு முடித்தேன். ஆனால் வங்கியின் பணிப்பாளர் சபை கூடிய போது என் கடன் விண்ணப்பத்தை மறுத்தது. என்னால் மெல்லவும் முடியவில்லை. விழுங்கவும் முடியவில்லை. உடத்தலவின்னை மடிகே இஸ்லாமிய வங்கியில் நானும் ஓர் ஆரம்ப உறுப்பினர் - பணிப்பாளர் சபை உறுப்பினரும் கூட. எனவே வாக்குவாதப்பட்டு அக்கடன் தொகையைப் பெற்றுக் கொள்ள நான் விரும்பவில்லை. மௌனமானேன். வட்டியிலிருந்து பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு இஸ்லாமிய வங்கி அமைக்கப்பெற்ற போதிலும் கூட தனிப்பட்ட இரண்டு அங்கத்தவர்களுக்கு அங்கத்தவர் கடனை வழங்குவதற்காக என் வியாபாரக்கடனை மறுத்ததினால்.....நான் நம்பிக்கையின் அடிப்படையில் அச்சகத்தில் அச்சிடக்கொடுத்த 24 பக்கங்களுக்கும் உரிய நேரத்தில் பணத்தைக் கொடுத்துக் கொள்ள முடியாமல் போனதினால், என் மனைவியின் மாலையொன்றை அடகுவைத்து வட்டிக்குப் பணத்தைப் பெற்று கடனை அடைத்தது என் வாழ்க்கையில் மறக்கமுடியாத மற்றுமொரு நிகழ்வாகும்.

எப்படியோ... ஐரோப்பிய வரலாறு புத்தகம் (இன்றுவரை) வெளிவரவில்லை. அச்சிடப்பட்ட 24 பக்கங்களையும் கரையான் அரித்த நிலையில் அண்மையில் கடைக்கு நிறுத்துக் கொடுத்தேன். அன்று 'இஸ்லாமிய வங்கி, புத்தகம் அடித்தால் நட்டமேற்படும்' என அஞ்சியிருக்கலாம். ஆனால் அன்று அக்கடனுதவியை வழங்கியிருந்தால் சிந்தனைவட்டத்தினால் வெளியிடப்பட்ட அரைவாசிக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இஸ்லாமிய வங்கியின் பெயரிலே வெளியிடப்பட்டிருக்கும். இப்போது நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனென்றால் என் புத்தக வெளியீட்டில் வரும் இலாபம் 100 வீதமும் என்னைத் தான் வந்தடைகின்றது.

நான் கொழும்பு E.P.I. இல் 1992ம் ஆண்டு முதல் G.C.E. (A/L), G.A.Q. B.A. வகுப்புக்களை கொட்டஹேனைக் கிளையிலும், பம்பலப்பிட்டிய கிளையிலும் நடத்தலானேன்.. சுமார் ஆறு மாத காலத்துக்குள் மேற்படி வகுப்புக்களுக்கு அதிக மாணவர்கள் சமுகமளிக்கலாயினர். அக்காலத்தில் கொழும்பு E.P.I. இல் மாத்திரம் ஏழு, எட்டாயிரம் ரூபாய் எனக்கு மாத வருமானமாகக் கிடைத்தது. கொழும்பு E.P.I. யுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பின் பின்னர் சோதரர் W.L. ராஜரட்ணம் அவர்கள் அச்சீட்டுத்துறையில் நவீன வழிமுறைகளை எனக்கு இனங்காட்டித்தந்தார்.

அந்த நவீன வழிமுறைகளில் நான் காட்டிய ஆர்வம் தான் 1992ம் ஆண்டின் பிற்பாடு என் புத்தக வெளியீட்டைத் துரிதப்படுத்தியது எனலாம். ஆம், இக்கட்டத்தில்தான் கணனி மூலம் எழுத்துக்களை டைப்செட் பண்ணி, கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய ஒப்செட் அச்சகம், ஐக்கோ அச்சகம், யுனி ஆர்ட் அச்சகம், M.J.பிரிண்டர்ஸ் போன்றவற்றில் ஒப்செட் மூலமாக அச்சிட்டேன். கணனி டைப்செட் பணிகளுக்கு ஆரம்பத்தில் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய என் உற்ற நண்பர்களான மாளிகாவத்தையைச் சேர்ந்த அமுதாஸ், ஜீவா ஆகியோரை என்னால் என்றுமே மறக்க முடியாது. இரவு, பகல் பாராது விழித்திருந்து நான் எழுதிய ஆக்கங்களை (புத்தகங்களை) அவர்கள் 'டைப்செட்' பண்ணி ஆதரவு தந்தது இன்றும் என் மனக்கண்ணில் நிழலாடுகிறது. அமுதாஸ், ஜீவா இருவரினதும் அன்பும், ஆதரவும் இன்றுவரை எனக்குக் கிடைத்துக் கொண்டிருப்பது எம்மிடையிலான நட்பின் உயர்வெளிப்பாடென்றே கருதுகிறேன்.

ஒரு குழந்தையைப் பிரசவிப்பதற்கொப்பானது தான் ஒரு நூலை வெளியிடுவதென்று கூறுவார்கள். இவ்வாசகத்தில் பொதிந்துள்ளதோ ஆயிரம் அர்த்தங்கள். சொல்லொன்னா வேதனைகளுடன் ஒரு குழந்தையைப் பிரசவித்து விட்டதுடன் தாயின் பணி (வேதனைகள்) முடிந்து விடுவதில்லை. அக்குழந்தையை பாலுட்டித், தாலாட்டி, சீராட்டி வளர்த்து அதனை ஆளாக்க அவள் படும் வேதனைகள் இருக்கின்றனவே, அதற்கு ஒப்பானது தான் வெளியான புத்தகங்களை விற்றுப் பணமாக்குவதென்பது. நான் புத்தகங்கள் வெளியிட்ட ஆரம்பகாலங்களில் இந்த வேதனையை நன்கு உணர்ந்து கொண்டேன். அந்த வேதனைகளை அனுபவித்த போது 'கருத்தடை ' செய்து கொண்டால் (புத்தகங்களை வெளியிடாது விட்டால்) கூட என்ன? என்றும் சிந்தித்த சந்தர்ப்பங்கள் உண்டு. இந்த நேரத்தில் தான் எனக்கு கைதந்தவர் - இலங்கையின் முன்னணிப் புத்தக நிலையங்களுள் ஒன்றான பூபாலசிங்கம் புத்தக நிலைய உரிமையாளர் உயர் திரு பூ. ஸ்ரீதரசிங் அவர்கள். அன்று அவர் என் வெளியீடுகளுக்கு நேசக்கரம் நீட்டாதிருந்தால் நிச்சயமாக என் வெளியீட்டுத் துறைக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பேன்.

கொழும்பில் புத்தகங்களை அச்சிடும் போது E.P.I. கல்வி நிலையத்தில் பணிபுரிந்த திரு K. கிருஷ்ணமூர்த்தி அவர்களை என்னால் மறக்க முடியாது. அச்சிடப்பட்ட புத்தகத்தாள்களை இரவு வேலைகளில் "பைண்ட்" செய்து பின்பு அவருக்கு ஓய்வு கிடைக்கும் நேரங்களில் புத்தக நிலையங்களுக்கு விநியோகித்து ஒத்துழைப்பார். இவர்மூலமாகத் தான் திரு பூ. ஸ்ரீதரசிங் அவர்களின் உறவு எனக்குக் கிடைத்தது. பூபாலசிங்க புத்தக நிலையத்துக்கு என் அனுமதியுடன் புத்தகங்களை வழங்கினார். திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இரண்டு வருடங்கள் பூபாலசிங்க புத்தக நிலையத்துக்குப் புத்தகங்களைக் கொடுத்து - விற்பனைப் பணத்தைப் பெற்றுத்தந்த போதிலும் கூட இக்காலத்தில் பூபாலசிங்க புத்தகநிலைய உரிமையாளருக்கும் - எனக்கும் இடையில் எவ்வித நேரடித் தொடர்புகளோ - சந்திப்போ இருக்கவில்லை. ஆனால் நாடளாவிய ரீதியில் என் புத்தகங்கள் விநியோகிக்கப்படலாயிற்று. சுமார் இரண்டு வருடங்களின் பின்புதான் நான் திரு பூ. ஸ்ரீதரசிங் அவர்களை நேரடியாகச் சந்தித்தேன். அச்சந்தர்ப்பத்தில் அவரின் அன்பான உபசரிப்பும், என்னை மதித்து நேயமுடன் கதைத்துப்பழகிய சுபாவமும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அன்று அவர் தந்த ஆலோசனைகளே அரசறிவியல் பாடநூல்களில் பல பதிப்புக்களை என்னால் துணிவுடன் வெளியிட முடிந்தது எனவே சிந்தனை வட்டம் இன்று நூறாவது புத்தகத்தை வெளியிடுகின்றது என்றால் அதற்கு உந்து சக்தியே திரு பூ. ஸ்ரீதரசிங் அவர்களே. அன்று அவர் தந்த ஊக்கத்தினாலேயே பிரித்தானியாவின் அரசாங்கமுறை 7 பதிப்புக்களையும்,



அரசறிவியல் கோட்பாடுகளும் எண்ணக்கருக்களும் எனும் நூல் 7 பதிப்புக்களையும், இலங்கையின் அரசியல்திட்ட வளர்ச்சி 7 பதிப்புக்களையும், இலங்கையின் உள்ளூராட்சி முறையும், வெளிநாட்டுக் கொள்கைகளும் எனும் நூல் 7 பதிப்புக்களையும் தெரிவுசெய்யப்பட்ட நாடுகள் 6 பதிப்புக்களையும், பெற்றன. அது மட்டுமல்ல யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட பல பாடசாலைகளில் உசாத்துணைப் பாடநூலாகப் பயன்படுத்தக் கூடிய அளவிற்கு அவர் எனது புத்தகங்களை விளம்பரப்படுத்தித் தந்தார்.

1995ம் ஆண்டாகும் போது....

புத்தக வெளியீடானது எனக்கு ஓர் இலாபகரமான துறையாக மாற்றம் தந்தது. G.C.E. (A/L), G.A.Q. (பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை முதற்கலைத் தேர்வு மாணவர்களுக்கானது) அரசறிவியல் புத்தகங்கள் பெருமளவில் விற்பனையாகின. Political Science Supplimentary Series... என்ற (தொடர்) அடிப்படையில் G.C.E.(A/L) மாணவர்களுக்கென என்னால் எழுதப்பட்ட நான்கு புத்தகங்களான;

1, அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும்.
2, இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி.
3, தெரிவு செய்யப்பட்ட நாடுகள்.
4, இலங்கையின் உள்ளூராட்சி முறையும், கட்சிமுறையும், வெளிநாட்டுக் கொள்கைகளும்.

என்பன பல பாடசாலைகளில் பாட உசாத்துணை நூல்களாகப் பயன்படுத்தப்பட்டமையினால் இவற்றுக்கான கேள்வி நாளுக்கு நாள் அதிகரிக்கலாயின. அதன் காரணமாக என் பொருளாதாரத் துறையிலும் ஒரு ஸ்திரத்தன்மையை என்னால் ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. மிகவும் அபாயகரமான முறையில் இருந்த என்னுடைய வீட்டை உடைத்து திருப்திகரமான முறையில் கட்டிமுடித்தேன். (என் வாழ்க்கையில் அடிப்படைத் தேவையாகக் காணப்பட்டதும் இது தான்) என்னுடைய தேவைகளிலும் அதிகமானவற்றை நான் நிவர்த்தி செய்து கொண்டேன்.

- புகழனைத்தும் இறைவனுக்கே......

இவ்விடத்தில் மார்க்க மேதை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறியுள்ள ஒரு கருத்து என் ஞாபகத்திற்கு வருகின்றது. ''இன்பத்தில் திளைக்காத, துன்பத்தில் துவளாத மனிதனே இல்லை. எனினும் ஒரு முஃமீனைப் பொறுத்தவரை துன்பத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பான், இன்பத்தில் இறைவனுக்கு நன்றியைக் கூறுவான்." சிந்தனை வட்டதின் நுறு வெளியீடுகள் என்ற வகையில் என்னுடைய புத்தகப்பட்டியலைப் பார்த்தும், என்னுடைய மனம் திறந்த கருத்துக்களைப் பார்த்தும் விமர்சகர்கள் - விமர்சிக்கலாம்.

இவ்விடயத்தில் நான் ஒரு கருத்தை வெளிப்படையாகக் கூறியே ஆகவேண்டும். 100 வெளியீடுகள் என்று நான் கூறிய போதிலும் கூட 100 தனித்தனிப் புத்தகங்களின் வெளியீடாக இது அமைய வில்லை. ஒரு வெளியீட்டுப் பணியகம் ஒரு நூலை வெளியிட்ட பின் அந்நூல் எத்தனை பதிப்புக்களைப் பெற்றாலும் ஒவ்வொரு பதிப்பும் ஒரு நூலாகவே கருதப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சர்வதேசரீதியில் வெளியீட்டகங்கள் பின்பற்றும் மரபு. இதன் அடிப்படையிலேயே சிந்தனை வட்டத்தின் நூறு வெளியீடுகளையும் பட்டியல் படுத்தியுள்ளேன். உதாரணமாக இப்பட்டியலில் என்னால் எழுதப்பட்ட 10 அரசறிவியல் புத்தகங்கள் உள்ளன. ஆனால் இந்த 10 அரசறிவியல் புத்தகங்களும் 39 பதிப்புக்களைப் பெற்றுள்ளன. என்னுடைய தனிப்பட்ட பெயரில் எழுதப்பட்ட புத்தகத்தில் இந்தப் பத்துப் புத்தகங்கள் மாத்திரமே இடம் பெறும். ஒரு வெளியீட்டகத்தின் வெளியீடு வரும் என்று போது 39 பதிப்புகளும் தனித்தனிப் புத்தகங்களாகக் கொள்ளப்படும். இதுதான் வெளியீட்டு நியதி.

அடுத்து இப்பட்டியலில் என்னுடைய பெயரில் வெளியிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை மொத்தம் 69. என் மனைவியுடன் நான் இணைந்து வெளியிட்ட புலமைப்பரிசில் புத்தகங்களின் எண்ணிக்கை 23. மீதான 8 புத்தகங்கள் தான் பிற எழுத்தாளர்களின் நூல்கள். நான் தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய பாடநூல்களை வெளியிட ஆரம்பத்தில் யாருமே முன் வராத காரணத்தினால் என்னால் ஏற்படுத்தப்பட்ட சிந்தனை வட்டம் என்னுடைய பாடநூல்களை வெளியிடுவதற்காகவே களமாக்கப்பட்டது. வேறுவார்த்தையில் கூறப்போனால் இதனை நான் ஒரு உழைப்பாகவே மேற்கொண்டேன்.

எனது சிந்தனை வட்டப்பட்டியலை விமர்சகர்கள் ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம், ஆய்வாளர்கள் ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம் இதைப்பற்றி நான் மகிழ்ச்சியடையவோ, அல்லது கவலையடையவோ, போவதில்லை.

இந்த நூறாவது புத்தகம் அச்சாகிக் கொண்டிருக்கும் வேலையில் இன்னும் 7 புத்தகங்களையும் அச்சிடக்கொடுத்துள்ளேன். அவையும் பாடப்புத்தகங்களே. அதே நேரத்தில் தற்போது சிந்தனை வட்டத்தின் ஸ்திரத்தன்மையின் கீழ் பிற எழுத்தாளர்களின் இலக்கிய, மற்றும் பாடநூல்களையும் வெளியிடமுடிவெடுத்துள்ளேன். இந்த புதிய முயற்சியை சேவையென்று மார்தட்டிக்கொள்ள மாட்டேன். ஒரு சதமேனும் இலாபத்தைப் பெறாமல், அச்சீட்டு செலவினை மாத்திரம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை உதவியாக ஆற்றுவதே என் நோக்கம்.

மனிதனின் சுபாவங்கள் வித்தியாசமானவை.

ஒருவன் கிராமத்துக்கோ, சமூகத்துக்கோ அவனால் பங்களிப்புக்களை வழங்க முடியுமாக இருந்தும், அவ்வாறு செய்யாமல் ஒதுங்கி இருப்பின் - அவன் நல்லவன். விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவன். ஆனால் தான் வாழும் கிராமத்துக்கோ, சமூகத்துக்கோ ஏதேனும் ஒன்றை ஆக்கபூர்வமாகச் செய்ய எத்தனிக்கும் போது அவனை விமர்சனத்துக்கு உட்படுத்துவதும், கெட்டவனாக்குவதும் கிராமங்களினதும், சமூகத்தினதும் ஒரு பொதுவான நிலை. "காய்க்கும் மரத்துக்குத் தான் கல்லடி விழும் என்பார்கள்" அதே போல் தான் மேற்படி நிலையும். நான் பிறந்து வளர்ந்த கிராமமான உடத்தலவின்னை மடிகேயும் இதற்கு விதிவிலக்கல்ல.

உடத்தலவின்னை மடிகே கிராமத்துக்கும், எனக்கும் இடையிலான பிணைப்பை நினைத்துப் பார்க்கின்றேன். பள்ளிவாயிலாக இருக்கட்டும், சமூக விவகாரங்களாக இருக்கட்டும், கல்வி நடவடிக்கைகளாக இருக்கட்டும்... அதை



இங்கு சுட்டிக்காட்ட விரும்பவில்லை. அவை மனசாட்சியுடன் இணைந்த பணிகள், படைத்தவன் அவற்றை ஏற்றுக் கொண்டால் போதும். ஆனால் உடத்தலவின்னை மடிகே எனும் பெயரை நாடறிய, ஏன் உலகறியச் செய்ததில் நான் ஒரு முக்கியமான பங்களிப்பினை வழங்கியுள்ளேன் எனக் கருதுகின்றேன். அடுத்தவனை ஏமாற்றியோ, அடுத்தவனுக்குத் துரோகம் செய்தோ, அடுத்தவனை வஞ்சித்தோ, இலஞ்சம் பெற்றோ அல்லது தவறான வழியில் உழைத்தோ ஊரின் நற்பெயரைக் களங்கப்படுத்தக் கூடிய வகையில் பிரபல்யப்படுத்தவில்லை. கௌரவமான கல்விச்சேவையை நாட்டிற்கு வழங்கினேன். என் இலக்கியப்படைப்புக்களினூடாக இலங்கையில் மாத்திரமல்லாமல் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிஜிதீவுகள் உட்பட புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் வாழக்கூடிய கனடா, பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ்... போன்ற நாடுகளிலும் உடத்தலவின்னையின் பெயரைப் பிரபல்யப்படுத்தக் காரணமானேன். இண்டநெட் வலைப்பிண்ணலினூடாக "உடத்தலவின்னையின் பெயரை முதலில் பதிக்கவைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளேன். மிலேனியத்தின் முதல் வெளியீடாக (2000 - 01 - 01இல்) சிந்தனை வட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட '21-ம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்' 'உடத்தலவின்னை மடிகே சிந்தனை வட்டம்' எனும் முத்திரையுடன் விரைவில் இன்டநெட்டில் பதிவாக்கப்படவுள்ளது.

சிந்தனை வட்டத்துக்குப் புறம்பாக - ஒரு எழுத்தாளன் என்ற வகையில் என்னால் எழுதிவெளியான 57 புத்தகங்களினதும் பெயர்ப்பட்டியலை மௌனமாக உங்கள் பார்வைக்குத் தருகிறேன்.

01) **தேவைகள்(சிறுகதைத் தொகுதி)**
வெளியீடு - KIWS - kATUGASTOTA - வெளியான பதிப்பு : 01

02) **நிழலின் அருமை (சிறுகதைத் தொகுதி)**
வெளியீடு - தமிழ்மன்றம் வெளியான பதிப்பு : 01

03) **கரு (சிறுகதைத் தொகுதி)**
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

04) **நெருடல்கள் (சிறுகதைத் தொகுதி)**
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

05) **அந்தநிலை (சிறுகதைத் தொகுதி)**
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

06) **யாரோ எவரோ எம்மை ஆள.. (சிறுகதைத் தொகுதி)**
வெளியீடு - குமரன் வெளியீட்டகம் (இந்தியா) வெளியான பதிப்பு : 01

07) **அடிவானத்து ஒளிர்வுகள் (நாவல்)**
வெளியீடு - அல் பாஸி பப்ளிகேஷன் (இந்தியா) வெளியான பதிப்பு : 01

08) **இலக்கிய விருந்து (திறனாய்வு)**
வெளியீடு - தமிழ் மன்றம் வெளியான பதிப்பு : 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) இலக்கிய உலா (திறனாய்வு)
வெளியீடு - மில்லத் பப்ளிஷாஸ் (இந்தியா) வெளியான பதிப்பு : 01

10) கிராமத்தில் ஒரு தீபம் (வரலாறு)
வெளியீடு - பொன்விழாக்குழு வெளியான பதிப்பு : 01

11) Wills World Cup '96 நினைவுகள்) (விளையாட்டு)
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

12) புதிய மொட்டுகள் (கவிதைத் தொகுப்பு)
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

13) அரும்புகள் (கவிதைத் தொகுப்பு)
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

14) பாலங்கள் (கவிதைத் தொகுப்பு)
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

15) வரலாறு குறிப்புகள் (ஆண்டு -9)
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு : 01

16) வரலாறு குறிப்புகள் (ஆண்டு -10)
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு : 01

17) வரலாறு குறிப்புகள் (ஆண்டு -11)
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

18) சமூகக்கல்வி குறிப்புகள் (தொகுதி -1)
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு : 01

19) சமூகக்கல்வி குறிப்புகள் (தொகுதி -2)
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு : 01

20) வரலாறு (ஆண்டு -9) வினா- விடைத் தொகுதி
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 06



21) வரலாறு (ஆண்டு -10) வினா- விடைத் தொகுதி.
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 08

22) வரலாறு (ஆண்டு -11) வினா- விடைத் தொகுதி.
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 08

23) இலங்கையின் தேர்தல்கள் (அன்றும் - இன்றும்)
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு : 01

24) '94 பொதுத் தேர்தலும், சிறுபான்மை இனங்களும்.
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு :01

25) '94 சனாதிபதி தேர்தலும், சிறுபான்மை இனங்களும்.
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்புகள் :02

26) அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி1) வினா - விடைத் தொகுதி.
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு : 01

27) அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி2) வினா - விடைத் தொகுதி.
வெளியீடு - E.P.I புத்தகாலயம் வெளியான பதிப்பு :01

28) அரசறிவியல் கோட்பாடுகள்.
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

29) இலங்கையின் அரசறிவியல் (நிகழ்கால நிகழ்வுகள்)
வெளியீடு - சிந்தனை வட்டம் வெளியான பதிப்பு : 01

30) பிரித்தானியாவின் அரசியல் முறை.
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 07

31) அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும்.
**Political Science Supplimentary Series - 01**
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 07

32) இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி.
**Political Science Supplimentary Series - 02**
வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33) தெரிவு செய்யப்பட்ட நாடுகள்.

**Political Science Supplimentary Series - 03**

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 06

34) உள்ளூராட்சிமுறையும், கட்சிமுறையும், வெளிநாட்டுக்கொள்கைகளும்

**Political Science Supplimentary Series - 04**

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 07

35) பல்தேர்வு மாதிரி வினா- விடைத் தொகுதி - 1

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

36) பரீட்சை மாதிரி வினா- விடை '98

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

37) அறிமுகத் தமிழ் (புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 1)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 02

38) அறிமுகக் கணிதம் (புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 2)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள் : 02

39) அறிமுக விஞ்ஞானமும், ஆங்கிலமும்.

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு: 01

40) சுற்றாடலும் பொதுஅறிவும்

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு: 01

41) அறிமுக விஞ்ஞானம் (தொகுதி - 1)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 03)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள்: 02

42) அறிமுக விஞ்ஞானம் (தொகுதி - 2)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 04)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள்: 02

43) நாமும் சுற்றாடலும் (தொகுதி - 1)
(புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 05)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள்: 02



44) நாமும் சுற்றாடலும் (தொகுதி - 2)
புலமைப்பரிசில் பாடநூல் வரிசை - 06

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்புகள்: 02

45) புலமைப்பரிசில் மாதிரி வினா - விடை (தொகுதி - 1)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

46) புலமைப்பரிசில் முன்னோடி வழிகாட்டி.

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு: 01

47) புலமைப்பரிசில் மாதிரி வினா - விடை (தொகுதி - 2)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு: 01

48) புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி - 1)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு: 01

49) புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி - 2)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு: 01

50) புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி - 3)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

51) **B.A.** அரசறிவியல்.

வெளியீடு - E.P.I- கல்விநிலையம் வெளியான பதிப்பு : 01

52) **G.A.Q.** அரசறிவியல்.

வெளியீடு - E.P.I- கல்விநிலையம் வெளியான பதிப்பு : 01

53) புலமைப்பரிசில் - அறிவுஒளி (தொகுதி -1)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

54) 21ம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

55) புலமைப்பரிசில் ஆரம்பவழிகாட்டி

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

56) புலமைப்பரிசில் - அறிவுஒளி (தொகுதி - 2)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01

57) புலமைப்பரிசில் - அறிவுஒளி (தொகுதி - 3)

வெளியீடு - சிந்தனைவட்டம் வெளியான பதிப்பு : 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக தனிப்பட்டமுறையில் வெளியான என்னுடைய 57 புத்தகங்களிலும் மொத்தமாக 112 பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. இவற்றுடன் முன்னால் தரப்பட்ட சிந்தனைவட்டப் புத்தகப்பட்டியலில் இடம்பெற்றுள்ள பிற எழுத்தாளர்களின் புத்தகங்களையும் சேர்க்கும் போது மொத்தமாக 120 பதிப்புகள் வெளிவந்துள்ளன. இந்த 120 பதிப்புகளிலும் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவை மட்டுமல்ல. 1995ம் ஆண்டில் ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்காக சுமார் 2000 மாணவர்களுக்கு சிந்தனைவட்ட முத்திரையுடன் மாதிரி வினாப்பத்திரங்களை விநியோகித்துள்ளேன். அதேபோல 1997 ஆகஸ்டில் நடைபெற்ற ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 4216 மாணவர்களுக்கும், 1998 புலமைப்பரிசில் பரீட்சையில் 6943 மாணவர்களுக்கும், 1999 புலமைப்பரிசில் பரீட்சையில் 7873 மாணவர்களுக்கும், 2000 புலமைப்பரிசில் பரீட்சையில் 10736 மாணவர்களுக்கும் சிந்தனைவட்ட முத்திரையுடன் தபால்மூலமாக பாடநூல்களையும், மாதிரி வினாப்பத்திரங்களையும் விநியோகித்துள்ளேன்.

என்னுடைய தனிப்புத்தகங்களாக இருக்கலாம், சிந்தனைவட்ட வெளியீடுகளாக இருக்கலாம், அல்லது மாதிரி வினாப்பத்திரங்களாக இருக்கலாம். இவை அனைத்திலும் நான் பிறந்து வளர்ந்த மண்ணான உடத்தலவின்னை மடிகேயின் பெயரை பிரஸ்தாபித்தே வந்துள்ளேன். சிலரைப்போல பணம் வந்ததும், அல்லது அதிகாரம் வந்ததும் தான் பிறந்த மண்ணின் பெயரை மறந்து விடுவது போல அல்லது கூற வெட்கப்படுவதைப்போல நான் என்றும் இருந்ததுமில்லை. இருக்கப்போவதுமில்லை.

ஆனால்...

உடத்தலவின்னை மடிகே எனக்கு என்ன செய்தது....?

நினைத்துப் பார்க்கின்றேன். -

விழிகளை நீர்த்திரைதான் மறைக்கின்றது.

எனது கிராமம் எனக்கு உதவிகள் புரியவேண்டும் என்றோ, என்னைப் பூ மாலை போட்டு கௌரவிக்க வேண்டும் என்றோ, புகழ்மாலை சூட்டிப்பாராட்ட வேண்டும் என்றோ, எதிர்பார்க்கவில்லை. நிச்சயமாக அது எனக்குத் தேவையுமில்லை. ஆனால் உபத்திரவமாக இருத்தல் கூடாது. இதைத்தான் நான் எதிர்பார்க்கின்றேன்.

1995-ம் ஆண்டாகும் போது இலங்கையின் பல பாகங்களிலும் வகுப்புக்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்திவந்ததினால் நாடளாவியரீதியில் பல நூற்றுக்கணக்கான மாணவ நெஞ்சங்களின் அன்புக்குப் பாத்திரமானேன். என்னிடம் கற்ற பல மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், சட்டக்கல்லூரி, சட்டபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், சப்பிரகமுவ பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகிய பல இடங்களில் உயர்கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். நான் கற்ற எனது கிராமத்துப்பாடசாலை மீது எனக்கிருந்த பற்றுக் காரணமாக எனது கிராமத்துப் பாடசாலையிலும் கற்பிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டது. 1994 ம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் நான் முயன்ற போது எனது கிராமத்தைச் சேர்ந்த சில U.N.P பிரமுகர்கள் (?) நான் ஒரு S.L.F.P காரன் - எனவே S.L.F.P காரர்களை உடத்தலவின்னைக்கு எடுக்கக்கூடாது எனத் தடுத்தனர்.



(இதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள) 1994 இறுதியில் P.A. அரசாங்கம் பதவிக்கு வந்த போது முயன்ற நேரத்தில், நான் அப்போது கற்பித்துக்கொண்டிருந்த அக்குரணை தேசிய பாடசாலையில் பிரதியீடு இன்றி நான் விடுவிக்கப்பட்ட போதிலும் சுமார் 11 மாதங்கள் போராட வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. இக்கட்டத்தில் கல்வி, உயர்கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி விஸ்வாவர்ணபால, பாத்ததும்பரை பாராளுமன்ற உறுப்பினரும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, இறுதியில் ஜனாதிபதியின் செயலாளலர் திருவாளர் பாலபடபெந்தி ஆகியோரின் கடிதங்களைப் பெற்றும் கூட மிகவும் சிரமத்துடனே இடமாற்றத்தைப் பெறவேண்டி இருந்தது. அச்சமயம் உடத்தலவின்னையின் பரம்பரை (?) S.L.F.P காரர்கள் கூறிய வார்த்தை. ''புன்னியாமீன் U.N.P. காரன் அவனுக்கு இப்பாடசாலையில் இடம் கொடுக்கக் கூடாது''

எப்படியோ சவாலில் நான் ஜெயித்தேன்.

1995.11.10ம் திகதி க/ ஜாமிஉல் அஸ்ஹர் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுவந்ததும், கனிஷ்ட பிரிவில் ஆண்டு 3,4 மாணவர்களுக்குக் கற்பிக்கவென நிர்வாகத்தால் பணிக்கப்பட்டேன். ஏற்கனவே B.A, G.A.Q, G.C.E.(A/L) போன்ற உயர் தர மாணவர்களுக்குக் கற்பித்துப் பழக்கப்பட்ட எனக்கு ஆண்டு 3,4 மாணவர்களுக்குக் கற்பிக்க முடியவில்லை.

- என் எதிர்பார்ப்பில் விழுந்த முதல் சாட்டை இது.
- என்னுடைய மானசிகமான தாக்கத்துக்கும் இதுவே மூலகாரணமாயிற்று.

என் கற்பித்தலைப் பற்றித் தெரிந்த ஒரு சில சகோதரர்கள் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க 1996 பெப்ரவரி மாதம் மத்திய கல்லூரிக்கு அழைக்கப்பட்டேன். தரம் 9 உம், தரம் 12 உம் எனக்குத் தரப்பட்டன.

நான் வழமையான என்னுடைய பாணியிலே கற்பித்தலைத் தொடர்ந்தேன்.

ஆனால் -

- புன்னியாமீன் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை.
- புன்னியாமீன் படிப்பிப்பதில்லை.
- புன்னியாமீன் பாடசாலைக்கு வந்து புத்தகம் எழுதுகிறான்.
- புன்னியாமீன் பாடசாலைக்கு வந்தாலும் பாடசாலையை விட வீட்டிலே அதிகமாக இருப்பான். என்றொரு நிலை ஊரவர்களின் மத்தியில் - தனிப்பட்ட முறையில் என்னோடு பொறாமை கொண்ட கோஷ்டியால் பரப்பப்பட்டது.

கல்விக்காரியாலயத்துக்கும், கல்வி அமைச்சுக்கும் பெட்டிஷன் அடிக்கப்பட்டன. கல்விக்காரியாலயத்தில் எனக்கு நன்கு தெரிந்த, என்னுடன் நட்பார்த்தமான முறையில் பழகும் ஒரு கல்வி அதிகாரி அந்தப் 'பெட்டிஷனை' என்னிடம் காட்டினார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. காரணம் 'பெட்டிஷனில்' காணப்பட்ட விடயத்துக்கல்ல.... அதில் கையொப்பமிட்டவரின் பெயரைப் பார்த்தே அதிர்ச்சியடைந்தேன். ஏனென்றால் அந்தபெயருக்குரியவரின் மகள் என்னிடம் படித்துச் சித்தியடைந்தவள். படிக்கும் போது என்னிடம் எத்தனையோ உதவிகளைப் பெற்றவள். அதுமட்டுமல்ல சுமார் ஒன்றரை வருடங்கள் ஒரு சதமேனும் கட்டணம் பெறாமல் இலவசமாக என்னுடைய 'டியுஷன்' வகுப்பில் படித்தவள். அந்த மாணவியின் தந்தைதான் நான் பாடசாலையில் கற்பிப்பதில்லை என்றும், பாடசாலையில் வியாபாரம் புரிவதாகவும் அவர் கையெழுத்தால் 'பெட்டிஷன்' அடித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியிடம் முறைப்படி விசாரணையை நடத்தும்படி கேட்டுக்கொண்டேன்.

நான் க/ ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் கற்பித்த காலத்தில் 4 அரசாங்கப் பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார் செய்து அனுப்பியுள்ளேன். க. பொ. த. (உ/த) பரீட்சையில் என்னிடம் அரசறிவியல் கற்ற மாணவர்களுள் 1997 இல் 10 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 10 மாணவர்களுமே சித்தியடைந்தனர். (100% சித்தி), 1998 இல் 17 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 15 மாணவர்களும் (88.23%), 1999 இல் 36 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 34 மாணவர்களும் (94.44%) சித்தியடைந்தனர். அதேபோல க. பொ. த. (சா/த) பரீட்சையில் 1998 இல் தோற்றிய 63 மாணவர்களுள் 55 மாணவர்கள் (87.3%) நான் கற்பித்த வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்தில் சித்தியடைந்தனர். அதேநேரத்தில் 75 ஆண்டுகள் வரலாற்றினைக் கொண்ட ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் 07 (ஏழு) மாணவர்கள் மட்டுமே இதுவரை பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்றுள்ளனர்.

அந்த 07 மாணவர்களுள் ஒருவர் என்னிடம் கற்றவர். 1997 இல் க.பொ.த. (உ/த) வகுப்பில் வகுப்பாசிரியராகவும், அரசறிவியல் பாட ஆசிரியராகவும் இருந்து என்னால் வழிநடத்தப்பட்டு தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் ஹனிபா - எப் - பர்ஹானா என்பவரே உடத்தலவின்னை ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி வரலாற்றில் முதலாவது பல்கலைக்கழகம் சென்ற மாணவியாவார் . இவர் என்னுயை மாணவி என்ற வகையில் நான் பெருமை அடைகின்றேன்.

என்னுடைய பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்த்த அதிகாரி அந்த பெட்டிஷனை (முறைப்பாட்டை) பொய்யென ஏற்றுக்கொண்டார்.

கண்ணால் காண்பதுவும் பொய் -
காதால் கேட்பதுவும் பொய் -
தீர ஆராய்ந்து பெறுவதே மெய் - என்பர் பெரியோர்.

ஆனால் எனது கிராமம் இதற்கு நேரடி விதிவிலக்கானது.

ஒருவன் ஏதோ ஒரு வகையில் உயர்வடைந்து செல்லும் போது, மனதில் எழும் ஆற்றாமை அல்லது பொறாமை காரணமாக அவனது உயர்வை எவ்வழியிலாவது தடுத்துவிடவேண்டும் என எத்தனிப்பது கிராமத்தவர்களுக்கு கைவந்த கலை. ஏனைய முஸ்லிம் கிராமங்களுடன் ஒப்பு நோக்கும் போது இன்னும் பின்னடைவான நிலையில் எனது கிராமம் இருப்பதற்கு மேற்குறிப்பிட்ட விடயம் ஒரு காரணியாக இருப்பின்; மறுகாரணியாக அமைவது குடும்ப (குல)ச் செல்வாக்குகள், குடும்ப (குல) வாதங்கள். பெரும்பான்மைக் குடும்பத்தினர்கள், சிறுபான்மைக் குடும்பத்தினர் என்று ஜாஹிலியாக்கால (அறிவிலிகள் கால) குல பேதங்களைப் போன்று இன்னும் உடத்தலவின்னையில் பேணப்படுவது ஜாஹிலியத் (அறிவிலிகளின்) பண்புகள் தான்.

1998/1999ம் காலகட்டத்தில் இதை நான் நன்கு அனுபவித்து விட்டேன். என்னுடைய உயர்ச்சியை எத்தனையோ வழிகளில் தடுக்க எத்தனித்தவர்கள், கடைசியில் ஒரு இளம்பெண்ணுடன் என்னை சம்பந்தப்படுத்தி என் முகத்தில் கரி பூச எத்தனித்தனர். இவ்விடத்தில் சகோதரர் ஏ. எம். வைஸ் அவர்கள் 'பவளநிலா'



எனும் பெயரில் வெளிவந்த ஜாமிஉல் அஸ்ஹரின் 'பவளவிழா' மலரின் ''நீ திருந்தியே ஆக வேண்டும்'' என்ற உரைச்சித்திரத்தில் குறிப்பிட்ட சில வரிகள் நினைவுக்கு வருகின்றன.

*"ஊரில் ஒருவனுக்கோ*
*பழிச்சொல் வதந்தியென*
*தாக்கம் ஏற்படுத்தும்*
*தப்பெதுவும் உருவானால்..*
*எம் முதியோர் முன்னோர்கள்*
*முன்வந்து மூடி நிற்பர்.*
*முளையதிலே கிள்ளிவிடுவர்*
*மானம் காத்து நிற்பர்*
*இன்றென்றால் நீயென்ன*
*இல்லாத கதையெல்லாம்*
*இட்டுக்கட்டி நிற்பாய்*
*கண்ணால் கண்டதைப் போல்*
*கை கால் வைத்ததனை*
*அள்ளிவைத்துப் பரப்பிடுவாய்*
*நல்ல கதை விட்டு விட்டு*
*நாற்றம் தருகின்றாய்*
*மண்ணின் மைந்தன் நீ*
*திருந்தியே ஆக வேண்டும்.*

ஆம்-

என் மனைவி மஸீதா காலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பள்ளிப்பருவத்திலிருந்தே கவிதை, கட்டுரை, சிறுகதை... என இலக்கியத்தின் பலதுறைகளிலும் பங்களிப்புச் செய்துவந்தவர். தேசிய மட்டத்தில் பல இலக்கியப் பரிசில்களைப் பெற்றதுடன், ஜனாதிபதிப் பரிசினையும் பெற்றவர். ஆரம்ப காலத்தில் இலக்கியத்துறையினூடாக ஏற்பட்ட எமது பிணைப்பு - காலகதியில் காதலாகப் பரிணமித்து - 1984 -ம் ஆண்டில் நாங்கள் திருமண பந்தத்தில் இணைந்தோம். இறைவனின் அருளினால் இரண்டு குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறோம். எம்மிடம் காணப்படும் புரிந்துணர்வின் காரணமாகவே பொருளாதார தரத்தில் மிகவும் அடிமட்ட நிலையில் இருந்த நாம் விடாமுயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் படிப்படியாக பொருளாதாரத்தில் ஒரு ஸ்திரத்தன்மையை அடைந்து வருகின்றோம். ஒரு புத்தகத்தை வெளியிடுவதில் எவ்வளவு சிரமமுள்ளதோ - அதே போல தான் ஒரு புத்தகத்தை எழுதுவதிலும் உள்ளது. இரவிரவாக விழித்திருந்து எழுதி (என்வீட்டுக்கு மின்சாரம் வந்தது அண்மையில் தான். அதற்கு முன்பு குப்பிவிளக்கின் வெளிச்சத்திலே எழுதிவந்தோம்) அதைத் தொகுத்து நூலாக்க நாங்கள் பட்ட வேதனைகள் - தியாகங்கள்... டியுஷனில் கற்பிக்கும் போதும், கருத்தரங்குகளில் சுமார் ஆறு, ஏழு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக விரிவுரைகளை நடத்தும் போதும் ஏற்படக்கூடிய உடலியல் சோர்வுகளையும், பாதிப்புக்களையும் பார்ப்போருக்கு உணர்ந்து கொள்ள முடியாது....

ஆனால் வீட்டைக்கட்டிவிட்டான், காணியை வாங்கிவிட்டான், வாகனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறான்... இதைப்பார்த்து ஏக்கப் பெருமூச்சுவிடவும், கடையடிகளில் இருந்து விமர்சிக்கவும், பொறாமைப்படவும் தான் எம்மவர்களுக்குத் தெரியும்.

இந்த அருட்டுணர்வுகளின் வெளிப்பாட்டினைத் தான் 1998ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எனது கிராமம் எனக்கு உணர்த்தியது. நான் இரண்டாம் தாரமாக ஒருவரைத் திருமணம் செய்துவிட்டேன். என்னுடைய நடத்தை அப்படிப்பட்டது.இப்படிப்பட்டது. என்று (வார்த்தையில் எழுதமுடியாத வசனங்கள் அவை) முழு ஊரிலும் கதை பரப்பப்பட்டது. அக்கட்டுக்கதை காட்டுத்தீயை விட வேகமாகப் பரவியது. என் பெயர் பரவியிருந்த தேசமெல்லாம் அந்தக் காட்டுத்தீயும் பரவலாயிற்று.

- ★ புன்னியாமீன் இப்படிப்பட்டவனா? என்று மூக்கின் மேல் விரல் வைத்தவர்கள் பலர்.
- ★ செய்தாலும் செய்வான், படுதுரோகி என்று பழி சுமத்தியவர்கள் பலர்.
- ★ இது உண்மையா? நம்ப முடியவில்லையே! - என்ற போதும் நம்பிய பின் தெளிந்தவர்கள் பலர்.
- ★ முகத்துக்கே கேட்டு விடுவோம் என்று நினைத்தும், கேட்டுவிட்டுப் பொய்த்து விட்டால் வீண் வம்பல்லவா எனக் கருதியவர்கள் சிலர்.
- ★ நட்பை ஒரு புறம் வைத்து விட்டு, என்னடா இது புதுக்கதை என்று வீடு தேடி வந்து உரிமையோடு விசாரித்து உணர்ந்தவர்கள் மிகச் சிலர்.
- ★ வேண்டாம் இந்தக் கட்டுக்கதை அவதூறு என்று வர்ணிப்பவர்களோடுமோதிக் கொண்ட அன்பர்கள் மிக மிகச் சிலர்.

கற்பனையில் கூட நினைக்காத -
கனவில் கூட எதிர்பார்க்காத...

அந்தக்கதை.... பரவிய வேகத்தில்.... முதற்தடவையாக நான் நிலை தளம்பினேன். என்ன செய்வதென்று புரியாமல் தவித்தேன். எனக்கு ஏற்பட்ட வேதனையில் என் மனைவி மாத்திரம் புரிந்துணர்வு அற்றவளாக இருந்திருந்தால்... சில நேரங்களில் நான் என் உயிரைக்கூடப் போக்கிக் கொண்டிருப்பேன்.

ஆம்!
ஊரில் சிறியவர் முதல் பெரியவர் வரை...
கடையோரம் கஞ்சா சுருட்டுப் புகைப்பவன் முதல் - மார்க்க உபதேசம் புரியும் தப்லீக்காரர்கள் வரை...
பாமரன் முதல் படித்தவன் வரை ...
எங்கும் இதே கதை -
ஊரின் முன்னேற்றத்துக்காக நான் எவ்வளவோ செய்தும், ஊரின் நற்பெயரை உலகறியச் செய்தும் - எனது ஊர் எனக்கு அவப்பெயரால் கிரீடம் சூட்டிய போது முழு ஊரிலும் இருந்து எனக்காக ஆறுதல் சொன்னவர்கள் மொத்தம் 14 பேர் மாத்திரமே.

மானசிகமட்டத்தில் மிகவும் மோசமான முறையில் வீழ்ச்சியடைந்திருந்த



நேரத்தில் என் மனைவியின் ஆறுதல் வார்த்தைகளும், என் உயிர் நண்பர்களும், உற்ற சகோதரர்களுமான A.R.M. உவைஸ், A.R.M. சாதுாக் N.L. சலாஹுதீன் A.M. வைஸ் போன்றவர்கள் தந்த தைரியமும், களங்கத்தைக் களைய அவர்கள் மேற்கொண்ட ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளும் மனதில் ஓரளவுக்குத் தெம்பினைத் தந்தன.

வாரங்கள் இரண்டோடியும் என்னைப்பற்றி பரப்பப்பட்ட அவதூறுகளின் வேகம் குறைவில்லை. அரைவாசிப் பேருக்குமேல் உண்மையைத் தெரிந்தாலும் அவர்களும் மௌனமாகி வேடிக்கை பார்க்கலானார்கள். இச்சந்தர்ப்பத்தில் தான் என்னைப்பற்றி எமது கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் மிகவும் மோசமான முறையில் ஒரு வீட்டில் வைத்துக்கதைத்த கதை என் உறவினர் ஒருவரினால் இரகசியமாக ஒலிப்பதிவு (ரெக்கோட்) செய்யப்பட்டு அந்த ஒலிநாடா என்னிடம் தரப்பட்டது. அக்கதை பரப்பப்பட்ட பின்னணி அந்த ஒலி நாடா மூலம் துல்லியமாகத் தெளிவாக்கப்பட்டது. பலரின் பொறாமை உணர்வு போல, சிலரின் சுயநலமும் பொதிந்திருந்ததை அப்போது என்னால் உணரமுடிந்தது. அதே நேரத்தில் எனக்கு வருகின்ற அனாமதேய தொலைபேசி அழைப்புக்களை பதிவுசெய்வதற்கும் - எந்த இலக்கத்திலிருந்து அனாமதேய தொலைபேசி தொடர்புகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் அறியவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டேன். இந்த நடவடிக்கைகள் மூலமாக எட்டு தொலைபேசிகளில் இருந்து எனக்கு வந்த அனாமதேய அழைப்புக்களையும், பதிவுசெய்து கொண்டேன். அத்துடன் உரிய முறையில் சாட்சிகளையும் ஏற்பாடு செய்து கொண்டேன்.

மூன்றாவது வாரத்திலும் அவதூறுக்கதையின் வேகம் குறையவில்லை. இறுதியில் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேண்டி சட்ட ஆலோசனைகளைப் பெற்றதுடன், கண்டி குற்றப்புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு கொண்டு என்னிடம் காணப்பட்ட சகல ஆவணங்களையும் ஒப்படைத்து முறைப்பாடு செய்தேன்.

அன்று நான் நினைத்திருந்தால்...

ஒரு பெண் உட்பட நான்கு பேரை கைது செய்ய என்னால் நடவடிக்கை மேற்கொண்டிருக்கலாம். ஏனென்றால் அதற்கான போதிய ஆதாரங்கள் என்னிடமிருந்தன. ஆனால் பொலிஸில் என் தற்பாதுகாப்புக்காக முறைப்பாடு செய்தேனே தவிர பிரச்சினைக்கு உட்படுத்தக் கூடிய வகையில் முறைப்பாடு செய்யவில்லை.

ஏனென்றால் -

நாய் எம்மைக் கடித்தது என்பதற்காக, நாம் நாயைக் கடித்தல் நாகரிகமானதல்லவே.

பொறுமையைக் கையாண்டேன்.

ஆனால் என் பாதுகாப்புக்காக வேண்டி ஒலிப்பதிவு நாடா உட்பட முக்கிய சில ஆவணங்களை இன்றுவரை பாதுகாப்பான முறையில் (வங்கிலொக்கரில்') வைத்துள்ளேன்.

என் விழிகள் வடித்த கண்ணீரையும், என் பொறுமையையும் இறைவன் ஏற்றுக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 டிசம்பர் மாதமாகும் போது ஊர்மக்களில் பெரும்பாலனவர்களுக்கு என் மீது சுமத்தப்பட்டது அபாண்டம் தான் என்பது புரிந்து விட்டது. எனதுகிராமத்தில் அப்போது கடமையாற்றிக் கொண்டிருந்த கதீப் (மதப்பெரியவர்) அவர்கள் கிராமத்தில் அமைந்துள்ள இரண்டு ஜும்ஆப் பள்ளி வாயில்களிலும் ''ஒரு மனிதனுக்கு இகழ்ச்சியை ஏற்படுத்துவதையும், வதந்திகளைப் பரப்பி அவமானப் படுத்துவதையும் இஸ்லாம் எவ்வாறு கண்டிக்கின்றது" என்ற தொனிப் பொருளில் குத்பா (மதப்பிரசாரம்) கூட மேற்கொண்டார். அது மட்டுமல்ல ''எந்தக் காரணம் இடம்பெறக்கூடாது" என்பதற்காக இந்த தீய அவப்பெயரை என்மீது சுமத்தினார்களோ. அந்தக்காரியமும் நிகழ்ந்தேறி விட்டது. இதற்காக நான் இறைவனுக்கு என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். (அக்காரியத்தை நிகழ்த்த இரவுபகல் பாராது என்னோடு ஒத்துழைத்த நல்லிதயங்கள் சிலர் இருக்கின்றனர். நான் மரணிக்கும் வரை அவர்களுக்கு என்னிதயத்தில் தனியிடம் இருந்து கொண்டே இருக்கும்.)

''அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்." என்பார்கள். என்னைப் பொருத்தமட்டில் இந்த முதுமொழி எதிர்மாறானது. நான் பட்ட மனவேதனைகளைப் போல... அல்லது அதனையும் மிகைக்கக் கூடியதாக ஏதோ ஒரு வழியில் என் மனதைச் சித்திரவதைப் படுத்திய அனைவருமே அனுபிக்க நேர்ந்ததை எனக்கு நேரடியாகக் கண்டு கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை வல்ல நாயன் எனக்களித்து விட்டான்.

இதனை நான் இறுமாப்புடன் கூறவில்லை.

அருள்மறை திருக்குர்ஆனில் அல்லாஹுத் தஆலா ''தொழுகையைக் கொண்டும், பொறுமையைக் கொண்டும் என்னிடம் உதவி தேடுங்கள் நான் பொறுமையாளருடனே இருக்கிறேன்" எனக் கூறியிருக்கிறான்.

நான் பொறுமையுடனிருந்தேன்.
நாயன் என்னுடனிருந்தான். இருக்கிறான்.
அவ்வளவு தான்!

இந்த சம்பவங்கள் நடந்து இரண்டு வருடங்கள் ஆகப்போகின்றன. ஊரவர்களுக்கு நான் தூய்மையானவன் எனத் தெரிந்த போதிலும் கூட, "புன்னியாமீன்" என்ற பெயரைத்தெரிந்த வெளியில் உள்ள ஒரு சிலருக்கு இந்த அவக்கதையின் உண்மை நிலை தெரியாது. அன்று எனது கிராமத்தைச் சேர்ந்த சிலர் வெளியுலகிலும் இக்கதையைப்பரப்ப தீவிர பிரயத்தனப்பட்டனர். வெளியில் யார் யாருக்கு இக்கதை தெரியும் என்று எனக்குச் சரியாகத் தெரியாது. அண்மையில் நான் அமைச்சில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் போது என்னுடன் பட்டப்படிப்பைத் தொடர்ந்த பஸ்யாலையைச் சேர்ந்த ஒரு நண்பன் கேட்ட கேள்வி என்னைத் தூக்கி வாரிப்போட்டது ''மச்சான்... உன்ற ரெண்டாவது மனைவிக்கு குழந்தை கிடைத்துவிட்டதா? என்ன குழந்தை...?" எனக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தேன். அந்த நண்பனிடம் "நான் இரண்டாவது திருமணம் செய்துகொண்டு ஒரு குழந்தைக்குத் தந்தையாகவுள்ளதாக" எனது ஊரைச் சேர்ந்த ஒருவரே கூறியுள்ளார்(ன்) இதை வைத்துத்தான் அந்த நண்பன் அக்கேள்வியை என்னிடம் கேட்டுள்ளான். அவனிடம் சகல விடயங்களையும் விளக்கினேன்.



அவன் கேட்ட கேள்விக்காக என்னிடம் மன்னிப்புக் கோரிக் கொண்டதுடன் அவன் கூறிய ஒரு வசனம் என் மனதில் அழுத்தமாகப் பதிந்தது. மச்சான்... உன்ற ஊரைச்சேர்ந்தவங்க படிச்சவங்க.... ஆனால் பண்பு இல்லாதவங்க...." நான் மௌனமானேன். ஏனென்றால் என்னால் எதிர்த்துக்கதைக்க முடியவில்லை.

இதே போல வெளியிடங்களைச் சேர்ந்த எத்தனை பேர் இன்னும் என்னைத் தவறாக எடைபோட்டுக் கொண்டிருக்கின்றார்களோ எனக்குத் தெரியாது. அவ்வாறான தவறான கருத்தினைக் கொண்டுள்ள ஆயிரத்தில் ஒருவராவது இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையலாம் என்ற ஆதங்கத்திலே இதை நான் மனம் திறந்து எழுதினேன்.

இச்சம்பவம் பழைமை பட்டுவிட்டது.

ஆனால் மானசிகமட்டத்தில் எனக்கு ஏற்பட்ட தாக்கத்திலிருந்து இன்னும் நான் பூரணமாக விடுபடவில்லை. இந்த மானசிக வீழ்ச்சியினால் நான் பல இழப்புக்களையும் சந்தித்தேன். முக்கியமாக என் 'டியுஷன்' வாழ்க்கையில் ஒரு பாதிப்பு ஏற்படவும், விசேடமாக பல ஆண்டுகளாக செய்து கொண்டு வந்த க. பொ. த. (உ/த) வகுப்புக்களை நான் நிறுத்திக் கொள்ளவும் இதுவே மூலகாரணம் என்பது இதுவரை எனக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

சிந்தனை வட்டம் நூறு புத்தகங்களை வெளியிட்டு விட்ட போதிலும் கூட சிந்தனை வட்டத்தின் பிரசாரத்துக்காக நான் என்றுமே, எப்போதுமே அலைந்ததுமில்லை, அலையப்போவதுமில்லை. சிந்தனைவட்டத்தினால் வெளியிடப்பட்ட 'புதியமொட்டுக்கள்'கவிதைத் தொகுப்பு நூலினை சம்பந்தப்பட்ட கவிஞர்கள் சேர்ந்து உடத்தலவின்னையில் விழா எடுத்து வெளியிட்டனர். அதேபோல அல்ஹாஜ் J மீராமொஹிடீன் அவர்களின் 'இஸ்லாமியக்கதைகள்' எனும் சிந்தனைவட்ட வெளியீட்டினையும் விழா எடுத்து வெளியிட்டனர். இந்த இரண்டு புத்தகங்களும் போக ஏனைய எந்தவொரு சிந்தனைவட்ட வெளியீடும் விழாக் கோலம் பூணவில்லை.

சிந்தனைவட்டத்தின் தொன்னூற்று ஒன்பதாவது வெளியீடாக கிழக்கிலங்கையைச் சேர்ந்த பிரபல கவிஞர் கலைமகள் ஹிதாயா றிஸ்வி அவர்களின் "தேன்மலர்கள்" எனும் கவிதைத் தொகுதியினை வெளியிட்டேன். மிலேனியத்தின் ஆரம்பத்திலிருந்து நான் வெளியிட்ட புத்தகங்கள் அனைத்தையும் நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்த வகையில்(இந்திய புத்தக வெளியீட்டில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறையைக் கையாண்டு) வெளியிட்டுவந்தேன். அத்துடன் சிந்தனைவட்டம் தற்போது ஒரு ஸ்திரத்தன்மையை அடைந்திருப்பதினால் பிற எழுத்தாளர்களின் இலக்கியப்படைப்புக்களை வெளியிடவும் முடிவெடுத்திருந்தேன். இச்சந்தர்ப்பத்தில் கவிஞர் கலைமகள் ஹிதாயா என்னுடன் தொடர்புகொண்டார். எனவே அவரின் வேண்டுகோளை ஏற்று 'தேன்மலர்கள்' புத்தகத்தை இரண்டுவாரத்துக்குள் அச்சிட்டு முடித்தேன்.

இலங்கையில் இஸ்லாமியத்தமிழ் இலக்கிய வரலாற்றில் கண்டிப்பிரதேசம் முன்னோடி என்றால் (அறிஞர் சித்திலெப்பே அவர்களால் எழுதப்பட்ட 'அசன்பே சரிதை' யே முதல் இஸ்லாமிய தமிழ் இலக்கிய வடிவம்) இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தை வளர்த்தெடுப்பதில் கிழக்கிலங்கையின் பங்களிப்பு விசாலமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தானோ, என்னவோ கிழக்கிலங்கையில் மூத்த இலக்கியவாதிகள் முதல், கிழக்கிலங்கையில் வளர்ந்துவரும் இளம் இலக்கியவாதிகள் வரை அனைவரையும் நான் நேசித்துவந்தேன். (இந்த நேசத்துக்குக் காரணம் இலக்கியத்தின் பால் எனக்கிருந்த ஈடுபாடே) எனவே கலைமகள் ஹிதாயா றிஸ்வியின் புத்தகத்தை நான் வெளியிட்டது மிகவும் மனமகிழ்வுடன் தான்.

"தேன்மலர்கள்" கவிதைத்தொகுதியில் மற்றுமொரு முக்கியத்துவமும் இருந்தது. அது இலங்கை இலக்கிய வரலாற்றிலே ஒரு முஸ்லிம் பெண் எழுத்தாளரினால் எழுதப்பட்ட முதல் மரபுக்கவிதை நூல் என்பதுமாகும். தங்கை ஹிதாயா தனது 'தேன்மலர்கள்' நூலினை கிழக்கிலங்கையில் வெளியிட விருப்பம் கொண்டு என்னிடம் அனுமதியினைக் கேட்டெழுதினார். என்னுடைய தொழில் நிமித்தம் அவரால் குறிப்பிட்ட திகதியில் (ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த மிகமுக்கியமான கருத்தரங்கொன்றில் நான் கலந்து கொள்ள வேண்டியிருந்தமையினால்) என்னால் அவ்விழாவில் கலந்து கொள்ள முடியாதிருந்தாலும் கூட என் ஆசீர்வாதங்களுடன் அனுமதியினை வழங்கினேன்.

ஒரு பெண்ணாக இருந்த போதிலும் பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் தனித்திருந்து, விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்தார், சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளரும், ஐக்கிய தேசிய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் எம். எச். சேகு இஸ்ஸதீன் அவர்கள் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார், கௌரவ அதிதிகளாக கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக பீடாதிபதி அல்ஹாஜ் எம். எச். எம். ஹாலித்தீன், பிரதேச செயலாளர் ஜனாப் ஏ. எல். எம். பளீல், முதுபெரும் எழுத்தாளர் அன்புமணி, காலாசார உத்தியோகஸ்தர் கே. தங்கேஸ்வரி' போன்றோரும், நாட்டின் பல பாகங்களில் இருந்து முதுபெரும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள், அதிபர்கள் போன்றோரும் சிறப்பதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.

அரசியல் வேறு - இலக்கியம் வேறு. இலக்கியத்தை அரசியலுடன் இணைத்து (அழைக்கப்பட்ட பிரதம அதிதி ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்பதற்காக) இவ்விழாவினை குழப்ப கல்முனைப் பகுதியில் பல சக்திகள் செயல்பட்டன. ஆரம்பத்தில் விழாவுக்காக இடம்வழங்க முன்வந்த அல்ஹிலால் வித்தியாலயமும் (சாய்ந்த மருது) பின்பு இடம் வழங்க மறுத்துவிட்டது. வளர்ந்து வரக்கூடிய கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஒரு பெண் எழுத்தாளரின் இந்த முயற்சிக்கு முதுபெரும் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஏன் ஒத்துழைக்கவில்லை? ஆகவே இலக்கியம் ஒரு சிலரின் கைக்குள் தான் சுருங்கி இருக்க வேண்டும் என்ற நிலைதான் கிழக்கிலங்கை இஸ்லாமிய இலக்கியத்தின் 'விதி'யா? எனக்குப் புரியவில்லை.

ஆனாலும் - ஹிதாயா கிழக்கிலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்றில் மட்டுமல்ல, இலங்கையின் இலக்கியவரலாற்றிலே 'நாயகி'யாகின்றார்.

காரணம் -

1, அரசியலைப் பின்னணியாகக் கொண்டு - இலக்கியக் கூட்டமொன்றினை அதுவும் கிழக்கிலங்கையில் பிறந்து, வளர்ந்து வரும் பெண் எழுத்தாளரின்



இலக்கியக் கூட்மொன்றினை, கிழக்கிலங்கை அரசியல் சக்தியின் பின்னணியில் கிழக்கிலங்கையைச் சேர்ந்த முதுபெரும் எழுத்தாளர்களினால் தடுத்து நிறுத்தப்பட்ட முதல் சந்தர்ப்பம் இது. ஆம்! இலங்கை இலக்கிய வரலாற்றில் அரசியலால் தடுக்கப்பட்ட முதல் இலக்கியக்கூட்டமாகவும் இது அமையலாம்.

2, கிழக்கிலங்கையில் நூற்றுகணக்கான முதுபெரும் இஸ்லாமிய எழுத்தார்கள் இருந்த போதிலும் கூட, நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்த வகையில் இன்டநெட் வலைப் பின்னலில் (வெப்சைட்டினூடாக) இணையப் போகும் முதல் கிழக்கிலங்கை எழுத்தாளர் மட்டமல்ல. இலங்கையிலே முதல் முஸ்லிம் பெண் எழுத்தாளரும் இவரே. எனவே ஹிதாயாவின் 'தேன்மலர்கள்' கிழக்கிலங்கைக்கு மட்டும் உரித்தானதல்ல. தமிழ் பேசும் முழு உலகத்துக்குமே உரித்தானது. இதை எந்த அரசியல் சக்தியால் தடுக்க முடியும்?

ஆமாம் - சிந்தனைவட்டத்தின் தொன்னூற்று ஒன்பதாவது புத்தகமும் பிரச்சினைக்குரியது தான். ஆனால் அப்பிரச்சினைகளே இலக்கிய உலகில் காணப்படக்கூடிய சுயநல நோக்குகளையும், குறுகிய போக்குகளையும், பொறாமை உணர்வுகளையும் என்னால் உணர்ந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது. ஆம் பெரும்பாலான இஸ்லாமிய இலக்கியவாதிகளின் போக்கு..'' உபதேசம் உனக்கல்லடி... ஊருக்குத்தான்..." என்று அமைந்திருப்பதைக்கண்டு வேதனை கொள்கின்றேன்.

இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தினையும் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும் க/ ஜாமிஉல் அஸ்ஹர் மத்திய கல்லூரிக்கு நான் ஆர்வத்தோடு கற்பிக்கவந்து, சொல்லொண்ணா மானசிகத் தாக்கங்களைப் பெற்ற போதிலும் கூட உதவி அதிபராக, பிரதி அதிபராக, ஓரிருவாரங்கள் அதிபராகவும் கடமையாற்றக்கூடிய வாய்ப்பு எனக்குக்கிட்டியது. புதிய அதிபர் பாடசாலையைப் பொறுப்பேற்றவுடன் அதிபருக்கு மிகவும் ஒத்துழைப்பாக நின்று செயற்படவிரும்பினேன்.

அங்கே நிஜத்துக்கும், போலிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

உண்மைக்கும் - நடிப்புக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.

நியாயங்களை சுட்டிக்காட்டப்போய், அநியாயமான பலிச்சொற்களுக்கு இலக்காக வேண்டிவந்தது.

கடைசியாக - நான் பாடசாலைக்கு லீவு எடுத்திருந்த ஒரு நேரத்தில் எனக்காக ஆசிரியர் மன்றம் (Staff Meeting) கூட கூட்டப்பட்டு மிகவும் மோசமான முறையில் வீறாப்புடன் என்னை என் சக ஆசிரியர்கள் (நண்பர்களாக இருந்தவர்கள்) விமர்சித்துள்ளார்கள். கோழைகள் நேரில் கதைக்கத் திராணியற்றவர்கள்.

- பார்த்தால் இது ஒரு கதை போல இருக்கின்றதல்லவா?

எதிர்ப்புகளும், எதிர்பார்ப்புகளுமே, ஒரு மனிதன் வெற்றிக்கு மறைமுகப் பின்னணியாக அமைந்திருக்கின்றன, இதற்காக என் எழுதுகோல் நகரத் துடிக்கின்றது. ஆம் - ஜாமியுல் அஸ்ஹரின் எனது அனுபவங்களை ஒரு கதையாக, அதுவும் இலக்கிய நயத்துடன் கூடிய ஒரு நாவலாக எழுத விளைகின்றேன்,வெகுவிரைவில், இறைவன் நாடினால் சிந்தனைவட்ட வெளியீடாக அந்தநாவலை வாசக நெஞ்சங்களான உங்களுக்கும் வாசிக்க முடியும் எனக்கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இலக்கிய, வெளியீட்டுப் பணியில் மற்றுமொரு பக்கத்தையும் இவ்விடத்தில் விரித்தேயாக வேண்டும், ஆம் பாடநூல்கள், அரசியல் ஆய்வுநூல்கள், விமர்சன நூல்கள், வரலாற்று ஆய்வுநூல்கள் போக படைப்பிலக்கியத் துறையில் நான் ஆறு சிறுகதைத் தொகுதிகளையும் (தேவைகள், நிழலின் அருமை, கரு, அந்தநிலை, நெருடல்கள், யாரோ எவரோ எம்மை ஆள...) அடிவானத்து ஒளிர்வுகள் எனும் நாவலையும், இலக்கிய உலா, இலக்கிய விருந்து ஆகிய இலக்கியத்திறனாய்வு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளேன். இது மட்டுமல்ல இலங்கைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் உட்பட இந்தியாவிலிருந்து வெளியாகும் தரமான முற்போக்கு சஞ்சிகைகளான தாமரை, கணையாழி, தீபம், கலைமகள், தீ. கல்கி, ஆனந்தவிகடன், குமுதம், சாவி போன்றவற்றிலும் என்படைப்புக்கள் வெளிவந்துள்ளன. இதுவரை சுமார் 230க்கு மேற்பட்ட சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன.

ஆனால்...
இலக்கிய விமர்சகர்களின் பார்வைக்கு இவை புலப்படுவதில்லை.
- தமிழ் இலக்கியம்
- மலையக இலக்கியம்
- இஸ்லாமிய இலக்கியம்
- புலம்பெயர்ந்தோர் இலக்கியம்.

இது போல நூற்றுக்கணக்கான வடிவங்களாக இலக்கியத்தை வகைப்படுத்திக் கொள்ளும் இலக்கிய ஆய்வாளர்களுக்கு (?) ஏன் 'தமிழ்ப்பணி' புரியும் இலக்கிய வாதிகள் என்ற ஒரே பார்வையில் தமிழ் இலக்கிய வடிவங்களை இனங்காட்டமுடியாது? ஒரு ஆய்வாளனின் பணி குறுகிய பார்வையில் அமைதல் ஆகாது. அது விசாலத்தன்மை மிக்கதாக அமைதல் வேண்டும், இது தான் என்னுடைய கருத்து. தமிழ் இலக்கியத்தைக் கூறு போடுகின்றவர்கள் - ஒரு வகையில் இனவாதத்தைத் தூண்டக்கூடிய சுயநலமிகள்தான் என்றால் அது மிகையாகாது.

உதாரணத்துக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மலையும், மலைசார்ந்த இடமும் குறிஞ்சி என்பர். இக்குறிஞ்சி நிலத்தின் பொதுப் பண்புகளைச் சங்ககால இலக்கியங்கள் நிறைய வர்ணித்துள்ளன. புவியியல் ரீதியாக நோக்குமிடத்து கடல்மட்டத்திலிருந்து ஆயிரம் அடிகளுக்கு மேற்பட்ட பிரதேசங்களையே மலைநாடு என ஆய்வாளர்கள் வரையறுக்கின்றனர். இலங்கையில் மொத்த நிலப்பரப்பில் சுமார் ஐந்தில் ஒரு பங்கினைத் தனதாக்கி நங்கூரவடிவில் அமைந்துள்ள இக்குறிஞ்சிப் பிரதேசமானது (மலைநாடு) எழில் மிகு கண்டி மாநகரைத் தலைநகராக்கிக் கொண்டு பல்வேறுவகையில் சிறப்புற்று விளங்குகின்றது.

இலக்கியங்கள், இலக்கியவாதிகள் என்று வரும்போது மலையக இலக்கியங்கள், இலக்கியவாதிகள் பற்றிய திறனாய்வுகளின் போக்குகள் ஒரு தலைப்பட்சமாக இருப்பது கவலைக்குரியதே. 'மலையக இலக்கியம்' என்றால் பெருந்தோட்டத்துறைசார்ந்த தொழிலாளர்களின் வடிவம் என்ற நிலை அண்மைக்காலமாக வேரூன்றிவருவது வேதனைக்குரியதொன்றே- மலையகத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர் பிரச்சினை முக்கிமானவை. நசுக்கப்பட்டு,



உறிஞ்சப்பட்டு நாட்டின் சுபிட்சத்துக்காக உழைத்து விடிவைக்காணாமல் உழலும் அப்பாவிகளின் உணர்ச்சிப் பிம்பங்களை உருக்கொடுக்கும் இலக்கியங்கள் இன்றியமையாதவையே. இதை நான் மறுக்கவில்லை. ஆனால் மலையக இலக்கியங்கள்' எனும் பொதுப்படையான கருத்தின் முன், பெருந்தோட்டத்துறை சார்ந்தவர்களுக்கான இலக்கிய முயற்சிகள் ஓர் அங்கம் மாத்திரமே. மலையகத்தில் ஏனைய சமூகத்தினரும் பிரச்சினைகளை எதிர்நோக்காமலில்லை. கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும், அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் நெருக்கடிகளை அவர்களும் தான் சந்திக்க நேரிடுகின்றது. எனவே மலையக இலக்கியத்தின் பரப்பு விசாலமானது. மலையகத்தில் பிறந்து வளர்ந்து - மலையகத்தின் நான் வாழும் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களின் பிரச்சினையை வைத்து இலக்கியங்களைப் படைத்தாலும் கூட மலையக இலக்கிய வாதிகளின் பட்டியலில் - எனக்கு இடமில்லை. ஏனென்றால் மலையகத்தில் உள்ள முஸ்லிம்கள் "ஆகாயத்தில் வாழ்வதாக" மலையக இலக்கிய ஆய்வாளர்கள் கருதலாம்.

அதற்காக நான் கவலைப்படவில்லை.

ஏனென்றால் நான் தமிழ் வளர்க்கும் ஒரு
எழுத்தாளனாகவே இருக்க விரும்புகின்றேன்.

கௌரவம் - புகழ் - விருதுகளைத் தேடி அலைபவனல்ல நான். ஆனாலும் ஏதோ ஒன்றிற்காக விதிக்கப்படும் வரையறைகள் - பக்கசார்பாக அல்லது சுயநலநோக்குடையதாக அமைவதை வன்மையாக எதிர்ப்பவன் நான். ஏனென்றால் அது நாளைய சந்ததியினரைத் தவறான வழிகோலலுக்கு இட்டுச்செல்லலாம். எனவே இவ்விடத்தில் தமிழ் இலக்கிய விமர்சகர்கள், பல்கலைக்கழக தமிழ்பேசும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள் போன்றோரின் நிதானமான வழிகாட்டல் மிகவும் அத்தியவசியமானதென்றே கருதுகின்றேன்.

சுமார் 25 வருடகால இலக்கியப்பணியிலும், சுமார் 12 வருடகால வெளியீட்டுப் பணியிலும் எனக்கு மூன்று கௌரவங்கள் கிடைத்துள்ளன.

1) 1995 ம் ஆண்டில் மத்தியமாகாண இந்து கலாசார அமைச்சினால் அப்போதைய அமைச்சர் திரு. வி. புத்திரசிகாமணி அவர்களினால் ஹட்டனில் நடத்தப்பட்ட மத்தியமாகாண சாகித்தியவிழாவில் விருதும், பொற்கிழியும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டேன்.

2) மலையக கலை கலாசார சங்கம் (HILL COUNTRY CULTURAL ART ASSOCIATION) 1999 இல் நடத்திய 'ரத்னதீப' (RATHNA DEEPA AWARD' 99) விருது வழங்கும் வைபவத்தில் என் இலக்கியப் பணிக்காக மத்திய மாகாண முதலமைச்சர் கௌரவ நந்திமித்திர ஏக்கநாயக்க அவர்களினால் "ரத்னதீப சிறப்பு விருது" வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டேன்.

3) 1998 -ம் ஆண்டில் இலக்கியவாதி திருவாளர் இரா. அ. இராமன் அவர்களின் முயற்சியினால் மக்கள் கலை இலக்கியப் பேரவையினர் நடத்திய அகஸ்தியர் நினைவு விழாவின் போது பேராதனைப் பல் கலைக்கழக தமிழ்துறைப் பேராசிரியர் திரு. அருணாசலம், பேரா சிரியர் திரு அம்பலவாணர் சிவராஜா, கலாநிதி துறை மனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனனிலையல் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு எஸ். தில்லைநாதன் அவர்களின் அன்புக்கரங்களினால் என் இலக்கியப் பணிக்காக வேண்டி பொன்னாடை போர்த்தப்பட்டு, விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டேன். தமிழ்த்துறை அறிஞர்கள் முன்னிலையில் எனக்கு வழங்கப்பட்ட இந்த கௌரவத்தினை என்னால் மறக்கமுடியாது. எனவே தான் அப்புகைப்படத்தினை இத்துடன் இணைத்துள்ளேன்.



விருதுகள், கௌரவங்கள் வழங்கப்படுவதென்பது ஒரு துறையில் ஈடுபட்டுள்ளோரின் சேவையை ஏற்றுக்கொண்டு அவர்களை ஊக்குவிப்பதற்கான உந்துசக்தியே. இந்த விருதுகளின், கௌரவங்களின் உண்மையான நோக்கம், இனம், மதம், பால், வயது போன்ற பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு; சிபாரிசுகள், குடும்பச்செல்வாக்குகள், தலைசொறிதல்களைத் தாண்டி திறமையை உண்மையான முறையில் இனங்கண்டு வழங்கப்படும்போதே துலக்கம் பெறுகின்றது. இலங்கையில் தேசியரீதியில் வழங்கப்படும் 'கலாபூஷணம்' போன்ற விருதுகள் இந்த நிலைக்கு அப்பாற்பட்டன. திறமையை விட அரசியல் செல்வாக்குகள், தனிப்பட்ட செல்வாக்குகளே அங்கு மிகைத்து விடுகின்றன. இதனால் திறமையுடைய எத்தனையோ கலைஞர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மத்திய மாகாண முஸ்லிம் கல்வி, கலாசார, அமைச்சின் இணைப்பதிகாரியாக நான் கடமையேற்றதும், என்னுடைய இக்கருத்துக்களை கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் M.T.M. அமீன் அவர்களிடமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் சம்மேளன தேசிய அமைப்பாளர் அல்ஹாஜ்M.T.M ரவூப் அவர்களிடமும் தெரிவித்தேன். எனவே எமது அதிகாரத்துக்குட்பட்ட வகையில் மத்தியமாகாணத்தில் உள்ள எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் போன்றோரை கௌரவிக்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள் பூரணமாக ஏற்றுக்கொண்டார்கள். இதன்விளைவாகவே 1999ல் மத்தியமாகாணத்தைச் சேர்ந்த 20 கலைஞர்களை



எமது மத்தியமாகாண முஸ்லிம் கலாசார அமைச்சினால் 'கலைச்சுடர்' பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்க முடிந்தது. என் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாக இதுவும் அமைந்து விடுகின்றது.

கடந்து விட்ட காலங்களில் என் இலட்சியப்பாதையில் குறுக்கீடு செய்த இந்த நிகழ்வுகளையெல்லாம் மனம் திறந்து ஏன் எழுதியுள்ளேன் என்றால், என் நாமத்தை என் எழுத்தை மட்டுமே எல்லோரும் தெரிந்து வைத்துள்ளார்களே யன்றி. அந்த இலட்சியப் பாதையில் நான் எதிர்கொண்ட கல்லையும், முள்ளையும் பற்றி எவரும் அறிந்திருக்க மாட்டார்கள். எனதிந்தக் கருத்துக் குவியலின் மூலமாக வருங்காலத் தலைமுறையினரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத் தான் 100 வது வெளியீட்டில் என் மனப்பக்கங்களை விரித்தேன். -வாசிப்பதற்காக!

அது...

வேதனையாக இருந்தாலும் சரி.
வேடிக்கையாக இருந்தாலும் சரி.
தவறாக இருந்தாலும் சரி
நானும் ஓர் மனித இதயம்.
என்னிதயம் பலருக்கும் வெளிச்சமாக
இருப்பதையே விரும்புகிறேன்.
இவ்வுலகம் இருளுக்குள் வெளிச்சமாக,
வெளிச்சத்துக்குள் இருளாக மாறுவதற்குக்
காரணமும் -
மனித மனம் தானே?
ஆமாம் -

★ அன்று முதலாது சிந்தனைவட்ட வெளியீட்டிற்கு பொருளாதாரம் தடைக்கல்லாக அமைந்தது.
★ தொன்னூற்றி ஒன்பதாவது வெளியீட்டுக்கு அரசியல் தடைக்கல்லாக இருந்தது.
★ நூறாவது வெளியீட்டுக்கு.....?????

***எத்தடையும் தாண்டும் சக்தி இப்போது எனக்கு இருக்கின்றது.***

இவ்விடத்தில் 'ரட்யார்ட் கிப்லிங்' என்பவரால் எழுதப்பட்ட
***முடியுமானால்...***
எனும் கவிதையை உங்களுக்காக முன்வைக்க ஆசைப்படுகின்றேன்.

*உன்னைச் சூழவுள்ளவர்கள் நிதானம் தவறிவிட்டு*
*அதற்கான பழியை உன்மீது சுமத்திட்ட போதிலும்*
*நிலைகுலையாது நிதானமாய் நடந்திட உன்னால் முடியுமானால்...*
*எல்லோரும் உன்னைச் சந்தேகிக்கும் போது*
*அவர்களது சந்தேகத்துக்கு இடமளித்து விட்டு*
*உன்மீது உனக்கு விசுவாசம் வைக்க முடியுமானால்....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் பற்றிப் பொய்யுரைக்கப்படும் போது
நீ பொய்யுரைக்காதிருக்க முடியுமானால்.....
மற்றோர் உன்னை வெறுக்கும் போது
உன் மனதில் வெறுப்புக்கு இடமளிக்காதிருக்க முடியுமானால்....
அதிகம் நல்லவன் போல் காட்டிக் கொள்ளாமலும்
பேரறிஞர்போல்பேசாமலும் இருக்க உன்னால் முடியுமானால்...
உன்னால் கனவு காணவும் ஆனால் அக்கனவுகளை
உன் எஜமானராக்கி விடாமலும் இருக்க முடியுமானால்.....
உன்னால் சிந்திக்கவும், ஆனால் அச்சிந்தனைகளே
இலட்சியமெனக் கொள்ளாமலும் இருக்க முடியுமானால்.....
பெருவெற்றியையும், படுதோல்வியையும்
நிதானமாய் எதிர்கொள்ளவும்
அந்த ஏமாற்று வித்தைகள் இரண்டையுமே
ஒரே விதமாய் மதித்திடவும் உன்னால் முடியுமானால்......
உன் சாதனைகள் அனைத்தையும் ஒரே குவியலாக்கி
அவற்றைப் பணயம் வைத்து இழந்திடவும்
இழந்த பின் மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்கவும்
அந்த இழப்புப்பற்றி மூச்சுக்கூட விடாமலிருக்கவும்
உன்னால் முடியுமானால்....
சாதாரண சனங்களோடு உறவாடிப் பழகினாலும்
உன் நற்குணங்களை இழந்திடாதிருக்க முடியுமானால்.....
அரசர்களோடு தான் பவனி வந்தாலும்
உன் சாதாரண தன்மையை இழக்காதிருக்க
உன்னால் முடியுமானால் ....
எல்லோரையும் மதித்துப் போற்றும் அதே வேளையில், எவரையும்
தலையில் தூக்கி வைத்துக் கொள்ளாதிருக்க
உன்னால் முடியுமானால்....
பெறுமதிமிக்க ஒவ்வொரு நிமிடத்தையும்
பயன்மிக்க அறுபது வினாடிகளால்
நிரப்பிட உன்னால் முடியுமானால்....
இந்தப் பூமியும், அதிலுள்ள அத்தனையும்
நிச்சயமாய் உனக்குரியவை தான் மகனே!
அன்றியும் நீ ஓர் உண்மை மனிதனாவாய் மகனே!!

ஆமாம் -

இக்கவிதையில் பொதிந்துள்ள கருத்துக்கள் ஆயிரம் அர்த்தமுள்ளவை.

ஒவ்வொரு இளம் சந்ததியினரும் ஆழமான முறையில் மனதில் பதித்துக்கொள்ள வேண்டிய வாசகங்கள் இவை.

இறுதியாக -

என் உயர்ச்சிக்காக அரும்பாடுபட்ட - ஏழ்மையில் எனது குடும்பம் உழலும் போது குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக பல தியாகங்களைச் செய்து துன்பத்தில் துன்பத்தோடு இணைந்திருந்த என் அன்புத் தந்தை மர்ஹூம் A.C. பீர்மொஹம்மட் அவர்கள் என் இன்பத்தில் பங்கேற்க இன்று என்னுடன் இல்லையே என்பது



என்மனதை அழுத்தும் வடு. அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும், நற்சுவனபதி கிடைக்க வேண்டும் என்றும் இறைவனை மனதாரப் பிரார்த்திக்கின்றேன். அதேநேரத்தில் என் அன்புத்தாயார் சைதா உம்மா பீர்மொஹமட் அவர்களையும் இவ்விடத்தில் நன்றி மனக்கண்ணில் நோக்கவேண்டிய கடமை எனக்குண்டு.

அண்மைக்காலங்களில் - சிந்தனைவட்டத்தின் வளர்ச்சிக்கு நேசக்கரம் நீட்டி ஆதரிக்கும் நல்லிதயங்களுக்கும் இவ்விடத்தில் என் இதய அடித்தளத்திலிருந்து எழும் நன்றிகளைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

★அச்சகத்துறையில் - கட்டுகஸ்தோட்டை J.J. அச்சக உரிமையாளர் Mr. K. VICTORIA அவர்கள் மற்றும் EXPRESS PRINT SHOP உரிமையாளர் ஜனாப் ஏ. ஆர். காமில் மொஹமட் அவர்கள்... இவர்களுடன் அச்சக ஊழியர்கள்... அனைவரும் என் அன்புக்குப் பாத்திரமானவர்களே.

★கணனி - டைப்செட்டிங் துறையில் - Udatalawinna Communication ஐச் சேர்ந்த N. ஆசீக்மெஹமட், செல்வி முனவ்வரா நவாஸ், சஜீர்அஹமட் புன்னியாமீன் மற்றும், கோல்டன்கொமியுனிகேஷனைச் சேர்ந்த அல்ஹாஜ் கலீலுர் ரஹ்மான்.

★புத்தக அமைப்பு, பைண்டிங்துறையில் - உடத்தலவின்னைக் கொமியுனிகேஷனைச் சேர்ந்த ஜனாப் N.L. சாலாஹுதீன், செல்வி ஜெஸீமா ஜெமால்தீன்.

★சிந்தனைவட்ட வெளியீடுகளுக்கு அகில இலங்கை விநியோகத்தரான பூபாலசிங்கம் புத்தகநிலைய உரிமையாளர் திருவாளர் பூ. ஸ்ரீதரசிங் மற்றும் ஊழிய அன்பர்கள். அதேபோல கிழக்கிலங்கை விநியோக முகவரான காத்தான்குடி, பழையவிதி, இலக்கம் 97/3 ஐச் சேர்ந்த மபாஸ் ஹஜ் டிரவல்ஸ் உரிமையாளர் அல்ஹாஜ் மௌலவி எம். ஐ. எம். அபூபக்கர்.அவர்களுடன் அன்னாரின் அன்புப் பாரியார்.

★இவர்களுடன் சிந்தனைவட்ட வெளியீடுகளை நேரடியாகப்பெற்று விநியோகிக்கும் பாடசாலை அதிபர்கள், பாட ஆசிரியர்கள் மற்றும் என் அன்புக்குரிய வாசகநெஞ்சங்கள்...
அனைவருக்கும் நன்றி, நன்றி, நன்றி

இன்ஷா அல்லாஹ் -(இறை நாட்டமிருந்தால்)
ஒரு எழுத்தாளனாகவும்,
ஒரு வெளியீட்டாளனாகவும்,
தொடர்ந்தும் உங்களைச் சந்திப்பேன்.

அது வரை விடைபெறுவது
அன்புடன் - நான்.

(பீ. எம். புன்னியாமீன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

சிந்தனை வட்டத்தின்

**100 வது வெளியீடு**

2 வது பாகம்.

# இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை

{கவிதைத் தொகுதி}

நூலாசிரியர்கள் :

**கலைமகள் ஹிதாயா ரிஸ்வி.**

**மஸீதா புன்னியாமீன்.**

வெளியீடு:
சிந்தனை வட்டம்
14,உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை- 20802
ஸ்ரீலங்கா.

Tel: 0094 - 8 - 497246 / 0094 - 8 - 493746
0094 - 78 - 680645 / 0094 - 70 - 800480
Fax: 0094 - 8 - 497246
E - mail : chinthanai _ Vatt @ hot mail. Com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்
பிரபல மூத்த பெண்அறிவிப்பாளர், (மதுரக் குரலோசை)

## திருமதி ராஜேஸ்வரி சண்முகம் அவர்களது

# ஆசியுரை.

தங்கக் கவிஞன் கனியன் பூங்குன்றன் ஒரே பாட்டால் தனக்கும், தமிழுக்கும், தமிழ்மக்களுக்கும், தமிழ்நிலத்துக்கும், தமிழ் பேசுகின்ற அனைத்தின மக்களுக்கும் இறவாச் சிறப்பை ஈட்டித் தந்தான். என்று அறிகின்றோம். அதனால் தமிழ்ப்பண்பாட்டிற்கும் வான்சிறப்பை நாட்டித் தந்தான் என்றும் படித்திருக்கிறோம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே அந்தப் பாட்டு.

அமுதாம் தமிழ், சாதி, மத, இன பேதங்களைக் கடந்து நிற்கிறது. அந்த இனிக்கின்ற தமிழ் கொண்டு கவிதைஉலகில் தனக்கென ஒரு பெயர் நாட்டிக் கொண்டிருக்கும் கலைமகள் ஹிதாயாவுடன், மஸீதா புன்னியாமீன் இணைந்து வழங்கும் இந்த இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை கவிதைநூலும் காலத்தைக் கடந்து புகழ் பூத்து நிற்கும் என்று நம்புகிறேன். அவர்களது தமிழ்ப்பணியும், இலக்கியப் பணியும் சிறக்க வேண்டும் என்று எட்டி நின்று வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறேன்.

பெண்பாற் புலவர்களும் பெண் கவிதைக் குயில்களும் கூடிய தமிழ் இலக்கியப் பரப்பில் அன்புச்சோதரிகளின் கவிதை மலரும் மானுட இதயங்களில் தமிழ் மணம் பரப்பட்டும்.

அன்று இளங்கவிதைக் குயிலாய் - என் நிகழ்ச்சிகளில் சிறகடித்துப்பறந்து இன்று புகழ்பூத்த கவிதைகளைத் தந்து பெண்ணினத்துக்கு கவிதை பாடும் கவிமகளே உம்பணி தொடரட்டும்.

தமிழ் உம்மை வாழ்த்தட்டும்!



எழுத்தாளரும், பத்திரிகையாளரும்,
அகில இலங்கை சமாதான நீதவானும்,
சத்தியப்பிரமாண ஆணையாளருமான

## சட்டத்தரணி ஏ.எம். வைஸ் B.A.(S.L.) L. L. B

அவர்கள்
**இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தைக்கு**
அன்புடன் வழங்கிய

# இரட்டைப் பரிசுகள்

1

## இது அணிந்துரையல்ல...
## அறிந்தவனின் (சிந்தனை வட்டத்தை) உரை

ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு முன் பாராளுமன்ற சபாநாயகர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான "மும்தாஸ் மஹாலில்" அப்போதைய சபாநாயகர் கௌரவ பாக்கீர் மாக்கார் முன்னிலையில் ஓர் இளைஞன் நிற்கிறான். ஏதோ ஒரு பொதுக்கருமமாக அங்கு சென்ற அந்த இளைஞனை சபாநாயகர் அவர்களின் அந்தரங்கச் செயலாளராக இருந்த தற்போதைய பாராளுமன்ற அங்கத்தவர் அஸ்வர் ஹாஜி கண்டு விடுகிறார். ஏற்கனவே அந்த இளைஞனை அறிந்து வைத்திருந்த அஸ்வர் ஹாஜி இளைஞனை அழைத்து நலம் விசாரிக்கிறார். உயர்கல்வியை முடித்து விட்டு வீட்டில் இருப்பதை அறிந்து கொள்கிறார். திறமை சாலிகளைக் கண்டு விட்டால் சும்மா விடாதவர் அஸ்வர் ஹாஜி. அத்திறமைகளை சமூகம் பயனடையும் வகையில் செய்து விடுவார். இங்கு கட்சிப்பாகுபாடோ பிரதேச வேறுபாடோ கருதப்படமாட்டாது. இது அவரிடமுள்ள மிகச் சிறப்பான குணம்.

இளைஞனின் திறமையை அறிந்த அவர் உடனே தீர்மானத்திற்கு வந்துவிட்டார். அதன் பிரதிபலன் இந்த இளைஞனுக்கு தமிழ் பத்திரிகையில் வாய்ப்பு வழங்கும்படிக் கோரிக்கைக் கடிதமொன்று லேக்ஹவுஸை நோக்கி விரைகிறது. சில தினங்கள் கடந்த பின் இளைஞனுக்கு நேர்முகப்பரீட்சைக்கு வரும்படி அழைப்புக்கடிதம் வருகிறது. அவனுக்கோ மனமகிழ்ச்சி. தான் நாட்டமுள்ள துறையில் ஈடுபட்டு முன்னேற வாய்ப்புக் கிடைக்கிறதே என்ற பூரிப்பு. ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகளுடன் சென்று நேர்முகப் பரீட்சைக்கு முகம் கொடுக்கின்றான். திருப்தியுடன் திரும்பி வருகிறான். சென்ற வேகத்திலேயே அஸ்வர் ஹாஜியின் கோரிக்கைக் கடிதத்திற்குப் பதிலும் வருகிறது. பிரித்துப்பார்த்த அஸ்வர் ஹாஜி அதிர்ந்து போனார். அப்போது அருகில் இருந்த என்கையில் கடிதத்தைத் தருகிறார். வாசித்தேன். சிரிப்புத்தான் வந்தது. இதை என்னவென்பது. தட்டிக் கழிக்கக் காரணங்கள் கூறலாம். ஆனால் ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையை நடத்தியவர்கள் சார்பில் லேக்ஹவுஸ் (The Associated Newspapers of Ceylon Limited) தலைவரால் (Chairman) அனுப்பப்பட்ட அக்கடிதத்தில் இவருக்கு தமிழ், ஆங்கில அறிவு போதவில்லை. இலங்கையில் ஜனாதிபதி முறைபற்றியோ, புதிய அரசியல்திட்டத்தைப்பற்றியோ எதுவிதமான அறிவும் கிடையாது. இவருக்குப் பொது அறிவு அறவே கிடையாது. ஆசிரியர் பீடத்துக்கு இவர் பொருத்தமானவர் என்று நான் கருதவில்லை. இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் முறையாகக் கடமைபுரிய முடியாத வெறும் பிணமாகவே இவர் இருப்பார். (I do not think he is suitable for the Editorial Dept, If recruited he will be a dead weight) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆம்! தமிழிலே பட்டம் பெற்ற அந்த இளைஞனுக்கு தமிழ் தெரியாதாம். விந்தை என்னவெனில் நேர்முகப்பரீட்சையை நடத்தியவர்கள் மழைக்குக்கூட பல்கலைக்கழகத்திற்கு ஒதுங்காதவர்கள். அவர்கள் எடுத்த முடிவே இது.

அஸ்வர் ஹாஜியிடம் உள்ள நற்குணங்களில் இன்னுமொன்று அவர் எழுதும் கடிதங்களுக்கு வரும் பதில்களின் பிரதிகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு சுடச்சுடவே அனுப்பிவிடுவார். அதே அடிப்படையில் இப்பதிலும் இளைஞன் கையை அடைகிறது. அவனோ அதிர்ச்சியடையவுமில்லை. ஆத்திரப்படவுமில்லை. பதிலாக மனதை தைரியப்படுத்திக் கொண்டான்.

தமிழறிவு, அரசியலறிவு இல்லையென முத்திரை குத்தப்பட்ட அந்த இளைஞன் தனது இலக்கியப் பணியை ஆரம்பித்து விட்டான். கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு என சில நூல்களை தானே எழுதி அச்சிலேற்றினான்.

இவனது சிந்தனைகள் வித்தியாசமானவையாக இருந்தன. சமூக, நிகழ்கால சம்பவங்களை இலக்கியமாக வடித்தவர்கள் மத்தியில் சமூகத்தின் எதிர்காலத் தேவைகளை முன்வைக்கும் எழுத்தாளனாக இவன் திகழ்ந்தான். இவனது ஆக்கங்களில் தூர நோக்கு பளிச்சிட்டது. முஸ்லிம் அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட முன்னரே 1983ம் - ஆண்டில் இவன் எழுதிய நாவல் இதன் அவசியத்தை வலியுறுத்தியது. இது இவனது தீர்க்கதரிசனத்துக்கு உதாரணமாகும்.

நூல்கள் வெளியிடுவதன் பிரசவ வேதனையை இவன் நன்கு அனுபவித்தான். அக்காலம் நூல் வெளியிட உதவும் புரவலர்கள் இல்லாத காலம். ஊக்கம் தருவோர், உதவி புரிவோர் மிகக்குறைவு. இலக்கிய வாதிகளையும் கையேந்தி வாழ்வோரையும் சமமாக மதிக்கும் சமூக நிலைப்பாடு. இலக்கியம் சோறு போடாது என்ற கருத்து வேரூன்றியிருந்த காலம். எனவே பிரசவ வேதனை மிகக் கொடூரமாக இருந்தது. கம்பியூட்டர் இல்லாத அக் காலத்தில் தானே எழுத்துக் கோர்த்து அச்சுப் பணியிலும் இறங்கி இலக்கியம் படைத்தான்.



இறைவன் நாட்டத்தை எவராலும் மாற்றமுடியாது. இது எம்மவரின் அசையாத நம்பிக்கை. எழுத்துத் துறையில் தொழிலை எதிர்பார்த்த இளைஞனின் ஆசையை இறைவன் அங்கீகரிக்கவில்லை. நடப்பவை யாவும் நன்மைக்கே என்பது பெரியோர் கூறும் ஆறுதல் வார்த்தை. அதை உண்மைப்படுத்துவதற்காக இந்த இளைஞனை ஒரு சிறந்த ஆசிரியனாக இறைவன் ஆக்கிவிட்டான். ஆசிரியர் தொழிலைப் பெற்ற குறுகிய காலத்திலேயே இவன் ஒரு சிறந்த ஆசிரியனாக ஏற்கப்பட்டுவிட்டான்.

அந்த இளைஞன் தான் இன்றைய கதாநாயகன். ஆம், சிந்தனை வட்டத்தின் சிற்பி. பெயரைச் சொன்னால் பீ. எம். புன்னியாமீன்.

புகழ் மிகு ஆசிரியர் புன்னியாமீன் கடந்து வந்த பாதையை மறந்து விடவில்லை. தான்பட்ட இன்னல்களை மனதில் இல்லாமாக்கிக் கொள்ளவில்லை. ஆசிரியனானதும் கல்வித்துறையில் உள்ள குறைபாடுகள் இவரை உறுத்தின. தமிழிலே உயர்கல்விக்கு நூல்கள் இல்லாத குறையை உணந்து பாடநூல்களை வெளியிட ஆரம்பித்தார். அன்று ஜனாதிபதி முறைபற்றியோ, புதிய அரசியலமைப்புப்பற்றியோ அறிவு இல்லாதவர் என்று லேக்ஹவுஸ் தலைவரால் முத்திரை குத்தப்பட்டதை சவாலாக ஏற்றாரோ என்னவோ. அரசறிவியல் நூல்களை எழுதி வெளியிடுவதில் முக்கிய கரிசனை காட்டினார்.

தான் அனுபவித்த பிரசவ வேதனையை எவருமே அனுபவிக்கக் கூடாது என்ற நோக்கே இவரது சிந்தனை வட்ட உருவாக்கத்துக்கு வழிவகுத்தது. இளம் எழுத்தாளர்கள் வளரும் பயிர்கள்! இதற்கு வழியமைத்து நிழல்தரவே சிந்தனை வட்டத்தை ஆரம்பித்தார். இவர்களது நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். இதன் வெளிப்பாடு இலைமறை காய்களாக இருந்தோர் பலர் சமூகத்தில் இனங்காட்டப்பட்டனர். இலக்கிய உலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

சிந்தனை வட்டத்தினால் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வெளியிடப்பட்ட நூல்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் கவிஞர்கள் இன்று வரை தொடர்ந்து எழுதி பிரபல்யமாகி வருவது குறிப்பிடத்தக்கதே. அவர்களில் சிலரின் பெயர்களை இங்கே குறிப்பிட்டுள்ளேன். கலைமகள் ஹிதாயா, மஸீதா புன்னியாமீன், பீ. எம்.தமீம் அன்சார், அக்குறணை ரிழ்வான்; தலவின்னை சிபார், ஏ. எஸ். நஜிமுதீன், பீ.வீ. நித்தியானந்தன், இஸ்லாமியச் செல்வி A.U.L. செல்வி அபரா, தலவின்னை பூதொர, கெகிறாவை ஸஹானா, நாகபூசணி கருப்பையா, இரா. திருச்செல்வம், கலைநிலா சாதிகீன், N. நவரட்ணம். சுமைரா அன்வர், நீலன் அணை ஜயந்தன், உஸ்மான் மரிக்கார், மரீனா இல்யாஸ் ஷாபி, செல்வி பஹீமா ஜஹான்.

இவர் எழுத்தாளர்களுக்கு ஏணியாக இருந்தார் என்று நான் கூறமாட்டேன். இவர் ஹெலிகொப்டராகவே இருந்தார் என்பேன். ஏனெனில் ஏணி ஏறுபவர்களுக்கு உதவினாலும் அசையாது அதே இடத்தில் இருக்கும். இவர் அவ்வாறாக இருக்கவில்லை ஹெலிகொப்டர் போன்று அவர்களையும் ஏற்றிக்கொண்டு தானும் உயரப் பறந்தார். பிறர் நுல்களை வெளியிட்டதோடு தானும் எழுதி வெளியிட்டார். தனது நூல்களின் எண்ணிக்கையை அதிகரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே எழுத்துக்கோர்த்து அச்சிட்டு வெளியிட்ட நிலை சொந்தக் கம்பியூட்டர் வைத்து இலக்கிய உலகிற்கும் கல்வித்துறைக்கும் சேவையாற்றும் நிலையாக வளர்ந்தது. இவ்வளர்ச்சிக்குக் காரணம் இவரது அயராத முயற்சியும், உழைப்பும், ஊக்கமும் மட்டுமன்றி, உதவும் மனப்பான்மைக்கும், சேவையின் மீதுள்ள ஆர்வத்திற்கும் இறைவன் கொடுத்த நன்கொடை எனத் துணிந்து கூறலாம்.

அண்மையிலே ஒரு பத்திரிகைச் செய்தியை நான் படித்தேன் இது ஒரு நூல்வெளியீட்டு நிகழ்ச்சி பற்றியது. அச்செய்தியின்படி அதுவே கிரிக்கெட் பற்றிய இலங்கையின் முதல் தமிழ்நூல் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தவறான செய்தியாகும். எவ்வளவோ காலத்திற்கு முன் கிரிக்கெட் பற்றிய தமிழ் நூலொன்றை புன்னியாமீன் எழுதி வெளியிட்டு விட்டார். சிந்தனை வட்டத்தின் இந்த வெளியீடுதான் கிரிக்கெட் பற்றி இலங்கையின் முதல் தமிழ் நூலாக இருக்க வேண்டும். இது பற்றி முன்னால் ஸ்ரீலங்கா கிரிக்கட் அணித்தலைவர் திரு அர்ஜுன ரணதுங்க அவர்களே குறிப்பிட்டு வாழ்த்திக் கடிதம் அனுப்பியிருந்தார்.

இவ்வாறான சில தவறான கருத்துக்கள் நிலவ சில காரணங்கள் ஏதுவதாக இருக்கலாம். சிந்தனை வட்ட நூல்களுக்கு நகர்தோறும் வெளியீட்டு விழாக்கள் இல்லை. ஏன் வெளியீட்டு விழாவே இல்லை. பத்திரிகை விளம்பரம் இல்லை. அச்சிட்டு புத்தக விற்பனை நிலையங்களுக்கு அனுப்புவது மாத்திரம் தான். விற்றுத் தீர்த்து விடுகிறது. சில நூல்கள் பல பதிப்புகளை கண்டு விட்டன. இத்னால் விளம்பரம் தேவைப்படுவதிமில்லை, காக்காய் பிடிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

அரசறிவியல் பாடத்தில் கூடுதலான நூல்களை எழுதி வெளியிட்டவர்களை வரிசைப்படுத்தின் இலங்கையில் முதலிடத்தில் புன்னியாமீன் இருப்பார் என்பது எனது உறுதியான நம்பிக்கை. அவர் இது வரை வெளியிட்ட அரசியல் நூல்களின் தொகை 17 ஆகும். அவற்றில் வெளிவந்துள்ள பதிப்புக்களின் எண்ணிக்கை 47. இந்த அளவு தமிழ் அரசியல் நூல்களை வெளியிட்டவர்களை நான் இதுவரை அறியவில்லை.

ஒரு காலத்தில் மிகத் தட்டுப்பாடாக இருந்த சித்திரபாட நூலொன்றைக்கூட சிந்தனை வட்டம் வெளியிட்டது. இதன் மூலம் புதியதோர் எழுத்தாளரை அறிமுகப்படுத்தியது.

இது மட்டுமல்ல பெற்றோர்கள் அயராது கஷ்டப்படும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான நூல்கள் ஏராளமாக சிந்தனை வட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. புலமைப் பரிசில் பரீட்சைக்கான தொடர் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் சிந்தனை வட்டத்தால் செயல்படுத்தப் படுகிறது. இதன்மூலம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மாணவ மணிகளை சிந்தனை வட்டம் தன்னகத்தே இணைத்து வைத்துள்ளது.

சமூக இயக்கங்களின் பாடசாலைகளின் விழாமலர் வெளியீடுகளில் சிந்தனை வட்டத்தின் தாராள மனப்பான்மையும், சேவைத்தன்மையும் புகழப்படுகிறது.



சிறந்த ஆசானாகவும், மனிதாபிமான சேவை நோக்குள்ள வெளியீட்டாளராகவும் உதவும் பண்புள்ளவராகவும், கைகொடுக்கும் தயாள சிந்தனையுள்ளவராகவும் உள்ள புன்னியாமீன் உருவாக்கிய சிந்தனை வட்டமும் அவரது கொள்கைகளை நிலைநிறுத்துவதாக இருப்பதில் வியப்பில்லை.

ஆரம்பத்தில் நான் கூறியபடி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் தொழில் கிடைத்திருந்தால் புன்னியாமீன் எழுத்துத்துறையில் எவ்வளவோ உயர்ந்திருப்பாரே என நீங்கள் இப்போது கருதலாம். அதற்கும் ஒரு விடை இருக்கிறது.

அயல் நாடொன்றில் ஒரு தேவாலயத்தில் நடந்த சம்பவம். அந்த தேவாலயத்திற்கு பொறுப்பாக புதிதாக வந்த பாதிரியார் ஒரு தீர்மானம் எடுக்கிறார். அவரின் தீர்மானப்படி கல்வி கற்றவர்கள் மாத்திரமே தேவாலயத்தில் ஊழியர்களாக இருக்கலாம். அங்கு மணியடிக்கும் ஊழியர் ஒருவர் இருந்தார். இவர் பாடசாலை சென்றதில்லை. எழுதப்படிக்கத் தெரியாது. பரம்பரையாக, தந்தையின் பின் இத்தொழிலைச் செய்பவர். இவரை அழைத்த பாதிரியார் தனது தீர்மானத்தைக் கூறி வேலையிலிருந்து நின்று கொள்ளுமாறு கூறிவிட்டார். அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. வேறு வருமானமும் இல்லை. கல்வி அறிவு இல்லாததால் வேறு தொழில் பெறுவதும் முடியாது. பாதிரியார் தீர்மானத்தை மாற்ற மாட்டார் என்பதும் தெரியும். சிந்திக்கிறான். சிந்திக்கிறான்.
வழி தெரியவில்லை. சிந்தனை அதிகரிக்க ஒரு சிகரெட் புகைக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. சிகரெட் வாங்க வீதியில் இறங்கி நடக்கிறான். நெடுந்தூரம் சென்றாலும் சிகரெட் வாங்கக் கிடைக்கவில்லை. மற்றத் தெருவிலும் இல்லை. மிகத்தூரம் நடந்து சிகரெட் வாங்கி புகைக்கிறான். அவனுக்கு ஒரு புதிய சிந்தனை உருவாகிறது. தேவாலயத்துக்கருகில் சிகரெட் விற்றால் என்ன என சிந்திக்கிறான். அத்தெருவிலே பெட்டிக்கடையொன்றை அமைத்து சிகரெட் விற்பனையை ஆரம்பிக்கிறான். விற்பனை அதிகரிக்க சிறிது காலத்தில் மற்றத் தெருக்களிலெல்லாம் கிளைகளை ஆரம்பிக்கிறான். காலப்போக்கில் அப்பிரதேசத்தின் பிரதான சிகரெட் விற்பனையாளனாக மாறி கோடீஸ்வரனாக மாறிவிட்டான். இவனைத் தமது வாடிக்கையாளராக்கிக் கொள்ள வங்கிகள் போட்டியிடுகின்றன. தமது வங்கியில் கணக்கை ஆரம்பிக்கும்படி இவரைக்கோரி தொந்தரவு செய்கின்றனர். இத்தொந்தரவு தாங்க முடியாது வங்கிக்கணக்கை ஆரம்பிக்கத் தீர்மானிக்கின்றார். வங்கிக்குச் செல்கிறார்.

வங்கி முகாமையாளர் இவரை அமரச்செய்து தானே, கணக்கை ஆரம்பிக்கும் பத்திரங்களை நிரப்பி உதவுகிறார். பத்திரங்களை நிரப்பிய வங்கி முகமையாளர் கையொப்பமிடும்படி அந்தப் பெரும் வர்த்தகரைக் கோருகிறார். அவருக்குத்தான் எழுத வாசிக்கத் தெரியாதே. வெட்கப்படாது தனக்கு எழுத வாசிக்கத் தெரியாது எனக் கூறி விரலடையாளமே இடலாம் எனக் கூறிவிடுகிறார். முகாமையாளருக்கோ அதிர்ச்சி. மனம் நொந்திருக்கும், கவலையுடன் இதனைக் கூறியிருப்பாரோ என நினைத்து அவரைச் சமாளிக்க எண்ணி" எழுத வாசிக்கத் தெரியாத நீங்கள் இந்த அளவு பெரிய வர்த்தகராக உயர்ந்திருக்கிறீர்களே. கல்வி கற்றிருந்தால் இதை விட எவ்வளவு உயார்ந்த நிலையில் இருப்பீர்கள் எனக்கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெரும் வர்த்தகரோ புன்னகையுடன் பின்வருமாறு கூறுகிறார். "நான் கல்வி கற்றிருந்தால் இன்னும் தேவாலயத்தில் மணியை அடித்துக் கொண்டிருப்பேன்"

எனவே அன்று புன்னியாமீன் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் சேர்க்கப்பட்டிருந்தால் சிலவேளை இன்றும் அந்த நிறுவனத்தின் ஊழியனாக இருந்திருப்பார். சிந்தனை வட்டமும் தோன்றியிருக்காது. அவரது சிந்தனைகளும் மழுங்கடிக்கப்பட்டிருக்கலாம். இளம் இலக்கிய வாதிகளுக்கு கைகொடுக்கும் ஒரு மனிதனை இலக்கிய உலகம் இழந்திருக்கும். சிறந்ததோர் ஆசிரியரை சமூகம் பெற்றிருக்காது. மனித நேயனின் உதவிகளை இப்பிரதேசம் பெற்றிருக்காது.

கடைசியாக ஒரு வேண்டுகோள். சிந்தனை வட்டத்தின் சேவை, விலை மதிக்க முடியாதவை. இது ஒரு துறைக்கு மட்டும் மட்டுப்படுத்தக்கூடியதல்ல. எனவே அதன் சேவை மேலும் விரிவடைய வேண்டும். அதன் பயனை அனைவரும் நுகர வேண்டும். அதற்கான சக்தியை இறைவன் வழங்க வேண்டும்.

2

# இது அறிந்தவனின் உரையல்ல...

## ஆசியுரை

அது ஓர் இனிய மாலைப்பொழுது-அலுவலகத்தில் வாடிக்கையாளருக்குரிய நேரம் முடிந்துவிட்டாலும், எமது பணிகள் மிகைத்து விடும். அன்றைய நாள பணிகளை முடிக்கும் பளுவில் இருந்த நேரத்தில் - எனக்கொரு தொலைபேசி அழைப்பு.

''வைஸ் சிந்தனை வட்டத்தின் நூறாவது வெளியீடு வரப்போகிறது. அதற்கு நீங்கள் தான் அணிந்துரை எழுத வேண்டும்....'' உரிமைக் கட்டளையிட்டவர் சிந்தனைவட்டத்தின் பணிப்பாளர் புன்னியாமீன்.

சிந்தனைவட்டத்தின் நூறாவது புத்தகம். பெயர் இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை.

சிந்தித்தேன் - ''இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை....?''

ஒரு தாய்க்கு இரட்டைக்குழந்தை பிறப்பது சாதாரணமான ஒரு நிகழ்வு..



ஆனால் எப்படி இரட்டைத்தாய்களுக்கு ஒற்றைக் குழந்தை பிறக்கப்போகிறது? இது சாத்தியமாகக் கூடியதொன்றா? புதுமைகளைப் புரிவது சிந்தனை வட்டத்துக்குக் கைவந்தகலை. ஒரு வேளை மிலேனியத்தின் நவீன இலக்ரோனிக் யுகத்தில் ஏதாவது நவீன தொழில்நுட்பத்தை சிந்தனைவட்டம் கண்டுபிடித்துவிட்டதா? புரியவில்லை. இரவில் வீடு போய் சேர்ந்ததும் எனக்காக பைலொன்று காத்திருந்தது. அப்போதுதான் புரிந்தது இரட்டைத்தாய்க்கு ஒற்றைக்குழந்தை எவ்வாறு பிறக்குமென்று. பைலில் அனைத்தும் கவிதைகள். இரண்டு பெண்கவிஞர்கள் பற்றிய குறிப்புகள், அவர்களால் எழுதப்பட்ட கவிதைகள் 50க்கு மேல்... ஒன்று கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த கல்முனை - சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைமகள் ஹிதாயா றிஸ்வி. கேட்டறிந்த பெயர் - அவரின் பல கவிதைகளை இலங்கையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் இந்தியாவிலிருந்து வெளிவரும் சமரசம் சஞ்சிகையிலும் படித்த ஞாபகம் உண்டு. அண்மையில் சிந்தனைவட்டம் இவரின் மரபுக்கவிதைகளைத் தொகுத்து 'தேன்மலர்கள்' எனும் பெயரில் வெளியிட்டதையும் அறிவேன். அடுத்தது மஸீதா புன்னியாமீன், தெரிந்து அறிந்த பெயர். தென்மாகாணத்தில் காலி- கட்டுகொடையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருமணமுடித்து உடத்தலவின்னையில் வாழ்ந்துவருகின்றார். திருமணத்துக்கு முன்பு அடிக்கடி பத்திரிகைகளில் எழுதிவந்த போதிலும் கூட திருமணத்துக்கு பின்பு ஏனோ வேகம் குறைந்த விட்டது. இரண்டு திசைகளும் இணைந்த கவிதைகள் மலைநாட்டிலே பிரசவம் காணப்போகின்றது.

இப்போது எனக்கொரு சந்தேகம்-

சுமார் 50 கவிதைகள் மட்டில் என்னிடம் தரப்பட்டிருந்தன. இதில் ஹிதாயாவினால் எழுதப்பட்ட கவிதைகள் எவை? மஸீதாவினால் எழுதப்பட்ட கவிதைகள் எவை? என்பதே எனக்கேற்பட்ட சந்தேகம்.

தொலைபேசியில் புன்னியாமீனுடன் தொடர்பு கொண்டேன் ''என்ன... இதில் 50 கவிதைகளுக்கு மேல் இருக்கின்றனவே. இவை யார் யார் எழுதிய கவிதைகள்... '' வினவினேன். வந்தபதில்'' இரண்டு எழுத்தாளர்களின் கவிதைகள்'' '' அது புரிகிறது. இக்கவிதைகளுள் ஹிதாயாவின் கவிதைகள் எவை? மஸீதாவின் கவிதைகள் எவை? '' மீண்டும் வினவினேன். ''அது தான் இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தையாச்சே.'' கடைசிப் பதிலாகி விட்டது.

எனவே கவிக்குழந்தைகளின் தாயைத்தேடும் முயற்சியை நான் கைவிட்டு விட்டேன். வாசகர்கள் அவற்றை இனங்கண்டு கொள்ளட்டும்.

இலக்கிய பூமியில் இரட்டையர் பலர். கபில - பரணர் முதல் கு. ப. ரா- பிச்சைமூர்த்தி, றமேஷ் - உதயன் வரை இப்பரம்பரை நீண்டு, இன்று கிழக்கும், தெற்கும் இணைந்ததினால் ஹிதாயாவும், மஸீதாவும் ஒற்றைக்குழந்தையைப் பிரசவிக்கின்றனர். கவிதைகள் இதயத்தில் மணம் வீசுவதைக்கண்டும், கேட்டும் பார்த்தும் வாழுபவர் பலர். கண்டும் காணாது செல்பவர்கள் சிலர்!! சிந்தனைகளுக்கு உரமிட்டு வாடும் பயிர்களுக்கு கவிப் பனி தூவி, நேசிக்காத நல்நெஞ்சங்களையும் நேசிக்கவைக்கும் கலையுள்ளங்கள் பலர் எம்மிடையே உளர். அந்த வகையில் ஹிதாயாவையும், மஸீதாவையும் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்க்கும் போது முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு குறைவானதாகும். அதிலுள்ள பெண் எழுத்தாளர்களோ மிகமிகக்குறைவு. இளம் வயதில் சில பெண் எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கிய போதிலும் கூடஎழுத்துத்தறையில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதோ விரல்விட்டெண்ணக் கூடிய ஒரு சிலரே. 1980ம் ஆண்டுக்கு முன்னைய காலங்களோடு ஒப்பு நோக்கும் போது 1980ம் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் ஈடுபாடு அதிகரிக்கலாயிற்று. அக்காலகட்டங்களில் எழுத ஆரம்பித்த பெண் எழுத்தாளர்களுள் இருவரே கலைமகள் ஹிதாயாவும், மஸீதா புன்னியாமீனும் ஆவர். இதில் கலைமகள் ஹிதாயா றிஸ்வி, இலங்கை இலக்கியவரலாற்றிலே முதலாவது மரபுக்கவிதைத் தொகுதியை வெளியிட்ட பெருமைக்குரிய முஸ்லிம் பெண்மணி.

இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தையில் மொத்தமாக 59 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவைகள் அனைத்துமே புதுக்கவிதைகள். இக்கவிதைகளுள் பல கருத்தாழமிக்கவை. சமூக உணர்வுகளைத் தூண்டக்கூடியவை. அரசியல், பொருளாதாரம், கல்வி, சமயம் என பல துறைகளையும் தொட்டுத் தழுவும் அதே நேரத்தில் இவர்கள் காதலையும் விட்டுவிடவில்லை.

முதுபெரும் எழுத்தாளர்கள் அல்லது முன்னணி எழுத்தாளர்கள் (?) என்று கூறிக்கொள்வோர் சிலர் எழுத்துக்களைப் பார்க்க தமிழ் அகராதியை பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பாமர மக்களை விழித்து எழுதப்படும் கவிதைகளோ- ஆக்கங்களோ படித்தமக்களால் கூட விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால் ஹிதாயாவினதும், மஸீதாவினதும் கவிதைகள் அப்படிப்பட்டவையல்ல. சாதாரண பாமர மக்களால் கூட வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் சரளமாக உள்ளன. ஒரு சில கவிதைகள் குறைப்பிரசவமாக இருந்தாலும் உயிர்வாழும் சக்தி கொண்டதாகவுள்ளன.

எப்படியோ -

இக்கவிதைகளை மதிப்பீடு செய்ய வேண்டியது வாசகர்களாகிய உங்கள் பொறுப்பு.

மிலேனியத்தில் இலங்கையில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் கவிதை நூல்களையும் எழுத ஆரம்பித்து விட்டனர் என்ற செய்திக்காக மகிழ்ச்சியடைவதுடன், இரண்டு நூலாசிரியர்களினதும் படைப்புக்கள் மேலும், மேலும் இலக்கியவானில் உலா வர வேண்டும் எனப் பிரார்த்தித்து . வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.

ஏ. எம். வைஸ்
தேசிய சேமிப்பு வங்கி
கண்டி.



# எம்முரை.

**இதயத்தின் அடித்தளத்திலிருந்து ஊற்றெடுப்பதே கவிதை.!**
**இந்த ஊற்றிலிருந்து கலைத் தாகத்தைத் தீர்த்துக் கொள்பவர் சிலரே!**

மகத்தான மாற்றங்களை மனங்களில் ஏற்படுத்தும் வல்லமை கவிதைகளுக்குண்டு. இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தையாய் இங்கு உலா வரும் நாமோ. மரபுக் கவிதையோடு நிழலாடியவர்கள். இன்று புதுக் கவிதையின் பக்கமாகவும் எமது சிந்தனை தென்றலாய்த் தடவுகிறது.

கலையுலகில் சங்கமித்த எம் கவிதைகளும் நாமங்களும் கலையுலக நாவுகளால் வாசிக்கப் பட்டவைகள். அதனால் நாம் புதியவர்கள் அல்லர். கவிதா வானில் கொடிகட்டிப் பறப்பவர்களும் அல்லர். ஊற்றெடுக்கும் சுனை போல கவியுலக மண்ணில் நாம் கசிவுகளாக இருந்து வருகிறோம்.

எம் கவிப்பூக்களை நுகர்வோரால் தான் அதன் வாசம் பற்றிக் கூற முடியும். விமர்சனத் தென்றலிலே தான் எம் கவிமணம் தொடர்ந்தும் பரவிச் செல்ல இயலும். சிந்தனை வட்டத்தின் 100வது வெளியீடாக எமது "இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை கவிதைத் தொகுதியை" நூல் வடிவம் கொடுத்து எமது வளர்ச்சிக்கு வித்திட்ட சிந்தனை வட்ட ஸ்தாபகத் தலைவர் அவர்கட்கு எம் இதயம் செழித்த நன்றித் தூவல்கள்.

சிரமம் பாராது, எமது தொகுதிக்கான அணிந்துரையை எழுதித்தந்த சகோதரர் சட்டத்தரணி ஏ.எம். வைஸ் அவர்கட்கும் எமது அடிமனத்து நன்றிகள் என்றும் உரித்தாகும். எம் இலக்கிய சுவாசிப்பில் மூச்சாகிக் கொண்டிருக்கும் பிரபல அறிவிப்பாளர் சகோதரி ராஜேஸ்வரி சண்முகம் அவர்களும், சகோதரி பூர்கான் பீ இப்தீகார் அவர்களும், அந்நாளில் தினகரன் உதவியாசிரியராக இருந்த சகோதரர் சித்தீக் காரியப்பர் அவர்களும் என்றும் எம் நன்றி மனக் கண்ணில் நிழலாடுபவர்கள். அத்தோடு, எம் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், உரமூட்டிக் களம் கொடுத்த கலையுள்ளங்களுக்கும், எம் கலைப்படைப்புகளை அறுவடை செய்யக் கழனிகளாய் அமைந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், மாசிகைகள் அத்தனைக்கும் எமது இதயத்து நன்றியுணர்வைத் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நன்றி.

ஹிதாயா – மஸீதா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வட்டத்தின்

100 வது வெளியீடு

# இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை

{கவிதைத் தொகுதி}

நூலாசிரியைகள் :



## கலைமகள் ஹிதாயா ரிஸ்வி.
## மஸீதா புன்னியாமீன்.



## நேச நிகழ்வுகள்.



நெஞ்சில் உதைக்கும்
நினைவுகளின் தாக்கம்!

✓✓✓✓

விருப்பங்களால் விளையும்
உறவின் தாகங்கள்
தணியாது நடை போடும்

✓✓✓✓

வாசல் தேடும்
வாலிபப்பராயங்கள்
நேசத்தோடு
நெகிழ்வையே எண்ணி
நெஞ்சை வருடும்.

✓✓✓✓

சந்திப்'பூ' க்கள்
சிந்திப் போகும்
மகரந்த மதுக்குடத்தின்
தளம்பல்கள் -
மகிழ்ச்சித் தாளம்
கக்கும்.

✓✓✓✓

வீரியம் மீறிய
தாபங்கள்
போடும் களியாட்டங்கள்
ஒரு பொழுதில்
உதிரமும் ஒன்றாய்சேர
உதடுகள் ஒட்டி
உரிமையுடன் உலகை ஆளும்!

✓✓✓✓

அன்பின் ஆதுரமும்
அணைப்பின் அகலங்களும்
மூச்சோடு கலந்து
முழுமதி நிலை போல்
தனி சுகம் பறிக்கும்!

✓✓✓✓

ஒரு மலரின் தேடல்
கனவு எல்லைகளைக்
கடக்கக் கருவாகி -
சுவடாய்ப் பதிந்திருக்கும்!

✓✓✓✓



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் கோடுகள்

ஒரு முதுமையடைந்து போன
பணக்கார மலருக்கு
என்னைச் சமர்ப்பணமாக்கிய
பெற்றவர்களே!
என்னை
சந்தையிலே விலைப்படுத்தி விட்டு
சந்தோஷத்தை
வாங்கித் தந்ததாய்க்
கனாக்காணும் நீங்கள்
சீதனமந்தையிலே சூடாய்ச்
சிக்குண்ட எந்தன்
நிலையை அறிவீரோ?



⌃ ⌃ ⌃

ஒரு
ஏழை இதயத்துக்காய்
விழி எறிந்த நாட்களை
இன்று எண்ணி எண்ணி
ஏங்குகின்றேன்.
செய்து விட்ட துரோகத்துக்காய்
இன்று -
மூன்று லட்சத்துக்கு
விலைப் பொருளாகி
முடமாகித்
தண்டனை பெறுகின்றேன்.

⌃ ⌃ ⌃

நிம்மதிகளைத் தேடுகின்றேன்,
எனக்காக
இதயம் இழந்த அவளுக்கு
மீண்டும்
வசந்தத் தூதுவிடுவேன்!
ஆனால்,
பாவம் வெறும் சடங்காகிப்
போன இந்த
முதுமைக் கன்னியின்
திருமணம்
அழிந்து போகக் கூடா(து)
என்று தான்

பெற்றோர்களால்
எழுதப்பட்ட
இந்த முதுமைக்கன்னியின்
திருமணம் கூட
"வெறுங் கோடுகள்"

⌃ ⌃ ⌃

நாங்கள் வாழ்கிறோம்
வாழ்க்கை இருவருக்குமே
"வெறுங்கோடுகள்"
ஆகிவிட்டன.!



# இன்றும் நாளையும்!

சமகாலத்துக்குத்
துப்பாக்கிகள் நன்கொடை!
துப்பாக்கி தூக்கிய கரங்கள்
வீதிகளில்-
சுதந்திரத்தைப் பறித்து
எங்கு தான் சேமிக்கிறதோ...?



தேடுதல் வேட்டை
என்ற போர்வைக்குள்
காக்கிச் சட்டையின்
காம விழிகள்
நிர்வாணம் தேடும்!
சில பொழுதுகளில்
கிராமத்து வாலிபங்கள்
பலாத்காரப்படுத்தப்பட்டு
துப்பாக்கி முனையில் கதி கலங்கி
கற்பைக் கெடுத்துக்
கண்ணீர் வடிக்கும்!

சமாதான முடிவுகளின் -
இறுதி முடிவுரை
துப்பாக்கிகள் தொழில் புரியும்!
புதுயுகம் தேடும்
இதயங்கள் நரைத்துப் போக...
பிணக்குவியல்களுக்குள் -
சுதந்திரம் நாற்றமடிக்கும்!

ஒரு நாள்
இங்கே....
இலங்கைப் பூமி
"ஸஹாரா" நிலமாகும்!
அப்போது...
பிறைக்கொடி ஒன்று!
பறந்து வரும்!
நிச்சயமாய்...
நிச்சயமாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவும் நெருப்பும்

நிலவு சுடுகிறதாம்
ஏன்....
பிரம்மச்சாரிகளோ
நீங்கள் ...?

♏ ♏ ♏

அல்லது...
அக்கினிகளைக் கூட
நிலவென்று
நெருங்கினீர்களோ?

♏ ♏ ♏

நிலவு-
குளிர்மையானது
ஆனால் ... அதை
நேர்மையோடு
நெருங்கும் போது
மட்டும் தான்.

♏ ♏ ♏



ஓ... புரிகின்றது
நீங்கள்
வரையறை மீறி...
நிலவைத் தொட்டு விட்டீர்கள்
போலும்
அந்தச் ...
சில நேரங்களில்
நிலவுகளும்
அக்கினியாவதுண்டு
அப்போது -
நிலவும் சுடும்தான்.



## அன்றும் இன்றும்

இரட்டை இதயங்களை
காதல் அம்பு ஒன்று
துளைத்து விட்டது.
இன்ப வேதனை!
கண் முன்னே விரிந்த
கனாக்கள்....
அவள் விழிக் குளத்தில்
நீர் முத்துக்களைக்
கோர்க்க.....,

❊ ❊ ❊

அவன் சொன்னான்
'கண்ணே கலங்காதே!
காலமெல்லாம்
உன் கண்கள்
கலங்காமற் பார்ப்பது
என் பொறுப்பு-

❊ ❊ ❊



காதல் கனிந்து
காவலானது.
நனவாகாமற் போன
கனாக்களால்
அவள் விழிக்குளத்தில்...
மீண்டும் உடைப்பு

❊ ❊ ❊

'அடச் சீ...
அழு மூஞ்சிகளைக் கண்டாலே'
பிடிக்காது எனக்கு!
அவன் சொன்னான்.

❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயம் தரட்டும்.



நாங்கள் பெண்கள்!
எங்களது -
இளமைக் காலங்கள்
சீதன வரமில்லாது
சீரற்றுக் கழிகின்றன.
இதயமேயில்லா
இளைஞர்கள் சிலரால்
உருவாக்கப்பட்ட
சீதனப்பசிக்கு
எங்கள் இளமைகள்
பலியாகின்றன!
எங்களது
கருவறையிலேயே
உருவாகிய
அவர்களே
எங்களினத்தை
விலை பேசிக்
கொலை செய்கிறார்கள்.
நீதி தேவனின்
நியாயவிடிவுகள்
நாளை -
நல்ல முடிவுகளைத்
தரட்டும்!





# மழை !

வற்றிக் கிடக்கும் வரண்ட பூமியைத்
தொட்டுத் தழுவும் -
உனது
தூய கரங்களுக்குத்தான் எத்தனை குளிர்ச்சி?

இரவென்ன பகலென்ன
வானங் கருக் கொண்டால்...
உன் ஜனனம் நிகழ்கிறது!
பூமி மகிழ்கிறது!

நீ!
இல்லாத நாட்களில்
பொல்லாத புழுக்கம்,
இருக்கிற நாட்களில்
இப்புவியே வழுக்கும்!

நீ வருகை தருங் காலத்தில்
வெள்ளம் பாய்ந்தோடும்!
உனது
விபரீதப் போக்கினால்
கண்ணீர் வெள்ளமும் பாய்ந்தோடும்!

நதிக்கரைகளில் அலையடிக்கும்
கடற்கரைகளில்
வெண்நுரைப் பூக்கள்
விரிகின்ற மாரி காலம்,
உன்னைச் சுமந்த மேகங்களின்
ஊர் கோலம்!

கண்ணுக்கு குளிர்ச்சி தரும்!
இந்த -
மண்ணுக்கே மகிழ்ச்சி வரும்!!

மீனோட,.
நாரைகள் தவமிருக்கும்!
ஏரோடாத கழனிகளில்
ஏரோட ... எங்கும்
பைங் கூழ் விளைந்திருக்கும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைத் தளையறுக்கும்
வல்லபம் உன்னுடையது!
நீ இல்லையேல்
எந்த மண்தான் பொன்னுடையது?

கொட்டும் ... இடிமின்னல் ... காற்று...
"கூஹ் கூஹ்" வென்று
குரலை ஒலியெழுப்ப...
முட்டும் மரக் கிளைகள்
மோதிச் சல சலக்க...
கார் கால மேகங்கள்
காவிச் செல்லும்
பல்லாக்கிலே -
நீ வீற்றிருந்து
விஜயஞ் செய்கின்றாய்!

சகாராக்களை
சல்லாப புரியாக மாற்றும்
சக்தி உன்னுடையது!

நீ கொடை வள்ளல்.
அள்ளிக் கொடுக்கும் போது தான்
இடையூறு அதிகம்!





## ஓடாதீர்கள்

ஓடாதீர்கள் -
எத்தனை
ஏழ்மைமலர்களில்
தேனைத் திருடினீர்கள்,
ஓடாதீர்கள்.

◆ ◆ ◆

முகமூடித் திருடர்களைக்
கூடப் பிடித்து விட்டோம்
உங்கள்
முகங்கள்
எமக்கு மனப்பாடம்.
கைது செய்வதில்
கருணை காட்டமுடியாது!

◆ ◆ ◆



எங்கள்-
மலர்களின்
முட்களை ஒடித்துத்
தேனையுண்டது
உங்கள் பொழுதுபோக்கு
என்றால்..,

◆ ◆ ◆

எங்களுக்குக் கூடப்
பொழுது போகவேண்டாமா?
நாமும்-
வண்டுகளைத் தேடித் திரிகிறோம்
மயக்குவதற்கு அல்ல
குத்திக் கிழித்து.....
குதறி எறிவதற்கு!

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள்

நாங்கள்
மத்திய கிழக்கு நாடுகளில்
வேலை பார்க்கும்
பணிப் பெண்கள்!
சீதனத்திற்காக...
கற்பிழந்த
கன்னிகள்!

வரதட்சனையின்
தாக்கம் சகிக்க முடியாமல்
வெளிநாடுகளில்
தஞ்சமடைந்து
கல்யாணத்திற்காக...
பொருள் தேடியவர்கள்!

எங்களின்
மன ஓலங்களெல்லாம்
சவூதியில் - குவைத்தில்
தஞ்சமடைந்து விட்டன!

இதனால் -
எங்களுக்கு
சீதனத்தின் தாக்கம்
இப்போ புரிவதில்லை!





## சுதிவருமா...? துளிவிழுமா...?

வழுக்கக் கம்பத்தில்
வாழ்க்கையின் நோக்கங்களை
விதைத்துப் பார்த்தேன்.
வீணான விதைதான்
சறுக்கி விழுந்துவிட்டேன்.

கிழக்கு வெளிக்கு மென்று
கீழ்வானை நோக்கினேன்
இலக்குத் தெரியாமல்
இருள் சூழ்ந்து கொண்டது.
ஏமாந்த நிலை தான்!

இன்று,
சிரிப்பு, என்னை பொறுத்தவரை கறுப்பு.
வெறுப்பு, எனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பு.
நினைப்பு, என் இதயத்தை எரிக்கின்ற நெருப்பு.
நெஞ்சிலிருந்து நினைவுகள் - வெளிநடப்பு.

ஏழை பசியால்
கொட்டாவி விடுகையில் - அவள்
விலா வென்புகளாவது சிரிக்கும்
பாவம் நான்!
தொண்டைத் தண்ணீர்
வற்றியபின்னர்
சிரித்தால் சுதி வருமா...?
கண்ணீர் ஊற்று
வற்றியபின்னர்
அழுதால் துளி விழுமா...?
ஊமை வினையின்
ஊன நரம்புகளும்
என் சோகத்தில்
முகாரி இசைக்கின்றன.

அடிக்கடி ஆதங்கப்பட்டு - என்
இதயம் சல்லடையாகி
அதில் அரிக்கப்படுகின்ற
சோகத் தூவல்கள்
பாவம்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தை தசையாய் படைத்த பிரமன்
அதை கல்லாகப் படைத்திருக்கலாம்.
வேதனை விழுமியங்களில்
இப்படி வெதும்பி விடாமலிருந்திருக்கும்.
உணர்ச்சிகள்
ஊற்றுப் பெறாமலிருந்திருக்கும்.
சோகம் நெஞ்சை - இப்படி
சுவை பார்த்திருக்காது.

இதயத்திலிருந்து
வருகின்ற குருதித்துளிகள்
கவலை என்ற சுலோகத்தை தாங்கி
ஆர்ப்பாட்டம் செய்கின்றன.

உதயத்தின் அஸ்தமனம் என்று
என் வாழ்க்கை
விதி வழியைப் பாடுகின்றது.

அதி மஞ்சல் மலரென்று
தீயின் கொழுந்தினையல்லவா
முகர்ந்து விட்டேன்.
முகந் தீய்ந்து - மீளாத்
தழும்புகளாகி விட்டது!

காலங்கள் கரைந்து
நான் குடித்த
மனப்பாலும் நிறைந்து
கானல் நிலவாகி விடக்
கண்ணீர் வடிப்பது தான்
என் விதியா...?





# இரக்கமே இல்லையா...?

வாலிபத்தின் வருடலிலே
இருதயத்தின் இரத்தத்தை
உறிஞ்சிக் குடிக்கின்ற
உஷ்ண நினைவுகளே..,
உங்களுக்கு
இரக்கமென்பதில்லையா...?

இரவுகளிலெல்லாம்
என் விழிகள்
உறக்கத்தை ஒத்தி வைத்துவிட்டு
தலையணையை
ஸ்நானஞ் செய்து கொண்டிருக்கின்றனவே!

ஓ ...
அழுவது. அவன் எனக்களித்த
ஆயுட் தண்டனையா...?
நான் ஏமாற்றத்தின்
ஆயுட் கைதியா...?

" காதல்"
இந்த
அந்தரங்க மூச்சுக்கள்
ஆத்மாவின்
அந்தங்களிலா போடப்படுகின்றன.?



அவன்-
கேட்டானே - அன்று
என்னை மறந்து விடு என்று.
அவனுக்கு மட்டும்
எந்த அரங்கில்
இந்த முடிச்சுக்கள்....?

காதலினை
கெட்ட கனவு என்று
மறப்பதென்றால்
பூட்டி வைத்த ஆசைகளை
பொசுக்குவதா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்
இதயச்சுவர்களிலே
எதிரொலிக்கும்
அவனின்
சில்லறைச் சிரிப்பொலிகள்
என் செவிகளை
இறுக மூடியும்
இன்னும்
செவிடு பட ஒலிக்கிறதே!

அன்றைய கனவுகளே!
அடிக்கடி
உங்கள் வருகையினால்
கண்கள்
பெருக்கிக் கொண்டிருப்பது
கண்ணீரல்ல - அலை
காதல் ரணங்களின் கருக்கள்!





## ஒரு பெருமூச்சில் விழும் காட்சிகள்.

விழிக் குளங்கள்
கண்ணீரை இறைக்கும்.

விசனமில்லாத
முகங்களுக்குள்
விஷமேறிய தேள்களாக
சில முகவரிகள்!

கிடைக்காத போதும்
கிடைத்த பொழுதும்
கேள்வியையே
வெளிவிடும்
மூச்சுக் குழல்கள்...!

பாலையும் நீரையும்
பகுத்தறிந்து
நோக்கும்
அன்னமும் இது கண்டு
அலறித் துடிக்கிறது!

ஓ...
அந்த இருளுக்கும்
வேறு
வேலையில்லை -
மனிதர் மனங்களில்தான்
குடி கொண்டது!

கொடுமையும்
கொடிய பார்வையும்
என்னில் படுவதனால்
என் விழிகள்
என்றுமே....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக்குமுறல்

சமூகத்தை எண்ணி
சதமேனும் பயனில்லை
தென்றலையும்
சண்டமாருதமாய்
மாற்ற...
அதற்குத் தெரியும்!

சுகத்தை சுமந்து
துயிலவும் இங்கு
சுதந்திரம் உண்டோ...?

ஆடவிட்டு
இடையில்
கால்களைத்தறிக்கும்
கைகள் தானே
இந்தச் சமூகம்!

பெண்மையிலும்
பேரிடி போல்
விழுவது
இந்த சமூகத்தின்
தலைகள் தானே!

அதனால்
யார் சொல்லுவார்
அடிமைக்கும் இங்கே
அடைக்கலம்
உண்டு என்பதாக!









## நஷ்டஈடு!



அந்தக் -
குண்டு வெடிப்பில்
நானோர்
அங்கவீனனாகிப்போய்...

மாற்றானின்
இரத்தத்தை
உடலில் வாங்கி...
மூச்சிழந்து...
மூச்சிழந்து...

அங்கலாய்ப்புகளுக்கு
மத்தியிலே -
இதயம் ஊமையாய்
அழுது ... அழுது...
நஷ்டஈடு
என்ற பெயரில்
கட்டுக் கட்டாய்க்
காசுகளுடன்
நான் -
பசியைப் போக்கினாலும்

இழந்து போன
என் அங்கங்களை -
யார் - இனித்
தருவார்கள்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவளின் சோக வரலாறுகள்!

கடல்நீரில்
கரைத்து விட்டேன்
எனது இலட்சியத்தை.

▼▼▼

இனி....,
திசையறி கருவியற்றது
என் பயணம்.

▼▼▼

இது - ஒரு
பிரயோசனமற்ற
வாழ்க்கை.
எங்கேயும் செல்ல
உறவினர்
இன்றிப் போனேன்

▼▼▼

பிறந்தது....,
பெற்றோரை இழந்து!
கண்ணீர் கடலில்
தத்தளிக்கிறது
எனது மன ஓடம்!

▼▼▼

அதில் வெளியாகின்ற
இவளின் -
சோக வரலாறுகள்.

▼▼▼

எனினும்
இரு கரம் ஏந்துவேன்
வாழ்வதற்காய் அல்ல
மரணிப்பதற்காய்.

▼▼▼

பூமியில் -
உதயமான
காலந் தொட்டு
இன்று வரை
" உயிர் இழப்புகள்"
மட்டுமே!
தண்டனையெனினும்
கொலையானதற்குப் பின்
நாங்களும் - சடலங்களும்
நம்மில்
அனுதாபப் பார்வைகளும்!
அனுமதியின்றித்
தொடரலாம்.
நிம்மதியின்றி,
நான் எனும் பாவி!







# எழுத்து வீரமும் எழும் கவிதையும்!

நேர்மையின் விலகல்கள்
நிஜங்களை மறைக்கும் ...

▬ ▬ ▬

போலி வேஷங்கள்
நாசத்தின் கருவாகி
நடை போடும் ....

▬ ▬ ▬

தொடர்பறுந்த
சுகங்களைத் தேடி
மனித உயிர்
மண்டையை பிளக்கும்.

▬ ▬ ▬

வாக்குகளை வாதமாக்கி
உலகியல்
ஞானம் புதைக்கும்.
எழுத்து வீரம்
எளிதில் மறையும்.

▬ ▬ ▬

நிறமாறுதலும்
நெளிந்த கோஷங்களும்
நேர்மை விளிம்பில்
கருகிப் போக -
கவிதை பிறக்கும்!

▬ ▬ ▬



# எதிரிகளைத் தேடும் ஆவிகள்!



என் உடல் உஷ்ணம்
வியர்வை சிந்தும்படி
வேதனைகளால் -
கசிந்து - ஈரம்
ஊற்றெடுப்பதுண்டு.

● ● ●

சூரியன் தடவ,
கரங்கள் -
கைக்குட்டையை நாட...
கிளம்பும் புழுதிகளால்
சுவாசம்
தும்மலை விட...
மீண்டும்
கைக்குட்டையை எடுத்து
முகத்தை துடைத்து
பவுடரை போட....
வாசம்....
வீசும் -
தென்றலில் கலந்து!

● ● ●

சகீ..
வந்து பாரடீ..
என்
வீட்டு முச்சந்தியின்
முன்னாலிருக்கும்
மயானத்தில்
எல்லாவற்றையும்
காணலாம்
நேரில்...
எமக்கும் மனப்பயம்
சுரப்பதால்
நமக்கு நாமே
பாதுகாப்புத் தேடுகிறோம்!
துர் நாற்றம் வீசுகின்றது!
அதனுள்ளே -
நாய்களும்....
நரிகளும் ...
பேய்களும்...
வேட்டையாடுகின்றன!

● ● ●

எதிர்வரும்
திங்கட்கிழமை
அவைகளுக்கு
கொள்ளிவைக்கப் போகிறேன்!

● ● ●

அப்போ -
சில நேரம்
தீயிலே பாயும்
அந்த ஆவிகள்
எதிரிகளை
தேடிப் பிடிக்கும்!

● ● ●



# கந்தூரிக் கனவுகள்

கனிதரு மரமெலல்லாம்
வண்ண நிறங்களில்
'பல்ப்' பழங்கள்
தொங்கும்
பள்ளி முகப்பெல்லாம்
விஞ்ஞான வீறாப்பில்
வர்ண ஜாலங்கள்
கண்ணாமூச்சி விளையாடும்.

★★★

அழுது வடிந்த
தெருவிளக்கெல்லாம்
அங்கம் அங்கமாய்
விமர்சிக்கும்:
அலங்கார மேடையில்
மௌலவியின் குரல்
'லௌட்ஸ்பீக்கரில்'
முகாரி பாடும்

★★★



சிதறிப் பரந்த
ஒளி வெள்ளத்தை
மக்கள் வெள்ளம்
இருட்டடிப்புச் செய்யும்.
பாலியற்பேதம்
மறந்து அங்கே
பாரதி கண்ட
'சமத்துவம் நிலவும்!

★★★

நாளைய கந்தூரிப்
'பொரியலின்' வாசம்
நாசியை
மெல்லத் துளைக்கும்
பட்டினி வயிறுகளின்
நாவில் ஊறும் எச்சில்
நாளைய கனவுகளை
விரிக்கும்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணிவேர்கள்

ஆயிரக்கணக்கான
உழைப்பாளிகள்
வியர்வை சிந்த
தோட்டக்காட்டினிலே
தேயிலைச் சருகுகளாய்
தாழ்த்தப்பட்ட,
உயர்ந்த ஜீவன்கள்,
உழைப்பு விருட்சத்தின்
ஆணி வேர்கள்,
உதிரத்தை வியர்வையாக்கி
உழைக்க
சொகுசாக
நாங்கள் இங்கே
கவி புனைகிறோம்
கவி - படிக்கிறோம்

⁕ ⁕ ⁕ ⁕

தேயிலையின் நிறம்
சிவப்பாம்!
யார் சொன்னது
இல்லையென்று?
உதிரத்தின் நிறமும்
சிவப்பு தானே?
உதிரத்தில் உரம்சேர்க்கும்
தேயிலைச் சிவப்பில்
ஆச்சரியமென்ன?
தேயிலையின் நிறம்
சிவப்பாம்!

⁕ ⁕ ⁕ ⁕

மழை பொழிய
நீர் வேண்டும்.
மலையகத்தில் அதிக மழையென்றால்
அது,
தோட்டப் பாட்டாளிகளின்
வியர்வைத் துளிகள்
ஆவியாகி, கார்மேகமானதால் தான்
பொழிகின்றதோ?



பட்டம்
உயரப் பறக்கினும்
பிடி
கீழே இருப்பவன் கையிலென்றால்
இலங்கையெனும் பட்டத்தின் பிடி
பட்டம் பெறாப்
பாமரத் தொழிலாளி
தேயிலை உழைப்பாளி கையில்!
அவன் விட்டால்
சரித்திரமே மாறும்!

⁕ ⁕ ⁕ ⁕

சரித்திரம் படைத்தவனும் அவனே.
சரித்திரம் படைப்பவனும் அவனே.
ஆனால்
சரித்திரத்தில் அவனுக்கு
இடமில்லை.
தரித்திரம் தான் அவனுக்கு மீதி
எங்கோ
நாய்களும் பேய்களும்
நாயகர்களாக,
இங்கே..
ஆணிவேர்களின் பிடி
தளர்ந்து கொண்டு போக,
உண்மை,
தேயிலையின் நிறம்
சிவப்பானது!

⁕ ⁕ ⁕ ⁕





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரு மூச்சுக்கள்!

அழகின் யௌவனம்
யார் கண்களையும்
உறுத்தவில்லை.
ஆண்டுகள் -
நகர்ந்து சென்று
மூப்பின் லட்சணங்கள்
முகத்தை
முத்தமிட்ட பின்னே -
மாலையிட இங்கே
மணவாளன் இல்லை!

* * *

அடுப்படியில் இருந்து
அவள் -
வடிக்கும் கண்ணீரை விட,
உஷ்ணமாய் வரும்
அந்தப் பெருமூச்சுக்கள்
விஞ்ஞான யுகத்தின்
அதி சக்தி மிக்க
வாயுக்களை விட
அகோரமானவை!

* * *

போபாலின்
அணுஉலை வெடித்ததில்
அநேக
அநர்த்தங்களாம் !
இவளின்
மன உலை வெடிக்குமானால்
உலகமே
உருகி விடாதோ?

* * *





## தராதரங்கள்

பசித்திருந்தோம் படிப்பதற்காக!
தனித்திருந்தோம்,
தனித்துவத்தைக் காப்பதற்காக!
விழித்திருந்தோம்
விடியலுக்காக!

* * * *

ஆனாலும்,
இன்னமும் தான் விடியவில்லை.
கருக்கலுக்குள்ளே தெரியும்
விடிவெள்ளியாய்
அடி மனதில் கனவுகள்!
உறுதியாக வழியின்றி
உருகிக் கொண்டிருப்பதால்
மனங்களில்
ஊமைக் காய்ச்சல்.

* * * *

அடக்கு முறைகளில்
அடிமையாகிப் போனதால்
உணர்வலைகளில்
அக்கினிப் பிழம்பு.

* * * *

தெருப்பாடகனின் தகரடப்பாவாய்
எங்கள் தராதங்கள்
தரமிழந்து போயின.

* * * *

தடைகளையும் படிகளாய் நினைத்து
நாங்கள்
முன்னேறத் துடித்தோம்.
இறுகிப் போன அந்தக் கற்களில்
இடறி இடறியே
எங்கள் பாதங்கள்
புண்ணாய்ப் போயின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * * *

நிறம் பூசிக் கொண்ட நரிகள்
நானே ராஜா வென்று
கூப்பாடு போட்டன.
அரசியல் லாபம் தேடும்
பச்சோந்திக் கும்பல்
எங்கள் தராதரங்களை
நிறம் மாற்றின.

* * * *

நாற்காலி ஆசை சில
நல்லவர்களை
நயவஞ்சகர்களாக்கலாம்.
நயவஞ்சகர்களே
நாற்காலிக்குள் அடக்கமானால்
பாவம்.
அந்த நாற்காலி என்ன செய்யும்?

* * * *

கம்பி எண்ணும் கைதிகளைப் போல
நாங்கள்
நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறோம்.
சொடித்துப் போன
விரல்களை நீவி விட்ட படி,
சொக்க வைத்த வாக்குறுதிகள்
கையில்
சிக்காமலே போனதை
எண்ணிய படி...

* * * *

ஏணிப்படியில்
ஏடாகூடமாய் ஏறும்
ஒல்லிச் சிறுவனைப் போல
எங்கள் வயதுகள் ...
ஆண்டுகளின் நகர்வில்
ஆங்காங்கே நரைமயிர்கள்
இன்னுமொரு தராதரத்தைப்
பெற்றுக்கொண்டதாய்
பறை சாற்றுகின்றன.

* * * *



## பலவீனம்

என்
மன மேடையில்
நடனமிடும் நகர்த்தகியே!
இதயவீணை
இசைக்கும் ராகத்தில்
உல்லாசமாய்
உன் பாதங்கள்
தாளம் போடும் போது
என் மெல்லிதயம்
மெலிதாய் அதிர்கின்றது.

* * * *

உன்
முல்லை மேனியதில்
செம்மை படராதிருக்க
இதயப் படுக்கையில்
ரோஜாக்களைக் குவித்தேன்
இருந்தும்,
நானறியாமல் ஒருமுள்
உன் உடலில்
உறுத்தியதால் தான்
நீ
குமைகின்றனையோ?

* * * *

நீ
நடந்து வரும் பாதையெங்கும்
விண்ணில் உலாவரும்
மேகப் பொதிகளை
மேவி வந்து
பரப்பினேன்
என் உணர்வுக்கெட்டாமல்
மேகத்தில்
உன் கூந்தல் உரசியதால்
கடும்பனி தான்
உன்னைக்
கொடுமைப்படுத்தியதா?



* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசையிருளில் நீ
அமுங்கிக் கிடந்த போது
என் விழிவிளக்கால்
ஒளிக்கற்றை பாய்ச்சினேன்.
அதில் நீ,
பாதைத் தெளிவு கண்டு,
நிலவொளியே
உன்
மனவிருட்டின் ஒளிப்பொட்டு எனப்
பாதை மாறி
என்
ஒளிமுகப்பையே
சிதறடித்தாய்!



உன்
மனவில்லையில்
ஊடுருவும்
நினைவுக்கற்றைகள்
என் இதயக்குவியத்திலே
ஒடுங்கிய பின்னும்
பாராமுகக் கீற்றுகளாய்
விலகிச் செல்கையில்
என் மனதின்
ஒரு மூலையிலே
ஊமைக்காயம் ஒன்று
உரிமை கோருகின்றது.



## மானுடம் செழிக்க!

ப்ரிய நேஸங்களுக்கு - என்
தூய பிரார்த்தனைத் தூவல்கள்!

ஒ ஒ ஒ

எங்கள் தலைமுறையினரின்
இலக்கிய விழிப்பு...
பிரமிக்கவைப்பதொன்று!
இன்றைய விழாக்கள் ஒரு
புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கும்
சமிக்ஞைகள்!

ஒ ஒ ஒ

இலக்கிய நேஸங்களே ...
உங்கள்
இதய பூமியில்
தூவப்பட்ட இலட்சிய விதைகள்
மானுடம் செழிப்பதற்காய்
தூவப்படட்டும்.
தேஸ பக்தர்கள் என்று இங்கே,
நிற்கின்ற -
போலி மனிதர்களை
உங்கள் பேனா இனங்காட்டட்டும்!
புதிய -
மானுடச் செழிப்பிலே
மகிழ்ச்சி கொள்வோம்!

ஒ ஒ ஒ

எங்களுக்குள் -
எங்களோடு வாழும்
மானுடங்களின்
குறிக்கோளில்லாக்
கும்மாளங்களைக் கூட
நமது பேனாக்கள்
எழுதிக்காட்டட்டும்!

ஒ ஒ ஒ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமைத் தீவைத்துப்
பொசுக்க நினைக்கின்ற
உங்களிற் சிலரின்
எண்ணக் கருவூலங்களை
மண்ணுக்குள் புதையுங்கள்!
புதிய சமூகம் பூக்கட்டும் -
அங்கே -
மானுடப் பூக்கள் செழித்து மணக்கட்டும்!

---

எழுச்சிக் குரல் எழுப்ப
நினைக்கின்றோர்
எங்களின் மத்தியிலே
இருக்கின்றார்களா ...?
இருக்கலாம்! அவர்கள்
வெறும் எழுத்துக்களோடு
இங்கே நின்று விட்டால் ...!



---

ஓ...! ப்பிரியங்களே..
நாங்கள் தேடுவது
நல்ல எதிர்பார்ப்புக்கள்!
நாங்கள் கேட்க நினைப்பது
நன்மையான வார்த்தைகள்,
நாங்கள் பார்க்க எண்ணுவது
நல்ல நல்ல செயல்கள்!

---

எத்தனையோ - ஆத்மாக்களின்
அழுகுரல்களுக்கு -
எங்கள் செவிகள் சாய்க்கப்படுகின்றன!
நாம் என்ன...? ஆமாம்.
நாம் என்ன செய்தோம்?

---



இன்னும் இன்னுமாய்
மடமைகள்மண்ணை ஆக்கிரமிப்பதால்
உங்கள் கரங்கள்
அதற்காய் போராட வேண்டும்!
ஓ...!
நவீன புத்திரர்களே...
நாங்கள் சேர்வோம்!
நன்மை சேர்ப்போம்!



---

மானுடம் செழிக்க..
மனங்களை -
ஆரோக்கியமாய் வளர்த்து
வளங் காண்போம்!

---

எழுதி எழுதியே
காகிதங்களைச் சேர்த்து விடுவது போல
இங்கே,
எழுதப்பட்டவைகளையும்
செயலிலே காட்ட...
ப்ரிய நேஸங்களே ...
வருக!! வருக..!!

---

இன்றைய -
இலக்கியங்களின் மூலமாய்
யதார்த்தங்களைத்
தரிஸிக்கும் நாம் -
நிச்சயமாய்
மடமைகளுக்கு விலங்கிட வேண்டும்!

---

மானுடச் செழிப்பே
உங்கள் குரலாகட்டும்!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியுமா ?



தேடுகிறேன்
சல்லடை போட்டு
நானாகத் தொலைத்து விட்ட
என் வாழ்க்கையை!

யாரங்கே..
என்னோடு துணைக்கு வரக்
காத்திருப்பவர்?
இழந்து போன
என் சந்தோசங்களைத்
தேடித்தர முடியுமா உங்களால்?

அடகு வைத்த அன்பை
அறுதியாகாமல்
மீட்டுத் தர முடியுமா உங்களால்?

விலை போகாத பண்டமாய்
மலிவாகிப் போன
அன்புக்கு
உரிய விலை நிர்ணயிக்க
முடியுமா உங்களால்?

அழியாது என்றெண்ணி
நான் போட்ட கோலங்கள்
கண் முன்னாலேயே
கலைந்து போவதை
தடுக்க முடியுமா உங்களால்
மிலேனியக் கனவுகளின்
சிதைவுகள்
மனதின் ஒரு மூலையில்
இன்னமும் தான் உட்கார்ந்திருக்கின்றன.
நாற்காலி போட்டு!
அந்தக் கனவுகளைச்
சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து
கிரீடம் சூட்ட
முடியுமா உங்களால்?



# பெண்கள் உலகின் கண்கள்!



உலக முகத்திற்குக்
கோடி கோடியாய்க் கண்கள்!
இன்றேல்...
உலகம் விழித்திருக்க
முடியாது!
ஒளி பிறந்திருக்க முடியாது!
பெண்கள் என்னும் -
இந்தக் கண்கள் இன்றேல்
பூமி கூட
ஒரு,
அக்கினிப்பிழம்பாயிருக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலீடுகள்

கடல்கடந்த உங்கள்
உழைப்புப் பயணங்களின் போது
பிரியாவிடை தர நாங்கள்
'ஏர்போட்' வருகின்றோம்
உங்கள்
விழிக்கோடியில் அரும்பும்
கண்ணீர் முத்துகள்
கோர்வையாகி
நிலத்தில் உதிர்கையில்
அவையே வைரமணிகளாய்
என் மனமாளிகையில்
பிரகாசிக்கின்றன.

❊ ❊ ❊ ❊

உறவுகளின் பிரிவுக்காக
உங்கள் துயரம்
கரை கடந்து நிற்கும்போது
உங்களுடன் சேர்ந்து
நாங்களும் அழுகிறோம்
எங்கள் விழிநீர்
பொங்கி வரும் உங்கள்
துயர் துடைப்பதற்கென்று
நீங்கள்
உங்களைச் சமாதானப்படுத்திக்
கொள்கிறீர்கள்.

❊ ❊ ❊ ❊

தயார் நிலையிலிருக்கும்
எங்கள்
ரெடிமேட் கண்ணீரோ
இரண்டாண்டுகளில்
எமக்காக நீங்கள்
எடுத்து வரும்
அன்பளிப்புகளுக்கான
முதலீடுகள்.

❊ ❊ ❊ ❊





## பாட்டெழுதிப் போட்டேன்!

போட்டிக் கொரு கவிதை போட்டுப் பணப் பரிசை
ஈட்டிக் கொள வேண்டும்! என்னுமோராவலாற்
பாட்டுப் புலமை சார் பாவலர்கள் சூழ்ந்த, இந்
நாட்டுப் புலவர் நடுவன், நான் தூசென்றே
எண்ணிக் கலங்கா (து) இறுக்கமுடன் யானின்று
மன்னும் பொருட் சார் மகுடத்தில் பாவாக்க முனைந்தேன்!

தலைப்பு தடுமாற்றம்! தக்கதலைப்பற்ற
மலைப்பு எனக்கு!
மகிபனை வேண்டிடுங்கால்...!
மோட்டு வளைபோன்று முண்டு கொடுக்கின்ற
வீட்டுமகாராசி விற்புருவத்தால் வெட்டி விளாசுகிறாள்!

"புத்தகம் தூக்கிப் புறப்பட்டமூத்தவளோ
" வித்தகம் போதுமே! வேண்டாம் இனிப்படிப்பு"
என்று கூறாமலே இன்றவளோ வீட்டினிலே
நின்று விட்டாள்! அந்த நினைப்பு வருதா...?"
ஆமாம்....
செல்வி எனதுமகள் சொல்லாது பள்ளிக்குக்
கல்விதனை விட்டகவலையால் நீ மட்டும்
கலங்குவதாய் எண்ணாதே!
கண்ணே! நின் கூற்று
விளங்குதடி என் செய்வேன்?. வேதனைதான்
என் மகளும்-
கற்று வரட்டும்! நற்கல்வியெனும் செல்வத்தைப்
பெற்று வரட்டும்! பெயர்பெறட்டும்!
என்றே தான் விட்டேன்!

மகளே! நீ மூத்த மகனாய்ப் பிறந்திருந்தால்
கவலைக்கம்பூன்றி, யான் காட்டப்படுகின்ற
நிலைமைக்கு ஆளாகி நிச்சயம் நான் வாடேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதுவைக்குச் -
சீதனங் கேட்டுச் சிணுங்கும் பொடியர்க்கு
மாதனமாய்க் கல்வியையும் வைக்கலாமென்றும்,
"ஜொப்புக்கும். உன்னிடத்தில் யோக்கியதை -
உண்டென்றும் -
செப்பற்கு ஏலாமற் செய்து விட்டு நிற்கின்றாய்!
ஒப்பனையிற் கூடிட்ட ஒருவனை நீவெறுங்
கற்பனையிற் போட்டுக் களிக்கின்றாய்
புத்திரியே...!"
எனப்பாட்டு அந்த இலக்கியப் போட்டிக்கு
முனைப்பூட்டி நானெழுத முனைகின்ற போழ்து சீ
மாட்டி என்னருகே வந்து திருவாய் திறந்தே
"போட்டிக்குப் பாட்டுப் புனைகிறது போது முங்கள்
பாட்டுக் (கு)
இருந்து கொண்டு பாப்புனைந்தாற்போதுமா?
போட்டுத் தள்ளிவிட்டுப் புறப்படுங்கள்!
அன்னவளைக் -
கட்டிக் கொடுத்து "கரச்சலை" நீக்கிடுவோம்!
எட்டி நடந்து இனிவரனைத்தேடுங்கள்,
என்றிரைந்தாள்!

உச்சவரம்பு! உயிர்குடிக்கும்
சீதனத்தால் -
அச்சமிகக் கொண்டு அலைகிறேன்!
எவ்விடத்தும்
"பிச்சை" கிடைக்காது பின்வாங்கி நான்வந்த
அச்சமயம் -
கருணை யுள ஒருவன்
கை கொடுக்க முன் வந்தோன்!
வரனை யடைந்த மகிழ்ச்சியாலே -
துள்ளுகின்றேன்!
கட்டிக் கொள்ள வந்தோன்! கற்றவன் தான்
தான் நடத்தும்
பழக்கடையொன்றின் பேருரிமைக்காரன்.
சற்று தலை மொட்டை
சம்பியனைப் போற தோற்றம்!
முற்றும் உடல் முறுக்கு!
முப்பதுக்கு கீழ் வயது!
மாப்பிள்ளை கிட்டி விட்டார்!



மாத வருமான ஆசிரியமாமன், யான் என்றனுக்குப்
பூதா காரமான பொல்லாச் சுமைகள்!
ஏதும் மீதமில்லை! என்றாலுங் கல்யாண
மாது! எனது மகள் மணமகளாய் ஆகுவதை
யானினிமேல் -
விரும்பாதிருக்கலாமோ ? வேண்டாமே இப்பொறுப்பு
பெரும்பாடு!
ஈதென்றே பேசாதிருக்கனுமோ?
ஆம்
வாழ்வுச் சுமையை வாஞ்சையுடன் ஏற்று, மணக்
கோலம் புனைந்து கொழுநரா யாக வரும்
மருகர் தம்மைக்கு -
கணையாழி ஒன்றினைக் கட்டாயமிடும் பொறுப்பு!
மனையாளும் இந்த மாமனுக்கு உண்டல்லோ?
அதை நினைத்தே -
இறைவனை, யான்வேண்டி எழுதுகிற போழ்திற்
குரையாதே! வந்து குடும்பத் தரசியே!
பொறுப்புப் புரியாய்ப் புருஷன் என என்னை
வெறுப்புக் கொண்டு விடா(து)
இருந்து பார்!

போட்டிக்கு கவிதையைப்போட்டு -
முதற்பரிசை -,
ஈட்டிப்பணமெடுத்து இலங்கு பொன்மோதிரத்தை
வாங்கி,
அவர் விரலில் வதுவை நாட்சூட்டி
நீக்கித்துயர், நாங்கள் -
நிம்மதிப் பெருமூச்சை!
விடுகின்ற எண்ணத்தை விட்டு விடாமற்
படுகின்ற பாட்டோடு
பாட்டெழுதிப் போட்டேன்!
மனையாளே...!
பார் நமக்கேதான் பரிசு!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞன் யார் ?

மனக்கோலங்கள்
மணக் கோலங்களை
எதிர்பார்த்து ஏங்குகின்றன.

♑ ♑ ♑

கண்ணீர்க் குளிப்புக்குள்
ஆத்மாவை அடக்கிய
இப் பெண்மை ரதங்கள்
வறுமைச் சோற்றுக்குள்
புதைந்து கிடக்கின்றன.

♑ ♑ ♑

கல்யாணச் சந்தையிலே
இந்த சரக்குகளுக்கு
விலை மதிப்பு இல்லை.

♑ ♑ ♑

பூவின்மது நுகர
பூவுக்கே
விலை நிர்ணயிக்கும்
மாப்பிள்ளை வண்டுகள்.
விலகி நின்று
வேடிக்கை பார்க்கின்றன.

♑ ♑ ♑

இவர்களில்
கலைஞன் யார்
புழுதியில் புரளும்
இப்புனித வீணைகளை
வெறுமனே எடுத்து
மீட்டுவதற்கு ...!

♑ ♑ ♑







# வேதனைகள் !

விடிவுகள்
எங்கள் வாழ்வில்
இல்லாது -
துயரடைகின்றோம்.

♒ ♒ ♒

பெரும் மூச்சும் -
அனல் மூச்சுகளாய் மாற
அகம் கொப்பளிக்கும்.
வேள்வித் தீயில்
வாழ்வு -
வரட்சியாகிவெடிக்கும் ...!

♒ ♒ ♒

மலர்ந்து வரும்
வாழ்க்கைப் பூ
வறுமை உஷ்ணத்தில்
வெந்து கருகும்!

♒ ♒ ♒

சுரண்டல் வாழ்வினுள்
சுற்றித் திரியும்
புல்லுருவிகளின் தாக்கம்
வசந்தங்களைப் போக்கும்!

♒ ♒ ♒



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூவிச் செல்லும் பன்னீர் வாசம்

அன்பே சகி ...,
நாட்கள் காணாமல் போயின.

❁ ❁ ❁

நெருப்பான
பெருமூச்சோடும்
இளமைப் பருவத்தின்
இனிமையான
நினைவுகளோடும்
மண்ணோடு மண்ணாகிப்போன
கற்பனைகளோடும்
எரிகின்ற விறகாவே
இன்னும் நான்!

❁ ❁ ❁

எத்தனை நாட்களுக்கு
தீயில் சாம்பலாவது ...?
என்னுயிர்
திசையறு கருவியற்ற கப்பலாய்
எத்தனை காலம் தத்தளிப்பது ...?

❁ ❁ ❁

என் முன்னோக்கிய
கால்களை -
பின்னோக்காமல்
எப்படி நான் நகர்த்துவது ...?

❁ ❁ ❁

இரும்பு கம்பிகளால்
சூழப்பட்ட கேம்புகளுக்குள்
என் குருதித் துளிகள்
சிந்திச் சிதறுகின்றன...

என் சகியே ...!
நிம்மதியாய்த் தான்
இருக்க முடியவில்லை!
யுத்தப் பூமியிலாவது
என் உயிர் போகட்டுமே!

❁ ❁ ❁

மண்ணாகிப் போகும்
என் -
சடலப்பூவிலாவது
பன்னீர் துளிகள்
மழையாய் பொழியட்டுமே!

❁ ❁ ❁

அங்கேயாவது
இவள் வாசம்
நாமமாய் வீசட்டுமே!!





## மரணத்தினூடே மயக்க யாத்திரை

என்
சுவாசம்
தடைப்பட்டது!

✿ ✿ ✿

வந்தவர்கள் எல்லாம்
என் -
குணநலம் பற்றிப் பேசியே
கண்ணீர் வடித்தனர்!

✿ ✿ ✿

தூய அன்பிற்கு
அடைக்கலமான இதயம்
என ஒரு விவாதம்!

✿ ✿ ✿

கவியூற்றுப் போல் தான்
மனசு
என்றொரு பாராட்டு!

✿ ✿ ✿

கலையுலகில் பதித்த “நாமம்”
பேசப்படுகிறதே
என்றொரு வார்த்தை!

✿ ✿ ✿

யாருடைய இதயம்...,
துடிக்குமென்று
எதிர்பார்த்து எதிர்பார்த்து
மரணத்தின் தடவலினூடே
மயக்க யாத்திரை
எனக்கு!

✿ ✿ ✿

உயிர்
உடலை விட்டுப் பிரியும் வரை
மரணம் -
யாரை விட்டுப் போகும்....?

✿ ✿ ✿

மரணத்தின் பிறப்பை
கவிதையில்
வடித்தேன்

✿ ✿ ✿

சுவாசம் தடைப்படுகின்றது
ஆனால் -

மரணம் எது என்று
புரியவில்லை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளிர் விட்ட தேசம்...!

கோபத்தின் தாக்கம்
மனதினுள் வேராகி கிளைவிடுகின்றது!
பதிந்த நினைவுகளை
மீட்டி .. மீட்டி .. மனித நேயத்தை
தேடிக் கொண்டே மூச்சு விடுகின்றேன்!

⌛ ⌛ ⌛

சதியே ! நீ
சுட்டெரிக்கும் பொறாமைத்தீயை
தூண்டி விடுகின்றாய்!

⌛ ⌛ ⌛

எம் உறவுகளுக்கு மேலாய்
தேசத்தில் துளிர் விட்ட
மனிதாபிமானங்களை -
போற்றியவர்களை
குழி தோண்டிப் புதைத்து விட்டாய்

⌛ ⌛ ⌛

சமாதானத்திற்காய் -
பறக்கவிட்ட புறாக்களும்
திசைமாறிப்போயின!

⌛ ⌛ ⌛

நான் பிரார்த்திக்கிறேன்
மனித நேயமே
மலர்ந்து வா.....!
உன்னை இக்கணமே
அடையவேண்டும் போலிருக்கிறது!

⌛ ⌛ ⌛

அசம்பாவிதங்களுக்குள்,
போராடி .... போராடி ....
நீயும் -
மனித நேயமின்றி
களைத்திருப்பாய் தானே ...?





## அஸ்த மனம்

காலத்தின் வேகத்தோடு
சிக்குண்டு...
எங்கள் பயணம் தொடர்கிறது!

† † † †

இதயங்களுக்குள் எழும்
இனிய ராகங்கள்
அதற்குள்ளே சமாதியாகி விட்டன.
சோகராகங்களே
எங்கள் தோழமையைப்
பெற்று விட்டன.

† † † †

நாங்கள் -
மலையகப் பூமியின்
அப்பாவிப் பிறவிகள் -
மலர்வுகளுக்கெல்லாம்
நாம் ஸ்நேகிதர் அல்ல
மலராமலே -
உதிர்ந்து கொண்டிருக்கிறோம்.

† † † †

எங்கள்
இதயக்குமுறல்களை
வரிக்குவரி எழுதினாலும்
வாய்விட்டே பேசினாலும்
வசந்தத்தின் வரவுகள்
கற்பனையில் மட்டுந் தான்.
உதயத்திலே அஸ்தமனம்
காணும் உள்ளங்கள்
எம்முடையது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு

ஏக்கம் சுமந்த உள்ளம்
தாக்கங்களில் மூழ்கும்.

❋ ❋ ❋

காலச் சுழற்சி வேகம்
கற்பனைகளை ஜனித்து
ஆசைக் கோட்டைக்கு
அத்திவாரமிடும்.

❋ ❋ ❋

ஏழ்மை வாழ்வுத் தீயில்
இளமைத் தண்ணீர்
வேகும்.

❋ ❋ ❋

நாதியற்ற தனிமை
நரகக் கோலம்
பூணும்.

❋ ❋ ❋

கனவு வேர் அறுந்தே
கன்னிக் கொடி
தள்ளாடும் -
பெண்மைப் பூவின் உதிரல்
மண்ணுக்கே - நல்
உரமாகும்!

...





# ராகம் பாடிய ஈக்கள்!

மனித நேயங்களின்
எலும்புத் துண்டுகள்
பாதங்களில் குத்தி
குருதித் துளிகளை
சிதறவைக்கிறது!

★

விறகாய் அடுக்கப்பட்ட
சடலங்களை-
தடவித் தடவி - உன்னைத்
தேடிக் கொண்டே போகிறேன்!

★

நீயோ -
இருந்த இடம்
படுகுழியாக்கப்பட்டிருக்கிறது.

★

எம் உறவுக்கு -
உரமாயிருந்த
நட்புள்ளங்களை - வந்தவர்கள்
புதைப்பதற்கு -
கொண்டு போய் விட்டார்கள்!



★

உதிரங்கள் மேல்
ராகம் பாடிய ஈக்களும்
காணாமல் போயின!

★

வெடிகுண்டில் சிக்கிய
நான் மட்டும் துடிக்கிறேன்!

★

மரணமே வா.

உன்னை இக்கணமே
தடவவேண்டும் போலிருக்கிறது.

★

பரிதாப ஓசைகளை
கேட்டுக் கேட்டு
நீயும்
நீயாகவிருக்க மாட்டாய் தானே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிலேனியத்தின் வாசம் !

உலகமெங்கும்
மிலேனியப் பிரசவம்
வரவேற்கப்பட்டது!
✣ ✣ ✣
எதிர்பார்த்தவர்கள் எல்லாம்
புது மாற்றம் பேசியே
விடியல்களை தேடினர்!
✣ ✣ ✣
புத்தாயிரத்திலே
மோசமான தாக்குதல்
என ஓர் செய்தி!
✣ ✣ ✣
பிரயோசனமற்ற
வாழ்க்கை தான்
என்றொரு வாதம்.
✣ ✣ ✣
அடாவடித்தனம்
கூடிப்போயிருக்கிறது
என்றொரு கோஸ்டி.
✣ ✣ ✣



பிட்டும் தேங்காப்பூவுமாய் வாழ்ந்த
தமிழ் முஸ்லிம் மக்கள்
மீண்டும் வாழும்
நாள் வருமா வென்று
எதிர்பார்த்து எதிர்பார்த்து
நாட்களின் நகர்வலூாடே
எனக்கொரு
ஏக்கம்!
✣ ✣ ✣
உடலை விட்டு உயிர் போகும் வரை
துயரம் யாரை விட்டுப் போகும் ...?
✣ ✣ ✣
புதிய ஆண்டை
தரிசித்தேன்!
வாழ்த்துக்கள் கிடைத்தன.
ஆனால்
நிம்மதி கிடைக்கவில்லையே!



# பாவம் பெண்கள்.

பெண்களில் சிலர்
வெளிநாடு செல்கையிலே
ஆண்களிற் சிலரிங்கே
அட்டகாசம் புரிகின்றர்!

⁕ ⁕ ⁕ ⁕

தாரத்தை அனுப்பி விட்டு
தலைகால் புரியாமல்-
பாதையில் பகிரங்கமாய் -
வேறு...
பாவையரைத் தேடுகின்றார்!

⁕ ⁕ ⁕ ⁕

மனைவி அங்கே
மனமும் உருகி -
உடலும் உருகி
மகிழ்வையே தொலைக்க
கணவன் இங்கே
மதுவைத் தேடி
மாதுவைத் தேடி
மயக்கம் போடுகிறான்!

⁕ ⁕ ⁕ ⁕

பாசம் அங்கே
வேஷம் இங்கே
பாவம் பெண்கள்.

⁕ ⁕ ⁕ ⁕





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்

சுகந்த மூச்சுக்கள்
சிதைந்து போகின்றன
அனல் மூச்சுக்களாக!

இதயம் பாக்கி
உயிரென்பது புரியாத புதிரா...?

உடம்பு
மண்ணோடு மண்ணாகிப்
போக வேண்டியது.
எலும்புக் கூடு
அழிந்து போகாதா...?
பேணிக்காத்துத்தான் என்ன பயன் ...?

உடலமைப்பு
நிலையானது அல்ல

சிந்தனைத் துளிகள்
மனதில் -
பட்டுத் தெறிக்கிறது
அடிக்கடி...!

நிரந்தரமில்லா
மனிதவாழ்வு
கலங்குகின்றது.

கனவினுள் -
போராட்டமாக
சந்தோஷம் தேடிய
என்னவளின்-
முகம் மறந்து
தூய நினைவுகள் அரிக்கிறது
மனதில்!



துண்டாக்கப்பட்ட
மீனாய்
துடிக்கிறது
பிறந்த பிரக்ஞை

தூய மூச்சினை
அவ்வப்போது
சுவாசித்த
கண்மணியின்
மூக்கு -
முத்தமிட்டு
மகிழத்துடிக்கிறது!

பிறந்து வாழ்ந்த மண்ணில்
ஏற்பட்ட -
அசம்பாவிதங்கள் மட்டும்
மனதில்
சுடராய் பிரகாசிக்கிறது.

அடி சகீ...
நான்
அன்பை அணைத்து மகிழ்வதா...?
அல்லது -
பிறந்த தாய் மண்ணை
தேடிப்பிடிப்பதா...?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

மன்னோடு மண்ணாகிப் போகும்
இந்த மனித நேயம் -
பயிர்களுக்கு
உரமாகத் துடிக்கிறது.

■■■■

ஆயுதக் குண்டு விதைகள்
மானிடப்பூக்களின்
உயிரிதழ்களைத்தேடுகிறது!

■■■■

இறைபடைப்பில்
நிறம்மாறாத -
குருதிக்குள்ளும்
ஏன் இத்தனை வேற்றுமைகள்..?
மனிதனை
மனிதன் கொல்லும்
கொடுமைச் செயலை -
எந்தத் தலைமைத்துவத்தின்
ஆட்சியில் -
முற்றுப்புள்ளி வைக்கப்போகிறார்கள்?

■■■■

மரணத்திற்கு அடையாளம்
துப்பாக்கிச் சப்தம்
இந்த ஓசை
எம் மண்ணில் எதற்கு ....?

ஊனமாய்வடியும்
மனிதப் பிணங்களில்
வெள்ளைப்புறா நீந்தட்டும் என்றா?

■■■■





மண்ணோடு மண்ணாகும்
மனித நேயமே!
உன் நிழலிலாவது
சுதந்திரப்பூவை
மணக்கவிடு.

■■■■

சமாதானம் தேடும்
இதயங்களாவது - அதனை
முத்தமிடட்டும்.

■■■■

எமது மூதாதையார்
மூளையுடன் நடந்திருந்தால்
எமது காலங்கள்
இன்று -
சருகுகளாயிருக்காது.

■■■■

சிந்திய குருதிகளை
சேகரித்து -
கவிதையெழுதும்
எம்முயிருக்கும் -
என்ன உத்தரவாதம்....?

■■■■

உணர்வுகள் வரண்டு
நிம்மதியின்றி வாழும்
எமக்கு
என்ன " நாமம்"
தெரியுமா...?
காலத்தால் மாறாத
மனித நேயங்களின்
அகராதியில்
"அகதி" என்று!

■■■■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பாளிகளின்
# வியர்வைத் துளிகளுக்காக !

மலையகத் தொழிலாளர்களை
உறிஞ்சியெடுத்த
அந்த நாட்களை ...
சிரமப்பட்டு
எண்ணிப்பார்க்கின்றேன்.

கடந்த நூற்றாண்டு,
இருட்டின் கர்ப்பத்தில்
லயங்கள் ...
இருந்தன!

அன்று - எம் ஜனங்கள்
வறுமை தான் கொடுமையென்று
படிப்பை....
இழந்து விட்டார்கள்!

மலையகப்பூமி
தன்தேயிலைச்செடியால்
புகழ் பெற்றாள்!

தன் பசிக்கொடுமைகளைச்
சொல்ல முடியாமல்
வரிக்குடில்களில்
முனங்கிக் கிடந்தன வயிறுகள்!

அது
மனித நேயங்களை
நேசித்துப் பார்க்க தவறியவர்களின்
காலம்.





போடிமார்களின் தாகங்களில்
சுவையான விமர்சனங்கள்!
பெண்களுக்கு
அடையாளம் காட்டும்
கூடைகள்!
தேயிலைக்கு சிவப்பூட்டும்
குருதித் துளிகள்.

இதயம் உண்டு
துயரம் சுமக்க!

வாய் உண்டு
கொடுமை மறைக்க!

எம் -
பெருந்தோட்டங்களின்
அடிப்படை ...
மனித உரிமைகள் கூட
விழிப்புணர்வு குறையாமல்
மங்கிக் கிடந்த
வரண்ட காலம் அது!

இன்று -
அந்தக் காலம்
இருட்டின் கர்ப்பத்தில்
இருந்து ... மாறுகின்றது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புது யுகத்தின் புத்திரர்கள்

தேசராஜ்யத்தின்
அத்து மீறல்களும்-
ஆர்ப்பாட்டங்களும்
ஏ! தோழனே-
எப்படியும் எதுவும்
இருக்கட்டும்!
நாம்-
தோளோடுதோள் சேர்ப்போம்
விரைந்துவா!

புதிய தலைமுறைகளின்
தலையீடுகள்-
புதுயுகம் செத்திட
அனுமதிக்க முடியாது!

சாஸ்திரம் பார்க்கும்
சம்பிரதாயங்களில் தான்
இவர்களின் சரித்திரம் ...!

காவிய அந்தஸ்தைப் பெற
கல்லறையைத் தேடும்
இவர்கள்
கோழைகள்!

நாங்கள்-
கல்வெட்டுக்காலத்தின்
வாரிசுகள் அல்லர்!
நவயுகத்தின்
புத்திரர்கள்!

எங்களைப்பிரிப்பது
தடைகள் அல்ல-
தலைமுறைகளின்
போலிச் -
சம்பிரதாயங்கள்
அந்தச் -
சாக்கடைக்குள்
அவர்களே
விழட்டும்!

ஏ!
தோழனே -

விரைந்துவா...!
நாம் -
புதுயுகம் படைப்போம்!



# என் தேசமிது

காலைப் பொழுதுகளும்
கறுத்துப் போனதாகவே
விழித்துக் கொள்ளும்
தேசமிது!

▢▢▢▢

தேசத்தின் தேகமெலாம்
இப்போது
இரத்தத்தின் தேவை!

▢▢▢▢

யுத்தம் இங்கேயே
இருந்து கொள்வதாக
அடம் பிடிக்கிறது

▢▢▢▢

சத்தம் செய்ய முன்னரே
சமாதானம் வேண்டும்
வெள்ளைப் புறாக்கள்
வேட்டையாடப்படும்
விந்தை
இங்கே விசித்திரமல்ல.

▢▢▢▢

மண்ணின் புழுதிகளைவிட
இங்கு -
மனிதப் புழுதிகளே
அதிகம்.
தேசத்தின் போக்கை
இப்படியே விட்டால்
அகாலமாய்
இறப்பவர்களால்
ஒரு -
இமயமலையையே
இங்கே உருவாக்க
முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாரி பாடும் விழாக்கள்.

வானத்தாயின்
மகிழ்ச்சிக் குளியலில்
பன்னிரண்டாம் பிறை
சிரிக்கின்றது.
அதன்
வதனத்து ஜ்வாலிப்பில்
நட்சத்திரத் தாதியின்
விழிப்பூக்கள் துடிக்கின்றன.

***

பதினான்கு தர நூறு வருடங்கள்
வடிகட்டப்பட்டாலும்,
பதினொரு திங்களாய்
முகம்பாராமல்
ஒரேயொரு திங்களில் மட்டும்
பெறுகின்ற
சோகமான சுகத்தில்
மீண்டும் மீண்டும்
உறங்கிப் போகும்
ரபியூல் அவ்வலுக்கு
தலாட்டுப் பாடும்
மீலாத் விழாக்கள்-

***

அனாச்சாரச் சந்தையில்
விலை போன
பாபச் சரக்குகளைக்
கொள்ளையிட்டு
சாக்கடையில் ஊறிய நெஞ்சங்களில்
சலமொழுகிய ஊனங்களை
ஏகத்துவப் பன்னீரால்
சுகமாக்கி விட்ட
சாந்த சொரூபியின்
அமைதித் திருநாள்
ஆர்ப்பாட்டத் தெரு நாளாய்
- அல்ல -
புதிய சந்தையின்
திறப்பு விழாவாய்...!



வன்செயல் உக்கிரத்தில்
பாளம் பாளமாய் வெடித்த
சமுதாயக் கழனியை
இறையச்சத்தின் ஊற்றாயிருந்து
பண்படுத்திய பரிவாளர் !
இஸ்லாமிய வயற்பரப்பில்
ஆங்காங்கே.
முளைத்தெழுந்த எதிர்ப்புக்களை
தியாகக் கரங் கொண்டு
களைந்தெறிந்த காவலர்!
குருதி அபிஷேகத்தில்
செஞ்சுவடு பதித்த வரலாறெல்லாம்
நினைவுப் பூமியில்
நிழலாய் மட்டுமே
நெகிழ்கின்றன.



வரண்டு போன மனக் கிணறுகள்
ஊற்றெடுக்காத வரை
சுயாலச் சகதிகள்
கழுவப்படாத வரை
மேடை முழக்கங்கள்
எல்லாம்
முகாரிகள் தான்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சியங்கள்

உருவம் சிதைந்திட்ட
உண்மைகள்....

⌘ ⌘ ⌘

கறைகளைப் பூசி...
மறை வேதம் மறந்த
எழுத்து நர்த்தனங்கள்!

⌘ ⌘ ⌘

பொல்லாத வாதங்களிலும்
பொய்மையின் தழுவலிலும்
புளித்துப் போய்....
புழு அரித்துப் போன
பேச்சுக்கள்...

⌘ ⌘ ⌘

தகவல் கொடுத்தே
அவரவர் -
தரங்களை நிர்ணயித்த
அசிங்கங்கள்!

⌘ ⌘ ⌘

"புதிய சக்தி"களைப்
புறக்கணித்தே எழும்
என் -
புதுமைத்தத்துவங்கள்!

⌘ ⌘ ⌘

இன்று உனது....!
நாளை எனதே! என்ற
என் இலட்சியங்கள்!

⌘ ⌘ ⌘





## தாய் மண்ணின் பிரசவம்!

இன வெறி தலை விரித்தாடும்
காலமிது!
வெறிபிடித்த நாயைச் சுடுவது போல்
மனிதனைச் சுடும்.

❊ ❊ ❊ ❊

வேதனை இல்லை
ஆத்திரத்தில் முனங்குகிறது மனம்!
இடி விழும்
நாம் -
விண்ணுக்கு
மின்னலாய் பிரகாசிக்கிறோம்!

❊ ❊ ❊ ❊

குருதி மழையில் -
மனிதப் புழுதிகளை கழுவிய
தாய் மண்ணே!
உன் மடியில் பிறந்த எம் பாசம்
உயிரிலும் மேலானது!
மரணித்த ஆத்மாக்களின்
ஆவிகள் கூட,
புதைகுழியிலிருந்து வெளியேறி
தாய் மண்ணைத் தேடும்!

❊ ❊ ❊ ❊

பழிதீர்க்கும் வெறிகொண்டு
போரடித்து மாயும்
இரும்புக் கரங்களை
விட்டு விடாதே!

❊ ❊ ❊ ❊

இரவும்
படுகொலை நேர்ந்துள்ளது.
எனினும்
காலையில்
யாரும் இருக்க வில்லை.

❊ ❊ ❊ ❊

எம்
கிழக்குத் தாய் மார்களின்
பிரசவம் -
புதிய வாரிசுகளை
எம் மண்ணில் - மீண்டும்.. மீண்டும்
பிரசவிக்கின்றது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்வின் ஓரம்....!

வறுமைக் கனாக்களின்
வாடிய கோலங்கள்...
✲ ✲ ✲
நேசக் கரங்களின்
நெருடல்கள்
பட்டுப் போனதால்
பரிதவிக்கும் வாழ்வு...
✲ ✲ ✲
துயரச் சின்னங்களாக
வாழ்க்கை நிகழ்வுகள்
ஓரத்தில் நின்று
ஓரக்கண் சிமிட்டும்....
✲ ✲ ✲
வீழ்ந்த பொழுதும்
ஆழ்ந்த இருளைக்
கக்கி விட்டு -
ஆறுதல் சொல்லும் ...!
✲ ✲ ✲
சாதனைகளை -
சாஸ்திரம் பார்த்தே
இளைத்துப் போன
இதயமும் -
களைத்துப் போன
கால ஊர்வலமும்...
ஓலி பாய்ச்சி
ஓவெனக் கத்திய
உதடுகளும்
ஊமைப் போராட்ட
உபன்னியாசம் செய்யும்...
✲ ✲ ✲
கால நகர்வுகள்
கடுகதிச் சிறகை
விரிக்க -
உயிர்ப்பூ
உறங்காதிருக்கும்!
உதிர்வின் ஓரத்தில்
உயிர்ப்பூ
உறங்காதிருக்கும்...!

✲ ✲ ✲





# அக்கினிப் பெண்களின் எழுது கோல்கள் ...!

நில் - அங்கே
நீ செல்வதெங்கே ...?
வாழ்க்கை வாழ்வதற்கே என்று
பாதை மாறிப்பயணம் செய்யும்
சோதரனே!
நில் அங்கே
நீ செல்வதெங்கே?
❐ ❐ ❐
கல்லறை செல்லுமுன்
சில்லறையாகிப் போன
உனது நாமத்தை
எங்கள் பெண்கள்
சொல்லக் கேட்டிருக்கிறேன்!
❐ ❐ ❐
நீ -
வெளியில் வேஷமிட்ட
நாகரிகமாய்
நடைபயிலுவதில்
அர்த்தம் என்ன?
மாதர்கள் உன்னைக்கண்டு
மயங்குவர் என்றா?
❐ ❐ ❐
பொன்னைக் கேட்டு
மண்ணைக் கேட்டு
ஒரு பெண்ணைக் கைபிடிக்க
தவமிருந்து .....
தலைநரைத்துப் போன பின்னே....
❐ ❐ ❐
இல்லறம் என்ற
போர்வைக்குள்
இணைந்த இஸ்லாமிய சோதரனே!
❐ ❐ ❐
அந்தப் பெண்ணைக்
கைப்பிடித்து
சமூகத்தின் முன்னே -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைக்காக -
அவளை -
வாழ்க்கைத்துணைவியாக்கிய பின்னும்!
விலை கொடுத்துப்
பெண்களையும் வாங்கி -
சுகம் கண்டு
சமூகத்தைக் கறைப்படுத்தும்
உன் சாகஸங்கள்
யாருக்கும்
புரிவதில்லை என்று
எண்ணுகின்றாயா ...?

🗐 🗐 🗐

உன் -
முகமூடி இன்னும்
சமூக அரங்கில்
பகிரங்கமாய்த்
திரைநீக்கம்
செய்யப்படவில்லை என்று
நீ -
நினைத்துக் கொண்டிருக்கலாம்!

🗐 🗐 🗐

தவறு!
நாளை வரும்
"மஹ்ஷர்" வெளியரங்கில்
நீ -
விசாரணை செய்யப்படுவதற்கு முன் -

🗐 🗐 🗐

உமது நாமம் -
சமூகத்துக்குத் தெரிவிக்கப்படயவிருக்கிறது!
எங்கள் -
அக்கினிப் பெண்களின்
எழுது கோல்கள்
மூலமாக!





## துகிலுரியும் துச்சாதனர்கள்!

பூமித்தாயின்
நிர்வாண நெளிவுகளை
நாகரிகமாய்
மறைக்கும்
பட்டாடைகள்!

❖ ❖ ❖

சீவராசிகளின்
பசிப் பிணி தீர்த்து
உயிர் காக்கும்
மருத்துவர்கள்!

❖ ❖ ❖

சூரியப் பாதகனின்
காமப்பார்வையில்
சிக்காமல்
மறைக்கும்
பச்சைக் குடைகள்!

❖ ❖ ❖

வாயுதேவனின்
அசிங்கங்களையெல்லாம்
முகம் சுளிக்காமல்
முகர்ந்து
தூய்மைப் படுத்தும்
தாதிகள்!

❖ ❖ ❖

சுவாசிக்கச்
சிரமப்படும் சீவன்களுக்கு
உயிர்கொடுக்கும்
உத்தமர்கள்!

❖ ❖ ❖

முகிற்படையின்
மழைத் துளிக் கணைகள்
நேரடியாய்
புவியன்னை மார்பில்
பாய்ந்திடாது காக்கும்
இரும்புக் கவசங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ❖ ❖

தகிக்கும் வெயிலில்
பருகக் கிடைக்கும் தண்ணீர் போல
நிழலுக்கு நிஜமாகும்
நித்திய தரிசனங்கள்





❖ ❖ ❖

உணவுக்காக,
இரக்கும் ஈனர்கள்
வெட்கப்பட வேண்டும்!
பாரி வள்ளல்கள்
உங்களிடம்
கடன் வாங்க வேண்டும்!
ஏனெனில்
தம் தேவைக்கெனத்
தாமே தயாரித்து
சேமிக்கவும் செய்து
தானமுமளிக்கும்
தர்மவான்கள்
அல்லவா நீங்கள்?

❖ ❖ ❖

மரங்களே!
'நான்' என்று
அகந்தைக்கு
மிகவுமே
பொருத்தமானவர்கள்
நீங்கள்
யாரிடமும் எதுவும்
இரக்காததால்!

❖ ❖ ❖

வருணபகவான்
உங்களால் தான்
வரம் கொடுக்கிறான்.
வரம் பெற்றவனோ
உங்கள் குலம் குலைக்க
சதி செய்கிறான்.
பல்குத்த உதவுவதும் நீங்கள்
படுக்கைக்கு உதவுவதும் நீங்கள்!
உங்கள் உடலில்
மட்டும்
சிவப்புக் குருதியிருந்தால்
இந்த உலகெலாம்
ஓடும் நீர் முழுதும்
தண்ணீராகவல்ல.
செந்நீராய்த் தான்
இருக்கும்.



❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலை ஏன்???



நிறைந்து வழியும்
நீள்விழிக் குளங்களில் - உன்
கருவிழிப் படகுகள்
நிலை தளம்பவில்லையே!
அவை
ஏக்கத் துறைமுகத்தில்
நங்கூரமிடப்பட்டனவோ?
வானில் விழுந்த கோடுகளாய்
உன் இதய தாபத்தை -
மிகைக்கச் செய்தனவோ?
பாம்பின் கால் பாம்பறியும்
பெண்ணே -
உன் மன அர்த்தங்கள்
எனக்குப் புரிகின்றன.
அரங்கத்தில் ஏறிவிட்டாய்
இனி நீ -
ஆடித்தானாக வேண்டும்.

■



## எட்டிப்பாருங்கள்

நண்பா!
அந்தச் சரித்திரநாயகர்கள்
உன் பின்னால்
சிரித்துக் கொட்டுகின்றார்கள்.
அவர்கள் பூசிய
தியாகமுலாமை
உண்மை என்று நம்பியதற்காக.

பெருநாளைக்கு முன்
தீர்த்து விடவா
இத்தனை பட்டாசுகளையும்
தீர்த்துக் கட்டினாய்?
"தீமைகள்
நல் வழிப்பட்டதென்று"
எமது-
தியாகவரலாற்றின்
தீர்வுகள்
இருண்ட சாம்ராஜ்யங்கள்!
நமது
சாவகாசங்கள்
புஸ்வாணங்களும்
பட்டாசுக்களுந்தான்!
அதனாற்தான்
நமது பட்டுக்களின் மேல்
இச்சை தீர்க்கிறான்
பக்கத்து வீட்டான்.



எட்டிப்பாருங்கள்
எத்தனை யுவதிகள்
இழக்கக் கூடாததை, இழந்தவர்களாய்!

பொத்திப் பொத்தி வளர்த்தானே
இஸ்லாமிய சகோதரன் - இன்று
புட்டுக் கொண்டு வருவது
வீரத்தின் விரல்கள் மட்டுமல்ல
கதுப்புகளை நனைக்கும் கண்ணீருந்தான்.
கட்டுப் போட்டானே
அச்சம், மடம், நாணம், என்று
கசக்கிப் போட்டானே - கயவன்
இச்சை கொண்ட மிருகம் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைதி காக்க அத்தாட்சிப்பத்திரங்கள் அதற்கு
ஏந்தி வந்தான் துப்பாக்கியந்திரங்கள் - இந்த
தப்பான தாத்பரியங்களுக்கு
தார்மீகத்தில்
தியாகத் தீட்சைகள்.

அமைதி ஒப்பந்தங்கள் - இவை
அரசியல் தீப்பந்தங்கள் - அதில்
நாம் இழந்தது உரிமைகளல்ல
இராஜ தந்திரங்கள்,
இராணுவ ரகசியங்கள்.

தட்டி எழுப்பியவனே - எம்மை
தட்டி உறங்க வைத்து விட்டுக்
குரல் வளையை அறுத்துக்
குருதி குடிக்கின்றான்.
காந்தியத்தின் தாயகமே
கோர வெறியர்களை - நீயும்
கொள்கைக் கொத்தர்களென்று
கௌரவிக்கின்றாயே!

ஓ...
"கொல்" கை கொத்தர்கள்
சேர்ந்து துகிலுரியும்
கிருஸ்ண பரமாத்மாக்கள்.

★



# மங்கையராகப் பிறப்பதற்கே...



பலம்வாய்ந்தவர்கள் யார்?
ஆண்களா பெண்களா?
விவாதம் இல்லை
ஆண்களே தான்.

சமூகத்தில்
சமுதாயக் கண்ணோட்டத்தில்
சரீர வாகுவில்
எல்லாமே பலசாலிகள்
ஆண்கள் தான்!
விடுவோம் விவாதத்தை.

பலசாலித் தனத்தை
அதிகமதிகமாய்ச்
செலவிடுபவர் யார்?
ஆண்களா பெண்களா?

பெண்ணியம்
பேசப்படப் போகிறது என்றாலே
உதறலெடுக்கும் சிலருக்கு!
இவர்களெல்லாம்
மனங்களின் அகலத்தை அறியாமல்
ஆழத்தை அறிவதற்காய்
ஆபத்தில் விழுந்தவர்கள்!

தாய்மை - பெண்மையின் துலாக்கோல்
குறை - யார் மீதிருப்பினும்
'மலடி' என்ற பட்டத்தின்
நூலை அறுத்துவிடும் கத்தரிக்கோல்

தாயின்
சுயநலங்களைக் கூட
சுரண்டியெடுக்கிறது - அந்த
உதிரம் சுமந்த உதிரக் கட்டி.
உலகை எட்டிப்பார்க்க முன்பே,
எட்டி உதைக்கும் மழலையை
வெளிக் கொணர...
மாது படும் துன்பம்
பிரசவித்த பின் பரவசப்படும்
பலருக்குத் தெரிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திர மயமாகி
மிலேனிய யுகமாகியும்
இதற்கு மட்டும்
மனித வலு - மாதுவின் பலம்!

மழலை கிடைத்து விட்டது.
கொஞ்சுதற்கும் கெஞ்சுதற்கும்
'நான்', நீ
ஆண் மழலையா?
கேட்கவே வேண்டாம்.

நாளை தோள் சுமக்க வந்த யுகபுத்திரன்.
நல்ல சக்தி வேண்டாமா?
உதிரமே ஊட்டமாக
தாயின் சமர்ப்பணம்.
நானாவித சத்துக்கள்
அவன் உயிர்ப்பூவைச் சுமக்கும்.

சாண்பிள்ளை - ஆனாலும்
ஆண்பிள்ளை அல்லவா?
நன்றாகச் சாப்பிடனும்!
பாட்டிமாரின் பாசப் புராணம்
கிழக்கை வெளுக்க வைக்கும்.
பெட்டைப் பிள்ளையா? - எதற்கு
முட்டைக் கோப்பி?
வீட்டிற் கிடந்து வேலையைப் பார்!
ஆண் பிள்ளை -
அவனுக்கே அதிக பலம் வேண்டும்.

அண்ணாவுக்குத் தங்கையா?
இருக்கவே இருக்கிறாள்
குட்டி குட்டி வேலை வாங்க.
தமக்கையா?
தம்பி களைந்து போடுகின்ற
துணிமணிகளைத்
துவைத்து அழுத்தும்
துடிப்பான இயந்திரம்.

வாய்க்குச் சுவையாக
வேளைக்குச் சமைத்துப் போட
ஆயாவாய் - தாய்!
அடுக்களைக்குள்ளே
அடுப்பூதி ஊதி
அவள் வயிற்றறைக்குள்
உயிர்க்காற்று சுருங்கிப் போகும்.





பள்ளிக்குப் பிள்ளையை அனுப்பி
படிப்பித்தாக வேண்டும்.
நாளை அவன் வீட்டின்
ராஜாவாக வேண்டும்.

பள்ளி கொள்ளும் நேரத்தைப்
பாதியாய்க் குறைத்து விட்டு
பனியுதிரும் காலையிலே
சாதம் சமைத்தாக வேண்டும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப் பொதி கொடுத்த பின்னே
காலைப்பரபரப்பில்
பிள்ளையையும் பதியையும்
அனுப்பி வழி பார்க்க வேண்டும்!

புத்திரி வளர்ந்து விட்டாள்.
மாற்றான் தோட்டத்துப் பூவுக்கு
நீர் வார்க்கும் மனப்போக்கு!
அடுப்பூதத் தெரிந்தால் தான்
அத்தையின் மோதிரக் குட்டு!
அடுக்கடுக்கான வேலைகள்
அத்தனையும் தெரிந்தாகனும்!
யௌவன வயதிலும்
சுழலும் பம்பரமாய்,
சுந்தர வதனத்தாள்!



வதுவைக்குப் பின்னால்
பதியின் பணிவிடைக்கு
தயார் நிலையில் தாரம்...!
தன்னையிழந்து
தன் சுகத்தை இழந்து...
மறந்து விட முடியுமென்றால்
விடும் மூச்சு கூட
இவளுக்கு இரண்டாம் பட்சமே.

நீராவியாகி, முகிலாகி
மழையாகி ...
மீண்டும் நீராவியாகி
பிரதியுபகாரம் கருதாத
நீர் வட்டம் போல
பெண்ணிவளின் வாழ்க்கை வட்டம்!
தனக்கென்று எதுவுமில்லாமல்
தன்னையே உருக்கிக் கொள்ளும்
மெழுகுவர்த்தியாய்!



அன்னை ஓர் ஆலயமாம்
யார் சொன்னது இல்லையென்று?
ஆமாம்!
அன்னை ஒரு
காரியாலயம்!

✼



## கூவி அழைக்கும் காகம்!

அம்மா பிறந்த மண்ணில்
யுத்தக் கறையான்
அரிக்க ....

◘ ◘ ◘

அப்பா பிறந்த மண்ணில்
கண்ணி வெடி
கால்களைப் பறிக்க ...

◘ ◘ ◘

மனதில்
அலை அலையாய்
வேதனைகள் தொடரும் ....!

◘ ◘ ◘

மனமெல்லாம்
துயரமழை
பொழியும்!

◘ ◘ ◘

மனிதாபிமானப் புறா
அந்தரங்கத்தில் -
ஊஞ்சலாடுகின்றது!

◘ ◘ ◘

இங்கே நான் பிறந்த மண்ணில்
பாதைகளைச் சுற்றி
கம்பி ரோல் வேலிகள்!
வீடுகளைச் சுற்றி
சப்பாத்துக் கால்களின் நடமாட்டங்கள்!

◘ ◘ ◘

உயிரை உறிஞ்சியெடுக்கும்
துப்பாக்கி இயந்திரங்கள்!

◘ ◘ ◘

ஆமாம் -
பயங்கர சப்தங்களினால்
அப்பாவி மனிதப் பூக்கள்
கசங்கிப் போகும்!

◘ ◘ ◘





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசவுள்ளங்களை தேடும்
இதயங்கள் -
உடன் பிறப்புக்களை
தரிசிக்க -

உடமைகளைப் பறிகொடுத்து
கால்கள் -
அகதிமுகாம்களை நோக்கும்!

தாக்குதலுக்கு பலியாகிப்போன
இருப்பிடங்கள் -
பாலைவனப்பூமியாய்
காட்சியளிக்கும்!

ஆனால் -
உயிருக்கு உத்தரவாதமற்ற
இந்த மனித உடல்
பாதையோரத்தில் -
பிணமாய் கிடக்கும்!

அப்பாவி மனிதன் சடலத்தை
ருசிக்க,
சகபாடிகளை -
கூவி அழைக்கும்
காகம்!





## இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை

துய்யாளே.. - உன்
தூய அன்பினில் நான்
துவண்டு தான் போனேன்.
மகுடிக்கு மயங்கும் பாம்பாய்
எங்கே..
நீ வாசித்த மகுடியை
எனக்கும் காட்டு!

கண்ணாடியல்லவா நீ ?
உன் முகத்தில் நான்
முகம் பார்த்துக் கொண்டதால்
என்
அலங்கோலங்களையெல்லாம்
சரிக்கட்டிக் கொள்கிறேன்.

இராக்காலக் கனவுகளில் - உன்
நித்திய தரிசனம்
அடி சகி-
உன் நினைவுகள் என்னில் வளர்பிறை
உன் நினைவால் நானுருகி
உடல் மெலிவது
இனி உறுதி.

என் சொந்தக் கவலைகளையெல்லாம்
விழுங்கி ஏப்பமிட்டாய்
இனி எனக்கு,
உந்தன் கவலைகள் மட்டும் தான்!

பட்டுப் போனதாய்
நான் நினைத்த
என் வாழ்வுச் சோலையில்
பட்டுவண்ண ரோஜாவாய் நீ..!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்தவைகள் போக
இன்னும்
சாதிக்க வேண்டியவைகளை
எனக்கு
நிதர்சனமாக்கியவளே
நீ தான்!

உன் நினைவுகளையே
என் சுவாச மூச்சுகளாய்
உள்ளெடுத்துக் கொண்டிருக்கிறேன்.
உன் முகம் பார்த்ததில்
சுரந்த
நினைவுப் பாலால்
என் பசியே
அடங்கிப் போனது.



உன் மனதின் வாசம்
நான் நுகர்ந்ததில்
நெஞ்சில் நிலைத்தது நேசம்
சகீ..
இரட்டைத் தாயின்
ஒற்றைக் குழந்தையாய்
நீயும், நானும்!

கடிகாரமுட்கள்
அசையும் கணப் பொழுதெல்லாம்
உன் நினைவுகள்
என் நெஞ்சக் கடிகாரத்தின்
நினைவு முட்களை
அசைக்கின்றன.
செக்கன்கள் நிமிடங்களாகி
மணித்தியாலங்கள் யுகங்களாகும்
வேளை -உன்
நினைவுத்துளிகள்
திக்கர் நாடாவைப்போல
தடங்களைப் பதிக்கின்றன.







# உறவுகள்

பணப் போர்வை
எம் உடலை மூடியிருப்பின்
பாசங்கள் -
அதிகரிக்கும்!

பணம் -
இன்றேல்
மனிதப் பிணமாய்
உடல் சோரும்!
உறவுகள் -
உள்ளத்தை விட்டுப் போகும்!

உயர்ந்த நிலையிலே
உவந்து புகழ் பாடும்
உறவுகள் - தாழ்வாய்
வறுமை வீட்டிற்குள்
வாழும் பொழுதுகளில்
தூரத்தே போய் நின்று
துயரப் படுத்தும்!



உள்ளத்து விழியைக்
குருடாக்கிப் பார்க்கும்
உறவுகளின்
“பார்வைகள்”
வெறும் போலிகளே!

வாழ்க்கைப் பாதையை
வஞ்சனை முட்களால்
மூடிவிட்ட இந்த -
கரிய இரவுகளின்
ஆடம்பர போர்வைகள்!

...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதி நிலவு!

கடற்கரையிலே மணற் பரப்பில்
அந்தி நிலவின் நிழலொழுகும்!
அலைகளின் தடவலூடே
மேகத்தின் அழகை ரசித்திருப்பேன்.

தாக்கப்பட்ட நிலையிலும்
என் மனம் சமாதானம் தேடும்.
சுதந்திரம் குளிக்கும்
ஊரெல்லைகளில் திரியும் தென்றல் நான்!

இதயத்தின் நிம்மதி சுவாசத்தை
இந்த மண்ணில் இழந்தேன்.

இளமைகளின் அழகை...,
பறவைகளின் ஒலியை...,
இயற்கையின் இடுப்பை...,
தனிமையின் ஸ்பரிசத்தை....
இதயத்தின் காதல் உணர்வினை...
புதைத்து எழும் நாகரிகக்குழைவு.

சந்திரனின் ஒளியும் மேகத்தின் மறைவில்
மின்னலின் புற நீக்கல்!

மனிதனின் மாற்றமும்
சூழலின் மறுதலிப்பும்...!



நிம்மதிப் பெருமூச்சில்
சுவாசிப்போர் எவருமிலர்
தலை நிமிர்ந்து
வானைப் பர்க்கின்றேன்.
பாதியாய் ... நிலவு
துயர் வடித்து
என் வதனம் பார்த்தழும்!



# இது ஒரு தொடர்கதை

துர்நாற்ற வாசம்
தென்றலில் கலந்திருக்கும்.
பொறாமைத் தீ
மனதினில் படர்ந்திருக்கும்.

X X X

உஷ்ண மூச்சுக்கள்
சுவாசத்திலிருக்கும் - சில
சூடான வார்த்தைகளும்
வாயிலிருக்கும்.

X X X

மனித உடல்கள்
நினைவில் இருக்கும் - சில
உயிர் இழப்புக்கள்
நெஞ்சில் நிழலாடும்.

X X X

வதந்தி நோய்கள்
தொற்றிக் கொள்ளும்
கட்டுக் கதைகள்
பரிமாறிக் கொள்ளும்.

X X X

சின்னக் குடிசையொன்று
காட்சியளிக்கும் - அதன்
சுற்றுப் புறமெல்லாம்
கம்பி வேலி.

X X X

நிம்மதியில்லா வாழ்வினை
நினைத்து நினைத்து
அவன் மூச்சுத் திணறும்.

X X X



ஆறுதல் வார்த்தை
நேரில் பரிமாற முடியாமல்
தனிமை வாழ்வில்
அவள் மனம் துடிக்கும்!

X X X

மின்னலும் இடியுமாய்
இதயம் -
மாரி காலத்தை
தேடிக் கொள்ளும்!
...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழி போன பின்



எத்தனையோ யுகங்களாய்
உன் -
அன்புமடலைத்
தேடினேன்!
கிடைக்கவில்லை!
நேற்று -
நீ போட்டாயாம்
அம்மா...
வாசித்துக்காட்டினாள்!
நேற்றுத் தான்
விபத்தொன்றில்
நான் -
கண்களை
இழந்து விட்டேன்!

....



## தடம் மாறிப் போன.....



கனவுகளை ஜீரணிக்கும்
இதயம்....

கால நகர்வுகள்
கனவுகளை சுமந்தவாறே
பயணிக்கும்....

எதிர் கால
சுதந்திரம் தேடி
ஏங்கித்தவிக்கும் இதயமும்
இடையில் ....
பாதையை மறிக்கும்
பாதகச் சூழ் நிலைகளும்
இடமாறித் -
தடம்மாறிப் போன
உறவுச் சுவாசங்கள்
தள்ளியே நிற்க
தளிருடல் வேகும்...

ஒரு நேர யாசகத்தில்
ஓராயிரம் கற்பனைகள்
சுமந்த வாழ்வு -
காற்றாடியாய்....
அந்தரத்தில் ஆடும்!

விரக்தி வேலிக்குள்
முகத்தை மறைக்கும்
உணர்வுகளின் தாக்கம்
தாகங்களைக் கக்கும்...

பெரு மூச்சும்
அனல் மூச்சுகளாய் மாற
அகம் கொப்பளிக்கும்
கேள்வித் தீயில்
வாழ்வு -
வரட்சியாகி வெடிக்கும்....!



....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனச் சுமை!

மனச்செடி
கவலை இலைகளை
உதிர்க்க...
உடல் மரத்தை
வேதனைக் கறையான்
அரிக்கும்!

சீதனத் தீ
கன்னி மேனியில்
தாவ ...
உடல் உறுப்புக்கள்
வெந்து கருகி
சாம்பலாகும்!

இதயத் தரையில்
முதுமைக் காட்சிகள்
நிழலாட ....
மனமோ
விரக்திப் பாதையில்
நடைபயிலும்!





# சிந்தனை வட்டம்



## நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வட்டத்தின்

## 100 வது வெளியீடு

# இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை

இக் கவிதைத்தொகுதியில் இடம் பெற்றுள்ள கவிதைகளைப் பிரசுரித்த பின்வரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு எமது நன்றிகள்.

★ தினகரன்.
★ தினகரன் வாரமஞ்சரி
★ மித்திரன் வாரமலர்.
★ வீரகேசரி.
★ புதுயுகம்.
★ ப்ரிய நிலா
★ தூரிகை.
★ தினக்கதிர்.
★ பூ.
★ புதுக்குரல்.
★ தினக்குரல்.
★ தினமுரசு
★ நவமணி.
★ பார்வை
★ சமரசம். (இந்தியா)
★ தூண்டில் (அவுஸ்திரேலியா)
★ அழகு.
★ இள நிலா.
★ கண்ணாடி.
★ மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை



சிந்தனை வட்டம்

கலைமகள் ஹிதாயா ரிஸ்வி

மஸீதா புன்னியாமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org